# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2494 - 2026 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2026.06.19

2494 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 5 |


**கவனிக்க.**- சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2026.04.24 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1885 - B 82802- 403 (2026/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழிமூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக்காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உள்ளடங்கலாக க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

06. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

07. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

08. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, மே 29.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மாத்தறை | மாத்தறை | மாத்தறை நகர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

06-228

---

### கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

### இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சிரேஷ்ட நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் விசேட தரத்தில் உள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சிரேஷ்ட நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் விசேட தரத்தில் உள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகும்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** : இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்பட்டு, அதற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

| *புள்ளிகளை வழங்குவதற்குரிய முக்கிய துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம் | 40 |
| தகவல் தொழில்நுட்பம் / கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள் | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 100 |

குறிப்பு : ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   I. **கல்வித் தகைமைகள் :**

   கணக்கியல், கணக்காய்வு, வர்த்தகவியல், பொது நிதி, பொருளாதாரம், முகாமைத்துவம், சட்டம், பொறியியல், அல்லது தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட

பல்கலைக்கழகமொன்றில்/ பட்டங்களை வழங்கும் நிறுவனமொன்றில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

II. **தொழிற் தகைமைகள் :**

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் சங்கத்தின் உறுப்புரிமையைக் கொண்டிருத்தல்.

III. **அனுபவம் :**

வெளியக விண்ணப்பதாரியாயின், உரிய தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிய துறையில் நிறைவேற்று தரத்தில் 12 வருட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

அல்லது,

இலங்கை அரச கணக்காய்வுச் சேவையிலுள்ள விண்ணப்பதாரியாயின், நிறைவேற்றுத் தரத்தில் உள்ள பதவியொன்றில் 12 வருட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(இது தொடர்பாக சேவைக்காலத்தைக் கருத்திற்கொள்கையில் முழுச் சம்பளத்துடனானதும், அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற கல்வி விடுமுறைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

IV. **உடல் ரீதியான தகுதி :**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்:**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது** :

2026.07.20 ஆம் திகதியன்று வயது 45 ஐ மிகாதவராக இருத்தல் வேண்டும்;. அதன்படி, 1981.07.20 ஆம் திகதியிலிருந்து (அத்திகதியையும் உள்ளடக்கி) பிறந்தவர்கள் மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

3. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங் கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும். மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** : 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கு அமைவாக, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 165,700.00 - 12 x 4,850 - ரூ.223,900.00 ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 04 - 2025 ஆவதுடன் 2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| I. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 18 | |
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், பொது நிதி, கணக்கியல், அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வணிக நிர்வாகம், அரச முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்றிட்ட முகாமைத்துவம் ஆகியனவே உரிய துறைகளாகும்) | 25 | |
| II. | **மேலதிக தொழிற் தகைமை :** (அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | | 20 |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை/ பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (Fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| III. | | **தகவல் தொழில்நுட்பம் / கணனி இயலுமை தொடர்பான தகைமை :** பல்கலைக்கழகமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணனிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 | 05 |

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு (அடிப்படைத்தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 12 ஆண்டு சேவை அனுபவத்திற்கு மேலதிகமாக) ஆண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை**:

(i) விண்ணப்பங்களை "**செயலாளர், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, இல. 415, கோட்டே வீதி, இராஜகிரிய**", எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2026.07.20 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் "**நேரடி முறையில் பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்கான ஆட்சேர்ப்பு**" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரச பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படா. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான கடவுச்சீட்டு - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளி நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச் சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்ப தாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரச சேவை/மாகாண அரச சேவை/ அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணி யாற்றும் அலுவலர்கள்; தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு நகல் பிரதி வீதம் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

(அ) தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப் பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(குறிப்பு: ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.)

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றி தழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமாக தொழிற் தகைமைகளுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றி தழ்களின் பிரதிகள்.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற் துறை அனுபவம் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள்

(ஊ) தகவல்தொழில்நுட்பம்மற்றும்கணினிஇயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரச சேவை / மாகாண அரச சேவை/ சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந் தாது.)

**குறிப்பு** - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ் களின் பிரதிகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப்படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடை முறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்ப தற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டி.கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 415, கோட்டே வீதி, இராஜகிரிய,
2026, யூன் மாதம் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சிரேஷ்ட நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் விசேட தரத்தில் உள்ள பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

(அலுவலக பாவனைக்கு மட்டும்.)

(விண்ணப்பிக்கும் மொழி மூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ……………………………………………………………………………………
(சிங்களத்தில் /தமிழில்)
(ii) முழுப்பெயர் : ……………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ……………………………………………………………………………………........
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

02. (i) நிரந்தர முகவரி :…………………………………………………………………………………………………

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான

கையடக்க

03. (i) பால் நிலை: ……………………………………………………………………………………………….
(ii) விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி: ……………………………………………………………

04. (i) பிறந்த திகதி :
ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2026.07.20 திகதிக்கு வயது:
வருடங்கள்:……….. மாதங்கள்: ………….. நாட்கள்: ………..

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலமா அல்லது பதிவின் மூலமா பெற்றுள்ளீர்கள் என்பது? ………
…………………………………………………………………………………………………………………………

(iv) இனம் :………………………………….

(v) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள்:

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..

(ii) திணைக்களம் / நிறுவனம் : ……………………..

(iii) நியமனத் திகதி : …………………

(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ………………………………

(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : …………………………

(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : …………………………

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

(ii) ……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றுவதற்கும் நான் உடன்படுவதை அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ………………………..

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. ஐ நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், 2026 …………… மாதம் …….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

………………………………..……………..
கையொப்பத்தினை சான்றுபடுத்துபவரின் கையொப்பம்

திகதி : …………………………………………..…………

இடம் : ……………………………….…………………….

(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் /நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், …………….................. மாதம் ………. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

………………….……………………….………………………………
அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : …………………………

06-250

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
## வணிகக் கப்பற்றுறைச் செயலகம்

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தில் வெற்றிடம் நிலவுகின்ற பின்வரும் பதவிகளுக்காக உரிய தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| 01. உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (கப்பல் தளம்) | 01 |
| 02. உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) | 02 |
| 03. உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி | 01 |

**துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) மற்றும் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (கப்பல் தளம்) பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2026**

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தில் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) மற்றும் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (கப்பல் தளம்) ஆகிய பதவிகளுக்கு இந்த அறிவித்தலின் 02 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) | 02 |
| உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (கப்பல் தளம்) | 01 |

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி: 2026, யூலை 20.

**(01) ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை:**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே வணிக கப்பற்றுறை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள், வெற்றிடம் நிலவும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கும் நடைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(02) தேவையான தகைமைகள்:**

(i) கல்வித் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்:

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | *அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|
| உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) | கடல்சார் கண்காணிப்புப் பொறுப்பு பொறியியல் அலுவலர் (வரையறுக்கப்படாத) சான்றிதழை பெற்றிருத்தல் | 300 கிலோவொட் இயலளவைக் கொண்ட கடற் பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் கண்காணிப்புப் பொறுப்பு பொறியியல் அலுவலராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவத்தினைக் கொண்டிருத்தல். |

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | *அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|
| உதவி அரசாங்க கப்பல் அளவையிய லாளர் (கப்பல் தளம்) | நீர்வழி கண்காணிப்புப் பொறுப்பு அலுவலர் (வரையறுக்கப்படாத) சான்றி தழை பெற்றிருத்தல் | கடல் பிரயாணத்தில் ஈடுபடும் மொத்தம் 3000 இலும் அதிக தொன் எடையைக் கொண்ட வணிகக் கப்பலில், கண்காணிப்புக் குழுவிற்குப் பொறுப்பான கப்பல் தள அதிகாரியாகக் குறைந்தபட்சம் 02 வருட அனுபவம். |

(ii) ***உடற் தகைமைகள்*** :

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப் பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியிலான ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) ***வயதெல்லை*** :

21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) ***ஏனைய தகைமைகள்*** :

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(03) **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

I. இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

II. விண்ணப்பிக்கும் மொழிமூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்

(04) **சம்பள அளவுத் திட்டம்** : MN 5- 2025 - 58,660 - 10 X 1,190-11 X 1,360-15 X 1,670 - ரூபா 110,570

(05) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br><br>i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து / நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல்சார் பொறியியல் விஞ்ஞானம், பொறியியல் விஞ்ஞானம், கப்பல் அல்லது கடல்சார் அறிவியல் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டம்.<br><br>ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து / நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல்சார் பொறியியல் விஞ்ஞானம், பொறியியல் விஞ்ஞானம், கப்பல் அல்லது கடல்சார் அறிவியல் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா.<br><br>iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து / நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல்சார் பொறியியல் விஞ்ஞானம், பொறியியல் விஞ்ஞானம், கப்பல் அல்லது கடல்சார் அறிவியல் தொடர்பான பட்டம்.<br><br>(ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | <br><br>30<br><br>20<br><br>15 | 30 |
| 02 | **தொழிற் தகைமைகள் :**<br><br>சமுத்திரம்சார் கண்காணிப்பு, சமுத்திர சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள், சமுத்திரம்சார் சோதனைகள் மற்றும் ஆய்வுகள் அல்லது கப்பற்றுறை அலுவல்கள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறைகளுடன் தொடர்புடையதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட :<br><br>i. ஆறு (06) மாத காலம் அல்லது அதற்குக் கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br>ii. மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்குக் குறைவான முழுநேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br>iii. மூன்று (03) மாத காலத்திற்குக் குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்) | <br><br>25<br><br>15<br><br>05 | 25 |
| 03 | **மேலதிக அனுபவம் :**<br><br>ஆட்சேர்ப்புக்கான தகைமைகளின் கீழ் குறிப்பிட்டுள்ள ஆகக்குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலத்திற்காக<br><br>- ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம், ஆகக் கூடுதலாக 20 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்கு கூடுதலான மற்றும் 01 வருடத்திற்குக் குறைவான - 02 புள்ளிகள் | | 20 |
| 04 | **ஆங்கில மொழித் திறமை :**<br><br>ஆங்கில மொழிக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட<br>- உயர் டிப்ளோமா பாடநெறிக்காக<br>- டிப்ளோமா பாடநெறிக்காக<br>- சான்றிதழ் பாடநெறிக்காக | <br><br>10<br>07<br>04 | 10 |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 05 | **கணினி அறிவு** :<br><br>கடல்சார் பொறியியல், கப்பலோட்டல், கப்பற்றுறை அறிவியல், கடல்சார் அறிவியல் அல்லது கணினி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்பம் / கணினி முறைமைகள்/ கணினிப் பயன்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட -<br>i. ஆறு (06) மாத காலம் அல்லது அதற்குக் கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br>ii. மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்குக் குறைவான முழுநேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br>iii. மூன்று (03) மாத காத்திற்குக் குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்) | <br><br><br><br><br>10<br><br>05<br><br><br>03 | 10 |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைக்காக | | 05 |
| | **மொத்தம்** | | **100** |

(06) **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

(i) சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்:-

அ. ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

ஆ. செல்லபடியாகும் கடவுச்சீட்டு.

(07) **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்களை 2026, யூலை 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகம்,
வணிகக் கப்பற்றுறை செயலகம்,
இல. 79,
தொழில்நுட்ப சந்தி,
மருதானை வீதி,
கொழும்பு 10.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவையுடைய தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில்; தயாரித்து தமது கையெழுத்துக்களில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'உதவி அரச கப்பல் அளவையியலாளர் பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரால்/ சமாதான நீதவான் ஒருவரால் / சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால் / சட்டத்தரணி ஒருவரால் /பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் / முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் / அல்லது 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 82,150.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றுகின்ற திணைக்களத்தின் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்படமாட்டாது

(08) தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரியவரின் தங்களது பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அதற்குரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(09) வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

……………………………………………

வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகம்

வணிகக் கப்பற்றுறை செயலகம்,
இல. 79,
தொழில்நுட்ப சந்தி,
மருதானை வீதி,
கொழும்பு 10,
2026, யூன் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறை செயலகத்தில் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (பொறியியல்) மற்றும் உதவி அரசாங்க கப்பல் அளவையியலாளர் (கப்பல் தளம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

பெட்டியினுள் உரிய மொழி மூலத்திற்கான இலக்கத்தினை எழுதவும் ☐

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(சிங்களம்-1/தமிழ்-2/ஆங்கிலம்-3)

**குறிப்பு**: விண்ணப்பப்படிவத்தின் மொழிமூலம் மாற்றப்படமுடியாது.

---

01. விண்ணப்பதாரியின் பெயர்:
    - i முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : …………………………………………………………......
      (உ.ம் - GUNAWARDHANA. H. M. S. K. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்))
    - ii முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி):…………………………………………………………………………………..
      (ஆங்கில பெரிய எழுத்துக்களில்))
    - iii முழுப் பெயர்: ……………………………………………………………………………………...........................
      (சிங்களத்தில்/தமிழில்)

02. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:
    - i அலுவலக முகவரி: ………………………………………………………………………………………………………..
      தொலைபேசி இலக்கம்: ……………………………………………………………………………………………..
    - ii நிரந்தர முகவரி: ………………………………………………………………………………………………………
      தொலைபேசி இலக்கம்: ……………………………………………………………………………………………..
      கையடக்கத் தொலைபேசி இலக்கம்: …………………………………………………………………………….

03. பிறந்த திகதி:
    வருடங்கள்:…………………… மாதம்:………………. திகதி:………………………………

04. 2024 இல் (விண்ணப்ப முடிவுத் திகதியில்) வயது:………………………………………..
    ஆண்டு:…………………… மாதங்கள்:………………. நாட்கள்:………………………………

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: …………………………………………………..

06. பால்: ………………………………………….

07. விவாக நிலை:……………………………….

08. கல்வித் தகைமை :

| *தகைமை* | *தகமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாட விதானம்* | *தரம்* | *நிறுவனத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. தொழிற் தகைமைகள் -

| *தகைமை* | *தகைமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாடப் பிரிவு* | *தரம்* | *நிறுவகத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் (வதுப்பு 1 சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர்)
அ. பெருநிறுவன(கார்பரேட்) அனுபவம் :

| *நிறுவகம்* | *பதவி* | *பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக* | *சேவைக் காலம்* | *குறிப்புகள்* |
|---|---|---|---|---|
| | | | | |

ஆ. கடல்சார் தொழிற்றுறை அனுபவம்

| *கப்பலின் பெயர்* | *கப்பலின் கொள்ளளவு* | *தரம்* | *கடலில் சேவை (வகுப்பு 1 சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர்)* | | *குறிப்புகள்* |
|---|---|---|---|---|---|
| | | | *மாதங்கள்* | *நாட்கள்* | |
| | | | | | |
| | | | | | |

11. துறை ரீதியான பங்களிப்புக்கள் -
(வெளியீடுகள் மற்றும் புத்தாக்கங்கள்)

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி
i பட்டம் ……………………………………………………
ii டிப்ளோமா …………………………………………………..
iii சான்றிதழ் பாடநெறி ………………………………………

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ………………………………

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவை யெனவும் அனைத்துப் பகுதிகளும் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்றவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது பரீட்சார்த்தத்தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இத்தவறு தெரியவந்தால் பணிநீக்கத்திற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

……………………… ……………………………
திகதி கையொப்பம்

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ………………………. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் …………………. ஆந் திகதி என் முன்னிலையில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் -
பதவி-
முகவரி -
திகதி –

15. திணைக்களத் தலைவரின் சான்றிதழ்
(அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி …………………………… தற்போது ………………… பதவியில் கடமையாற்றுகிறாரெனவும் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையான தெனவும், அவருடைய வேலை மற்றும் வரவு திருப்திகரமானதெனவும் அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லையெனவும் உறுதிப்படுத்துகிறேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

……………………. …………………………………
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலட்சிணை இடவும்)

06 - 218/1

**இலங்கை நிரந்தர விமானப்படை**

**பயிலிளவல் ஆண் / பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்**

1. இலங்கை நிரந்தர விமானப்படையில் கீழ் வரும் பிரிவுகளில் பயிலிலவர் ஆண் / பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அ. பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்/பெண்)
ஆ. விமானம் மற்றும் பொது பொறியியல் பிரிவு (விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்) (ஆண்/பெண்)
இ. விமான பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)
ஈ. ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்)
உ. உபகரணப் பிரிவு (ஆண்)
ஊ. நிர்வாகப் பிரிவு (ஆண்/பெண்)

2. அதற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. **விஷேட தகைமை** : BSc (Aviation Studies), (ஜெனரல் சேர் ஜோன் கொத்தல்லாவல பல்கலைக்கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான குறைந்த பட்ச தகைமை, மேலும் பட்டப்படிப்பு திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க.பொ.த (உ.த) பரீட்சையில் பின் பல்கலைக்கழகழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனரா என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்;.

அ. **பொதுக்கடமை விமான ஓட்டுனர் / வான் வழி நடத்துனர் பிரிவு(வான் வழி கட்டுப்பாடு)(ஆண்/பெண்)- நிரந்தர**

(1) குறைந்த பட்சம் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக / உயிரியல் பிரிவில் (பௌதீக விஞ்ஞானம் ஒரு கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் .

ஆ. **விமான பொது பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)- நிரந்தர**

(1) குறைந்த பட்சம் க.பொ.த (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல்; கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் இரண்டு திறமைச்சித்தி உட்பட மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் .

இ. **உபகரணப் பிரிவு (ஆண்)- நிரந்தர**

(1) குறைந்த பட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் / வர்தக / தொழில்நுட்ப / கலை பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் .(மேலும் பொலிஸ் பிரிவில் 5' 8" உயரம் இருக்குமாயின் ஆட்சேர்த்தலில் முன்னுரிமை வழங்கப்படும்).

ஈ. **ரெஜிமன்ட் பிரிவு / நிர்வாகப் பிரிவு (ஆண்/பெண்)- நிரந்தர**

(1) குறைந்த பட்சம் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்களாக 06 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச்சித்திக்காக பெறப்படும் புள்ளிகளுக்கு சாமனான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளுக்கு வழங்கப்படும் பெறுபேறு பெற்றிருத்தல் வேண்டும். தமிழில் அல்லது சிங்களத்தில் (S) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் /இயற்பியல்/வணிகவியல்/ தொழில்நுட்பம்/ கலை பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4. **விஷேட குறிப்பு** : Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level பரீட்சைகளில் (சா.த.) பரீட்சையில் பெறுபேறு சான்றிதழில் பௌதீகவியல் விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இரசயாணவியல் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்களாக 06 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் திறமைச்சித்திக்காக பெறப்படும் புள்ளிகளுக்கு சாமனான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளுக்கு வழங்கப்படும் பெறுபேறு பெற்றிருத்தல் வேண்டும். சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் Pearson Edexel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சாதரண சித்தி இல்லாமல் விண்ணபிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கும் தினத்திலிருந்து 05 ஆண்டுகளுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான தேர்ச்சி தரத்தை பெற வேன்டும்.

Pearson Edexcel/ Cambridge - International Advanced Level) பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மேலே காணப்படும் துறையில் விண்ணப்பிக்கும்போது க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்கு வேறு வேறாக குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மற்றும் சித்திக்காக பெறவேண்டிய குறைந்த பட்ச புள்ளிக்கு (சமனான அல்லது மேலதிகமாக) வழங்கப்படும் பெறுபேறுகள் பெற்றிருத்தல் வேண்டும்.

5. வேறு தகைமைகள் : இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் : ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ வயது : முதலாம் குழுக்கான வயது 2026, சனவரி 01 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வருடங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
இரண்டாம் குழுக்கான வயது 2026, யூன் 01ம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வருடங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

இ. உயரம் : ஆண் சென்றிமீட்டர் 165 (5அடி 5 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும்
: பெண் சென்றிமீட்டர் 160 (5அடி 3 அங்குலத்திற்கு)குறையாதிருத்தல் வேண்டும்

ஈ. உடல் நிறை : ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26

பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி.கி.)}}{\text{உயரம் (மீ)}^2}$$

உ. மார்பு : ஆண் -32" (குறைந்தது)

ஊ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் : $CP_2$

எ. தொலை பார்வை : இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண் வில்லை பயன்படுத்தப்படாமல் )

ஏ. திருமணமாவர்/திருமணமாகாதவர் : விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் வரும் பயிற்சியின் போதும் ஆணைபெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கு திருமணம் செய்ய அனுமதிக்கப் படமாட்டார்கள்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

7. மூன்றாம் நான்காம் மற்றும் ஐந்தாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறை வானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

8. தேவையான தகைமை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனைகள்** :

அ. தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலவியலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் பிரிவைப் பொருத்து இருக்கும் . பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவிவரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

ஆ. பயிலவியல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை தளபதியினால் தீர்மானிக்கப்படவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. பயிலவியல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு பயிலவியலுக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. பயிலவியலின் பயிற்சி காலத்தின்போது பயிலவியலுக்கு வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப் பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு பயிலவியல் பயிற்சியின் போது ஆனையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலவியலின் பொருட்டு அந்தகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு பயிலவியல் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப் பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணைபெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை தளபதியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும் படியும் தேவைப் படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் (ஊ), (எ) தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 34 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 03 இலும் 05இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர்; தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெற்ற பொதுக்கடமை விமான ஓட்டுனர்க்கு விஷேட Aircrew மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். தங்களது நோய், குறைபாடுகள் போன்றவற்றை பற்றி தெரியப்படுத்தாமல் நேர்முக பரீட்சையில் எந்த சந்தர்ப்பத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர் நீக்கப்படுவார்.

ஒ. மருத்துவ பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்கள் அனைவரும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு (Officer Qualifying Test) உட்படுத்தப்படுவர். அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு பின்னர் பொதுக்கடமை விமான ஓட்டுனர்கள் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். இதில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சையிற்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு துறையிலும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சையிற்காக தங்கள் பெற்ற புள்ளிகளுக்கு அமைவாக (Stand by list) தர பட்டியியலிள் உள்ளப்படி அழைக்கப்படுவர். அணைத்து பரீட்சைகளும் தர பட்டியியலிற்கு சேர்த்து பட்டியியலிடப்படும்.

ஓ. பொதுக்கடமை விமான ஓட்டுனர்கள் விமானத்தில் செல்லும் திறமை பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இதில் சித்தி பெறாதவர்களுக்கு நேர்முக பரீட்சையில் இருந்து வெளியேறவோ அல்லது வெற்றிடங்கள் இருக்கும் வேறு கிளைகளிளோ தாங்கள் அதிகாரி தர நிர்ணய பரீட்சையில் (Officer Qualifying Test) புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை வான்படைக்கு இணைய முடியும். விமானத்தில் செல்லும் திறமை பரீட்சிக்கப்பட்டு சித்தி பெறாத விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் காலங்களில் பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவில் விண்ணப்பிக்க முடியாது.

ஔ. தர பட்டியியலில் (Stand by list) உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக இறுதி நேர்முக பரீட்சையிற்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் இலங்கை வான்படைக்கு சேவையாற்றுவது தொடர்பாக தெரிவிக்க வேண்டும். இறுதி நேர்முக பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வான்படைக்கு இணையாத அல்லது இது பற்றி தெறிவிக்காத விண்ணப்பதாரருக்கு இலங்கை வான்படையில் எதிர்வரும் காலங்களில் விண்ணப்பிக்க முடியாது.

அஅ. துர்நடத்தை அல்லது ஒழுக்காற்று கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் எந்நேரத்திலும் நேர்முகப் பரீட்சையில் இருந்து வெளியேற்றப்படுவார்கள்.

அஆ. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

அஇ. திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின் )மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்

அஈ அனைத்து அலுவலரும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஉ. அனைத்து அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

10. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்** : தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆக்கப்பெரும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுங்குமாறு தேவைப்படுத்தப்படுவர்.

11. **சம்பளமும் கொடுப்பனவுகளும்:**

அ. ஒவ்வொரு நிலைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒருங்கினைந்த ஊதியம் பின்வருமாறு. மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஒருங்கினைந்த சம்பளங்களும் குறிப்பிட்ட ஆரம்ப படியாகும்.

| *வருடம்* / *நிலை* | *DMS 05/2025 (வருடத்திற்கு)* |
|---|---|
| பயிலிளவல் | 656,040.00 |
| பைலட் ஒபிசர்( மாணவ நுழைவு) | 790,560.00 |
| பைலட் ஒபிசர் (மாணவ அல்லாத நுழைவு) | 861,960.00 |
| ப்ளையின் ஒபிசர் | 985,800.00 - (30x28,800.00) = ரூபா 1,849,800.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | 1,158,600.00 – (24x28,800.00) = ரூபா 1,849,800.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 1,273,800.00 – (22x28,800.00) = ரூபா 1,907,400.00 |
| விங் கமாண்டர் | 1,309,080.00 - (17x35,280.00) = ரூபா 1,908,840.00 |

ஆ. மருத்துவ அதிகாரிகளுக்கு பொருந்தும் ஊதியம்.

| *வருடம்* / *நிலை* | *PAC 10/2025 (வருடத்திற்கு)* |
|---|---|
| முதல் நிலை | ரூபா 1,129,800.00 – 2 x ரூபா 28,800.00 – 7 x 29040.00 – 2 x ரூபா 35,280.00 – 16 x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| நிலை II | ரூபா 1,216,440.00 – 6 x ரூபா 29040.00 - 2x ரூபா 35,280.00 – 16 x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| நிலை I | ரூபா 1,508,040.00 (15x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| விசேட நிலை | ரூபா 1,872,000.00 (12x ரூபா 58,200.00) = ரூபா 2,570,400.00 |

இ. ஏனைய கொடுப்பனவுகள்

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 17,800.00

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும். (நிரந்தர சேவை மட்டும்)

(3) கடினக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 620.00 (ஒரு நாளைக்கு ரூபா 20.00)

(4) விசேட கொடுப்பனவு யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00.

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100.00 (ஒரு நாளைக்கு ரூபா 100.00)

(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.

(7) சீருடை பேணுதல் படி- எயார் கொமாடோர் மற்றும் அதற்கு மேல் நிலைகளுக்கு ரூபா 600.00, குரூப் கப்டன் மற்றும் அதற்கு குறைந்த நிலைகளுக்கு ரூபா 525.00 வழங்கப்படும்.

(8) சேவையாளர் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 637.50

(9) உணவுக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 36,008.36 வழங்கப்படும். (ஒரு நாளைக்கு ரூபா 1,161.56)

(10) தகைமை கொடுப்பனவு - பொருந்தக்கூடிய இடங்களில் (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான அதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இருந்து ரூபா 8,500.00 வாடகைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(12) தொலைபேசி கட்டணம் விங்கமாண்டர் நிலையிலிருந்து மாதமொன்றுக்கு ரூபா 1,875.00 இருந்து ரூபா 3,750.00 வரை வழங்கப்படும்.

(13) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அதிகாரிகளுக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்)

(14) விமானப்படை முகாமிற்குள் வசிக்கும் அதிகாரிகளுக்கு மாதமொருதடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

(17) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ.போ.ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(18) நியமிக்கப்பட்ட பொதுப் பணிப் பிரிவின் விமானிகளுக்கு விமானப் படி வழங்கப்படுகிறது.

(19) விசேட பறத்தல் சம்பளம் வழங்கப்படும் மாதாந்தம் ரூபா 15.000.00 (பொதுக்கடமை விமான ஓட்டுநர் கிளையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

(20) சேவைப் படி மாதத்திற்கு ரூபா 300.00, 400.00, 500.00 ஆகும். (மருத்துவ அதிகாரிகள் மற்றும் தரவு அதிகாரிளுக்கு மட்டும், அவர்கள் முடிந்த சேவைக் காலத்தின்படி)

(21) கூடுதல் சேவைப் படிகள் மாதத்திற்கு ரூபா 1,500.00 (மருத்துவ/தரவு அதிகாரிளுக்கு மட்டும்)

(22) மாதத்திற்கு 1/20 படி- அடிப்பபடைச் சம்பளம் *1/20* 2/3, மாதத்திற்கு அதிகபட்சம் 3 நாட்கள் (மருத்துவ/தரவு அதிகாரிளுக்கு மட்டும்)

(23) மாதத்திற்கு கூடுதல் பணிப் படிகள்-அதிகபட்சம் 120 மணிநேரம் (மருத்துவ /பல் மருத்துவ அதிகாரிளுக்கு மட்டும்.

(24) தொலைபேசிக் கட்டணப் படி-

சிறப்பு மருத்துவ அதிகாரி ரூ. 6000.00 (மாதத்திற்கு)
மருத்துவ அதிகாரி ரூ. 3000.00 (மாதத்திற்கு)

(25) பட்டயப் பொறியியளாளர் படி மாதத்திற்கு ரூ. 15000.00 முதல் 30000.00 வரை வழங்கப்படும். (தகுதி பெற்ற பட்டயப் பொறியியளாளர் அதிகாரிளுக்கு மட்டும்)

(26) பட்டயக் கட்டடக்லைஞர் படி மாதத்திற்கு ரூ. 15000.00 முதல் 30000.00 வரை வழங்கப்படும். (தகுதி பெற்ற பட்டயப் பொறியியளாளர் அதிகாரிளுக்கு மட்டும்)

12. **ஓய்வூதியங்கள் / பணிக்கொடைகள் :**

1981 இன் வான் படை ஓய்வூதிய அத்துடன் பணிக்கொடைகள் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான கோவையின் நியதிகளின்படி கொடுப்பனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள் அநாதைகள் (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை அநாதை (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

13. விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் -

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். முதலாம் குழுக்கான விண்ணப்பங்கள் 2026, யூன் 30 ஆந் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் குறிப்பிடபட்ட விண்ணப்பம் தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி, ஆட்சேர்ப்பு தலைமை காரியாலயம், தொழிற்துறை பயிற்சி பாடசாலை, இலங்கை விமானப்படை ஏகல, கொட்டுகொட. CHIEF RECRUITING OFFICER, AIR FORCE RECRUITING OFFICE, SRI LANKA AIR FORCE TRADE TRAINING SCHOOL, EKALA, KOTUGODA என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் மேல் மூலையில் "இலங்கை விமானப்படை பயிலிலவியல் ஆண் / பெண் அலுவலர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பத்தில் விருப்ப வரிசைப்படி மூன்று கிளைகளுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். ஓர் விண்ணப்பதாரருக்கு விண்ணப்பிக்கும் பிரிவுக்கு அடிப்படை கல்வித்தகைமை மிகவும் பொருந்தும் பிரிவுக்கு மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பிக்கும் பிரிவில் நேர்முக பரீட்சையின் போது தேர்ச்சி பெறாதவர்களுக்கு காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக வான் படை தளபதியினால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய பிரிவில் நேர்முக பரீட்சையிற்கு அழைக்கபடபடுவர். மூன்று தேர்வுகளுக்கு அழைப்பது குறித்த இறுதி முடிவு விமானப்படை தளபதியின் விருப்பத்தின் படி இருக்கும். முடிவு திகதியின் பின்னர் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / குடியியல்தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தங்களது திணைக்களத்தின் / சபையின் / குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பங்களை www.aiforce.lk/joinus/apply எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். இணைய தளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் பந்தி 13 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

ஈ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் நிழற்படப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும் :

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச் சட்டகோவையின் நோக்கத்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது );

(2) தேசிய ஆளடையாள அட்டை மூலப் பிரதி;

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழின் மூலப் பிரதி ;

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன் / அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி ;

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும் ;

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்களின் மூலப் பிரதி ;

(7) ஆறு மாதத்திற்கு உட்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;

(8) பாடசாலை விடுகைப் பத்திரம் ;

(9) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக் ;

(10) வர்ண புகைப்படம் 2 x 2½ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதல்படுத்தப்பட்டது.

உ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது .

ஊ. ஆவணங்களோ ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

எ. விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

ஏ. விண்ணப்பத்தில் வயது, உயரம், மார்பு மற்றும் அடிப்படை கல்வித் தகைமை எதுவும் பிழையானதெனக் காணப்படு மிடத்து, விண்ணபத்தாரரைத் தகைமையற்றவராக்கும்.

14. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப் படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பத்தாரரை ஆளாக்கிவிடும்.

15. **தேர்ந்தெடுத்தல் நேர்முகப்பரீட்சை** :

அ. மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையோடு பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை தளபதியினால் விதித்துரைக்கப்படகூடியவாறான அத்தகைய சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

ஆ. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் திகதி என்பன கடிதம் மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

இ. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து எழுத்துப்பரீட்சை அல்லது செயன்முறை பரீட்சை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு (Officer Qualifying Test) சமுகமளிக்கும் படி தேவைப்படுத்தப்படுவர்.

உ. ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

ஊ. சேர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

விபி எதிரிசிங்க
WWV, RWP, RSP and three Bars,
USP fndu (china), psc, qhi
எயார் மார்ஷல்
விமானப்படைத் தளபதி

இலங்கை விமானப்படை, தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
இல. 594, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர விமானப்படையில் ............................ பிரிவில்**
**ஆண் / பெண் பயிலிளவல் அலுவலருக்கான விண்ணப்பம்**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு

விண்ணப்பிக்கும் பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | 2. | 3. |

1. தேசிய இனம் : ..........................................................................................................................................
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா? அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக).

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையான அட்டையில் உள்ளவாறு) : ..........................................................................
..........................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ..........................................................................................

4. நிரந்தர முகவரி : ..........................................................................................................................

5. அஞ்சல் முகவரி : ..........................................................................................................................

6. பிறந்த திகதி : ..........................................................................................................................
(வயது முதலாம் குழு 2026, ஓகத்து 01 ஆந் திகதி / இரண்டாம் குழு 2026, திசெம்பர் 01 ஆந் திகதி நிலவரப்படி)

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் குழு | 2026 ஆம் ஆண்டு முதலாம் குழு / 2026 ஆம் ஆண்டு இரண்டாம் குழு |
| வயது | வருடம்............ மாதம்........... நாள்............. |

7. உயரம் : சென்றி மீட்டரில் ........................................................... (.அடி............அங்குலம் ....................)

8. மார்பு அளவு: அங்குலம் ..........................

9. நிறை : கிலோ கிராம் ............................

10. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்: ........................................................................

11. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள வான்படை முகாம் :.....................................................................

12. மாவட்டம்: ..........................................................................................................................

13. தேர்தற் தொகுதி :....................................................................................................................

14. கிராம அலுவலர் பிரிவு : ..........................................................................................................

15. தொலைபேசி இலக்கம். : .......................................... WhatsApp இலக்கம் :............................................

e - mail முகவரி: ..........................................................................................

16. சிவில் அந்தஸ்து (திருமணமானவரா ? அல்லது திருமணமாகாதவரா?) :.........................................................

17. பால் : (ஆண் / பெண்)

18. பாடசாலை பற்றிய விபரங்கள் :..............................................................................................
..........................................................................................................................................

19. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| *பாடசாலை / பல்கலைக்கழகம் பெயர்கள்* | *பரீட்சை* | *ஆண்டு மற்றும் சுட்டிலக்கம்* | *சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட)* | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா/த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த. (உ.த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி | | | |
| | உண்டு [ ] | | | |
| | இல்லை [ ] | | | |
| | | | பொது ஆங்கிலம் | |
| | | | பொது சாதாரண பரீட்சை | |
| | தொழில் தகைமைகள் வேறு | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள்:

21. பாடசாலையிலிருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *தொழிலின் தன்மை* | *சேவைக் காலப்பகுதி* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

22. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| *முழுப்பெயர்* | *தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்* | *தொழில்* | | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|---|
| தந்தை : | | முன்பு | தற்போதைய | |
| தாய் : | | | | |
| சகோதர /சகோதரிகள் : | | | | |
| | | | | |
| | | | | |

23. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையிலோ அல்லது ஏனைய ஆயுத படையிலோ சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் அல்லது சேவையில் இருந்து விலகி இருந்தால் விலகிய முறையினை குறிப்பிடுக. (சட்டபூர்வமாக அல்லது சட்டத்திற்கு புறம்பாக)

| *நிலை* | *பெயர்* | *பிரிவு / துறை* | *தற்போதைய விபரம்* |
|---|---|---|---|
| | | | |

24. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் - (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| *தொடர் இல.* | *விபரம்* | *பாடசாலை* | *மாகணம்* | *தேசிய* | *சர்வதேச* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

25. புறம்பான சாதனைகள் பாடசாலை அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

…………………………………………………………………………………………………………………………......................................

26. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :

…………………………………………………………………………………………………………………………………………

27. இலங்கை வான் படையில் அல்லது ஆயதப் படையில் ஏதெனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :

…………………………………………………………………………………………………………………………………………….

28. இதற்கு முன்னர் இலங்கை வான் படை சீனக்குடா பீடத்தில் பொதுக்கடமை விமான ஓட்டுனர்கள் விமானத்தில் செல்லும் திறமை பரீட்சிக்கப்படும் தரப்பரீட்சைக்காக தோற்றியவரா? …………………………………………………………………......

……………………………………………………………………………………………………………………..…………………..……

29. இதற்கு முன் இலங்கை வான் படை நேர்முக பரீட்சைக்கு தோற்றியிருந்தால் பரீட்சைக்க்கு தோற்றிய வருடம், மாதம் மற்றும் அழைப்பு இலக்கம் என்பவற்றை குறிப்பிடுக :

அ. வருடம்......................... மாதம் .................................. அழைப்பு இலக்கம் .....................................
ஆ. பெறுபேறு : சித்தி / சித்தியடையவில்லை

30. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக :

……………………………………………………………………………………………………………………..………………………

31. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் …………………………………………………

…………………………………………………………………………………………………………………………………..………

32. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

33. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் என் அறிவுக்கு ஏற்றவாறு உண்மையானதும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத்' தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து அறிந்து கொண்டேன்.

திகதி : .......................................  .......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

34. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

அ. இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 33 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ................................................................ இவருக்கு நான் பெற்றோர் / பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் -

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பிக் கொடுப்பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாட்டு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் இணங்குகிறேன்.

....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ...................................................................
முகவரி : .......................................................................................................

..................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ...........................................................................................................
பெயர் (கெப்பிட்டல் எழுத்துக்களில்) :...................................................................
முகவரி : ........................................................................................................

.......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ...........................................................................................................
பெயர் (கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ....................................................................
முகவரி : .......................................................................................................

06 - 237/2

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுநர் சேவை வகுதி தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் கீழ் உள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் நிறைவேற்றுநர் சேவை வகுதி தரம் III இல் உள்ள 01 சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உச்சப் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைய தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள்:**

(i) *கல்வி/தொழில்சார் தகைமைகள்:*

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) *அனுபவம்:*

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், சட்டத்தரணியாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமுள்ள தொழில்முறை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (செயலூக்கமுள்ள தொழில்முறை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்ற காலம், உறுதிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் உறுதிப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

*அல்லது*

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்டப் பதவியொன்றில்* மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(செயலாளர்/ திணைக்கள/ நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்ட கடிதம் மூலம் அது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

குறிப்பு - அடிப்படைத் தகைமையை உறுதிப்படுத்தும் மூல ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படலாம்.

*சட்டப் பதவி என்பது சட்டப் பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருப்பது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும் பதவிகளாகும்.

(iii) *உடற் தகைமை:*

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்வதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகைமைகள்:*

இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான தகைமைகள் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நியதிகளும்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறைமை குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படல் வேண்டும். தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் அளவுக்கு அமைய அதற்கான பங்களிப்புப் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவியில் அமர்த்தப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்டுள்ள மற்றைய அரசகரும மொழியில்/ அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் மற்றும் ஏனைய திணைக்களக் கட்டளைகளுக்கு உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதிபெறும் மொழி மூலம், விண்ணப்பப்படிவத்தில் தாங்கள் குறிப்பிடும் மொழி மூலமாகும்.

04. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம், இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூபா 82150.00 - 10 × 2400 - 8 × 2940 - 17 × 3900 - ரூபா 195,970.00 (SL-1-2025) ஆகும்.

06. **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கும் திட்டம்:**

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள்:<br>அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கையின் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழக மொன்றினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டம் | 25 | 25 |

<table>
<tr><th>தொ. இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகபட்ச புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கையின் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் பெற்ற பட்டப்பின்படிப்பு சட்ட டிப்ளோமா.<br><br>இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது 1978 இன் 16 ஆம் இலக்க சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட,<br><br>• முதலாம் வகுப்புச் சித்தியுடன் சட்டமாணிப் பட்டம்<br>• இரண்டாம் வகுப்பு உயர்தரச் சித்தியுடன் சட்டமாணிப் பட்டம்<br>• வகுப்புச் சித்தியுடன் சட்டமாணிப் பட்டம்<br>• சாதாரண சித்தியுடன் சட்டமாணிப் பட்டம்<br><br>ஈ) சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்புச் சித்தி<br><br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தி<br><br>(குறிப்பு I: சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தியுடன் (Honours) சித்தியடைந்திருந்தால் மட்டுமே மேற்கூறப்பட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>(குறிப்பு II: அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.)</td><td>20<br><br><br><br>15<br>10<br>07<br>05<br><br>10<br><br>05</td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம்:<br>வழக்குகளுக்குரிய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் வாதாடுதல>
<table>
<tr><th></th><th>வழக்குத் தாக்கல் செய்தல் (ஒரு வழக்குக்கு)</th><th>நீதிமன்றத்தின் முன்னிலையாகி வாதாடுதல் (ஒரு வழக்குக்கு):</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய சபைகள்</td><td>2</td><td>3</td></tr>
</table>
(குறிப்பு: மேற்படி தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஏற்புடைய தீர்ப்புப் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு நடைபெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட பிரதியை நேர்முகப்பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.)</td><td></td><td>35</td></tr>
</table>

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சட்டம் பற்றிய அறிவு:** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்திற்காக தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தை ஒரு பிரதான பாடமாகக் கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தில் பெற்ற தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் சட்டம் பற்றிய டிப்ளோமா | 08 | |
| | இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி அல்லது வேறு நிறுவனத்தினால் பெற்றுக்கொண்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா | 05 | |
| | ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது சட்டக் கல்லூரி அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பச் சட்டப் பாடநெறிகள்/பயிற்சி திட்டங்களில் பங்கேற்றுப் பெற்ற சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்) | 04 | |
| | (*குறிப்பு*: அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |
| 04. | **மொழித் திறன்:** | | 15 |
| | அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம். | 15 | |
| | ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்திலான மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitions) ஆங்கில மொழியில் காட்டிய திறமை:<br><br>**தனிநபர்:**<br>i. முதலிடம் / சிறந்த திறமை – 12<br>ii. இரண்டாமிடம் - 10<br>iii. மூன்றாமிடம் / ஏனைய திறமைகள் - 08<br><br>குழு:<br>i. முதலிடம் / சிறந்த திறமை - 10<br>ii. இரண்டாமிடம் - 08<br>iii. மூன்றாமிடம் / ஏனைய திறமைகள் - 06 | 12 | |
| | இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக்காகப் பெற்ற டிப்ளோமா அல்லது வேறு நிறுவனத்தில் ஆங்கில மொழி தொடர்பில் பெற்ற SLQF 3 அல்லது அதற்கு மேல் மட்டத்திலான டிப்ளோமா அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனத்தில் / அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1500 கல்வி மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியைத் தொடர்ந்து பெற்றுக்கொண்ட ஆங்கில டிப்ளோமா. | 10 | |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| | ஈ) க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் அல்லது Edexcel / Cambridge உயர் தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதி சித்தி பெற்றிருத்தல் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முன்னரான 02 வருடங்களுக்குள் IELTS இல் மொத்தப் புள்ளிகள் 6.5 (ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 06 புள்ளிகளுடன்) அல்லது அதற்கு மேல் TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல் TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேல் அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல்.<br><br>உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக்காகப் பெற்ற உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனத்தினால் ஆங்கில மொழிக்குப் பெற்றுக்கொண்ட SLQF 2 மட்டத்திலான சான்றிதழ்<br><br>(*குறிப்பு: அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.*) | 08<br><br>05 | |
| 05 | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை :**<br><br>பதவியின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான விண்ணப்பதாரரின்:<br><br>• பலங்கள் (Strength questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறன் (Situational questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• திறமை (Competency questions) (10 புள்ளிகள்)<br><br>ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான வினாக்களுக்கு வழங்கப்படும் பதில்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | | 15 |
| | **மொத்தம்** | | **100** |

**07. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்:**

அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் விண்ணப்பதாரரினால் முறையாக சான்றளிக்கப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்:

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**08. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

(i) விண்ணப்பங்களை 20.07.2026 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "ஆணையாளர் நாயகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல" என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றையத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிபடிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து, முதல் பக்கத்தில் 01 முதல் 05 வரையும், இரண்டாம் பக்கத்தில் 06 முதல் 09 வரையும், மூன்றாம் பக்கத்தில் 10 முதல் 12 வரையும் அமையுமாறு தயாரித்து தங்களது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணபத்தை அனுப்பும் கடித உறையின் மேல் இடது மூலையில் “நிறைவேற்றுநர் சேவை வகுதி தரம் III சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்” எனக் குறிப்பிடல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணபதாரரின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பகிரங்க நொத்தாரிசு / முப்படைகளின் அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரப் பதவியிலுள்ள அதிகாரி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை தாங்கள் சேவை செய்யும் திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் அமைப்புக்கு இணங்காத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப் படும். விண்ணப்பங்கள் காணாமல் போவது அல்லது தாமதமாவது குறித்த எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

09. **தவறான தகவல்களை வழங்குதல்:**

தாங்கள் சமர்ப்பித்த விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால், தங்களது விண்ணப்பத் தகுதி இரத்துச் செய்யப்படும். அத்தகைய தவறான அல்லது பொய்யான தகவல் ஆட்சேர்ப்பின் பின்னர் கண்டறியப்பட்டுமிடத்து உரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்கப்படுவீர்.

10. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்ளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் எழுமிடத்து சிங்கள மொழி வாசகமே மேலோங்கும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமிடத்து அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

செயலாளர்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு,
2026, யூன் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தில் நிறைவேற்றுநர் சேவை வகுதி தரம் III சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2026**

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் எழுதவும். சிங்களம் - 2 / தமிழ் - 3 / ஆங்கிலம் - 4)

*குறிப்பு* : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்ற முடியாது.

(1) 1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி): ..........................................................
(சிங்களத்தில் / தமிழில்): ..........................................................

1.2 முழுப் பெயர் :..........................................................
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :..........................................................
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்)
(உதாரணம்: GUNAWARDHANA. M.G.B.S.K.)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................................
(சிங்களத்தில் / தமிழில்)

(2) முழுமையான முகவரி:

2.1 நிரந்தர வதிவிட முகவரி :..........................................................
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.2 நிரந்தர வதிவிட முகவரி :..........................................................
(சிங்களத்தில் / தமிழில்)

2.3 நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி: ..........................................................
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................................

2.4 தொலைபேசி இலக்கம் : ..........................................................

(3) பாலினம்:
பெண் - 1 (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)
ஆண் - 0

(4) விவாக நிலை: (உரிய இலக்கத்தை கூட்டில் எழுதவும்)
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

(5) பிறந்த திகதி மற்றும் வயது:

5.1 பிறந்த திகதி: ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

5.2 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் வயது:

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5.3 தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(6) நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக, விண்ணப்பம் கோரும் அறிவித்தலின்படி பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விவரம்:

| தகைமை | பெற்ற நிறுவனம் | பெற்ற திகதி |
|---|---|---|
| ............................................... | ................................................. | ..................................... |
| ............................................. | ................................................ | ..................................... |

(7) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி: ......................................

(8) விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் உள்ள ஒவ்வொரு தகைமையையும் பெற்றுக்கொண்டமைக்கான விபரங்கள்:

| தகைமை | பெற்ற நிறுவனம் | பெற்ற திகதி / காலப்பிரிவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | | |
| i. ........................................... | ....................................... | ......................................... |
| ii. ........................................... | ....................................... | ......................................... |
| 2. மேலதிக அனுபவம் | | |
| i. ........................................... | ....................................... | ......................................... |
| ii. ........................................... | ....................................... | ......................................... |
| 3. தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு | | |
| i. ........................................... | ....................................... | ......................................... |
| ii. ........................................... | ....................................... | ......................................... |
| 4. மொழி அறிவு | | |
| i. ........................................... | ....................................... | ......................................... |
| ii. ........................................... | ....................................... | ......................................... |

(9) தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ("ஆம்" எனின் விபரங்களைக் குறிப்பிடவும்)
.........................................................................................................................................................................

(10) விண்ணப்பதாரரியின் உறுதியுரை:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கின்றேன். என்னால் செய்யப்பட்ட இந்த வெளிப்படுத்தல் தவறானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்னர் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் அறிவேன் என்றும், அனைத்து விதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் உறுதி மொழிகின்றேன்.

திகதி : ............................

.............................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(11) விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவரை எனக்குத் தெரியும் என்றும், இன்றைய தினம் எனது முன்னிலையில் அவர் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்

பெயர்: ....................................................
பதவி: ....................................................
திகதி: ....................................................

(12) திணைக்களத் தலைவரின் சான்றிதழ் : (அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

மேற்படி விபரங்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி .......................................................................... இந்த நிறுவனத்தில் சேவை செய்கின்றார் என்றும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், அவரது வேலை மற்றும் வருகை திருப்திகரமாக உள்ளது என்றும், அவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லை என்றும், இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவன சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: ....................................................
பதவி: ....................................................
திகதி: ....................................................

(உத்தியோகபூர்வ முத்திரையைப் பதிக்கவும்)

06 - 246

**பாதுகாப்பு அமைச்சு**

**வளிமண்டலவியல் திணைக்களம்**

வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல்.

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பதவியின் தன்மை** :

i. இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வுதியத்திற்குரியதாகும். மேலும், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வுதியத் திட்டத்திற்கு / விபத்துற்று இறக்கும் ஆண்களின் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வுதியத் திட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளின்படி, உரிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்தப்பட வேண்டும். வளிமண்டலவியல் உதவியாளர் தரம் III பதவிக்கே ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ii. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் படி, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 40,000.00 - 10 x 450 - 10 x 490 - 10 x 540 - 12 x 590 – ரூபா 61,880.00 (PL – 1 - 2025) ஆகும். (அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை III இன் விதிகளுக்கு அமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.) நியமனம் பெற்ற திகதியிலிருந்து 03 ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். (நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதுடன், தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்.)

iii. *பணிகள் மற்றும் பொறுப்புகள் :*

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலக வளாகங்களை சுத்தப்படுத்துதல், அலுவலக காணியை சுத்தப்படுத்துவதற்கும் பராமரிப்பு பணிகளுக்கும் உதவுதல், வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உபகரணக் கூட்டை (Stevenson Screen/ Instrument Eclosure) சுத்தப்படுத்துதல் மற்றும் அதனை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக பேணுதல்.

(ஆ) வளிமண்டலவியல் உபகரணங்களைச் சுத்தப்படுத்துதல் மற்றும் அவற்றின் பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல். வளிமண்டலவியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களில் வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

(இ) இரவு நேரத்தில் பிரதேச அலுவலகங்களின் உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iv. கடமைகள் முறைவழியாக (Shift basis) ஒதுக்கப்படும் என்பதுடன், இரவு முறைவழிக் (Night shifts) கடமைகளையும் ஆற்ற வேண்டும்.

03. **தகைமைகள் :**

*அடிப்படைத் தகைமைகள்:*

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. மிகச்சிறந்த நற்பண்புகளைக் (நன்னடத்தை) கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 27.07.2026 அன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.)
iv. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் நீங்கலாக).

*உடற்தகைமைகள்* :

v. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும். நியமனத்தின் பின்னர் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையின்போது, சேவைக்கான தகுந்த உடல் மற்றும் மனத் தகுதி இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால், அவர் இப்பதவிக்கு தகுதியற்றவராகக் கருதப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

vi. பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவைப்படும் அனைத்துத் தகைமைகளும் 27.07.2026 அன்று அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 27.07.2026 அன்று பி.ப. 4.15 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு "வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம்,இல. 383, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்ப உறையின் மேல் இடதுபுற மூலையில் "வளிமண்டலவியல் உதவியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைத் தத்தமது நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும்.

05. மொழித் தேர்ச்சி:

அரச நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, உரிய மட்டத்திலான இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உரிய மட்டத்திலான இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றங்கள், தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

06. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் தெளிவான நிழற்படப் பிரதிகளை (Photocopies) தங்களது விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். (மூலப்பிரதிகள் அல்ல)

i. பிறப்புச் சான்றிதழின் பிரதி
ii. தேசிய அடையாள அட்டையின் பிரதி
iii. கல்வித் தகைமைகள் மற்றும் பயிற்சிகளை (பெற்றிருப்பின் மாத்திரம்) உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்களின் பிரதிகள்
iv. சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இருப்பின் மாத்திரம்)
v. கிராம அலுவலரினால் (Grama Niladhari) வழங்கப்பட்ட வதிவிடம் மற்றும் நன்னடத்தைக்கான சான்றிதழ் (கடந்த 06 மாதங்களுக்குள் பெறப்பட்டது)
vi. அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் (Character Certificate) இரண்டு

07. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்திலும் மற்றும் நியமன அதிகாரி கோரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை (Originals) சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

08. இந் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை எவ்வகையிலேனும் உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது பொருத்தப்பாடற்ற தன்மைகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படும்.

*குறிப்பு*:

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணச் செலவுகள் அல்லது வேறு எந்தவொரு செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

ஏ. எல். கே. விஜேமான்கே,
பணிப்பாளர் நாயகம் (பதில்),
வளிமண்டலவியல் திணைக்களம்.

2026, யூன் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஆரம்பக் கைத்தொழில் சாரா சேவை வகையைச் சேர்ந்த தரம் III வளிமண்டலவியல் உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

01. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் - (சிங்களம் / தமிழ்) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களம் / தமிழ்) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

03. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்) - (உதாரணம்: Perera A. B. C.) :
.................................................................................................................................................
.................................................................................................................................................

04. நிரந்தர முகவரி :
.................................................................................................................................................
.................................................................................................................................................

05. நிரந்தர வசிப்பிட மாவட்டம் :
.................................................................................................................................................

06. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கிலத்தில்):
.................................................................................................................................................
.................................................................................................................................................

07. பிறந்த திகதி : .................................. 08. 27.07.2026 ஆம் திகதியன்று வயது : ................................................

09 . பால் : ஆண் / பெண் : ..............................................................................

10. தேசிய ஆளடையாள அட்டை இல. : .....................................................................................

11. விவாக நிலை : திருமணமானவர் / திருமணமாகாதவர் : ...........................................................................

12. தொலைபேசி இலக்கம் : ..................................................................................

13. கல்வித் தகைமைகள் :
க.பொ.த (சாதாரண தரம்)
I. முதலாவது அமர்வு
வருடம் :........................ சுட்டெண் :.................................

| பாடம் | தகைமை | பாடம் | தகைமை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

II. இரண்டாவது அமர்வு

வருடம் :........................ சுட்டெண்:.................................

| பாடம் | தகைமை | பாடம் | தகைமை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

III. க.பொ.த (உயர் தரம்)
வருடம் : ........................ சுட்டெண்:.................................

| பாடம் | தகைமை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

14. பெறப்பட்ட பணிஅனுபவம் பற்றிய விபரங்கள் :

| தொடர் இல. | நிறுவனம் | பணிஅனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள் |
|---|---|---|
| 1 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 2 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 3 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 4 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |

15. பெறப்பட்ட பயிற்சி பற்றிய விபரங்கள் :

| தொடர் இல. | பெறப்பட்ட பயிற்சி | நிறுவனம் | காலப்பகுதி | பணிஅனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகள் |
|---|---|---|---|---|
| 1 | | | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 2 | | | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 3 | | | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 4 | | | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |

16. மேலதிக கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்:

| தொடர் இல. | தகைமைகள் | தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகள் |
|---|---|---|
| 1 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 2 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 3 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |
| 4 | | இணைக்கப்பட்டுள்ளது / இணைக்கப்படவில்லை |

17. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை மற்றும் துல்லியமானவை என நான் சான்றளிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விபரம் உண்மையற்றது அல்லது தவறானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் எவ்வித நிபந்தனையுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

இப்பதவிக்கு நான் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், வெற்றிடங்கள் நிலவும் நாடளாவிய ரீதியிலான எந்தவொரு பணித்தலத்திலும் பணியாற்றுவதற்கும் எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி -.......................... ..............................

கையொப்பம்

18. தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்கள் பின்வரும் பகுதியை பூர்த்தி செய்தல் வேண்டும்.

**அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் சம்பந்தமாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** :

இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் ................................................ திரு. / திருமதி / செல்வி .......................... ............................ அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் / அலுவலகத்தில் ............................. திகதி முதல் ....... .................................... பதவியில் கடமையாற்றுகின்றார் என்பதையும், அவர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும், சேவைக்காலத்தினுள் ஒழுக்காற்று நடவடிக்கை எதற்கும் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் / காணப்படவில்லை என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அவருடைய தனிப்பட்ட கோப்பிற்கு அமைய துல்லியமானவை என்பதையும், அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :
பதவி :
முகவரி :

(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

......................................................
கையொப்பம்

திகதி :............................

06 - 324

## இலங்கை விமானப்படை நேரடி நியமன அதிகாரி வெற்றிடங்கள்

1. இலங்கை விமானப்படை நிரந்தர / தொண்டர் படையில் கீழ்க்காணும் பிரிவுகளில் நேரடி நியமன அதிகாரிகளாக சேர்வதற்கு தகுதியான ஆண் / பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

   அ. விமானப் பொறியியல் (ஆண் /பெண்)
   ஆ. மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் (ஆண்)
   இ. சிவில் பொறியியல் (ஆண் /பெண்)
   ஈ. பல் மருத்துவம் (ஆண் /பெண்)
   உ. நிகழ்திறன் கலைகள் (ஆண்)
   ஊ. வேளாண்மை (ஆண்)
   எ. கால்நடை மருத்துவம் (ஆண் /பெண்)
   ஏ. கணக்காய்வு (ஆண் /பெண்)

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறை தகுதிகள் பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

3. **தொழில்முறை / கல்வித் தகுதிகள் :**

**அ. விமானப் பொறியியல் பிரிவு**

(1) விமானப் பொறியியல் அதிகாரி (ஏரோஸ்பேஸ் / ஏரோநாட்டிக்கல் / மெக்கானிக்கல் / மெகாட்ரானிக்ஸ் / ஆட்டோமொபைல்) - ஆண் / பெண் (நிரந்தர/ தொண்டர் )

ஏரோஸ்பேஸ் / ஏரோநாட்டிக்கல் / மெக்கானிக்கல் / மெகாட்ரானிக்ஸ் / ஆட்டோமொபைல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான தகுதி. IESL உடைய உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாகும்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மெக்கானிக்கல் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது இலங்கை மேம்பட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (SLIATE) வழங்கும் உயர்நிலை தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும் தேசிய பொறியியல் அறிவியல் டிப்ளோமா (NDES). City and Guilds of London Institute வழங்கும் NVQ நிலை 5 டிப்ளோமா அல்லது அதற்கு இணையான தகுதி. IESL உடைய உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாகும்.

(2) ஆராய்ச்சி அதிகாரி ஏரோஸ்பேஸ் / ஏரோநாட்டிக்கல் / மெக்கானிக்கல் / மெகாட்ரானிக்ஸ் / மின்சாரம் / பொருள் பொறியியல் அதிகாரி ஆண் / பெண் (தொண்டர் )

மேற்கண்ட துறைகளில் விஞ்ஞான பட்டம் (BSc Honours). IESL உடைய உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாகும்.

GCE A/L இல் உயர்ந்த தீவு தரவரிசை பெற்றவர்கள், உள்ளூர் அரச பல்கலைக்கழக பட்டதாரிகள், இறுதி ஆண்டு திட்டங்களின் தரம் மற்றும் பயிற்சி அனுபவம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆராய்ச்சி திட்ட அனுபவம் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

(3) **விமானப் பொறியியல் அதிகாரி (இரசாயனப் பொறியியலாளர்) ஆண் / பெண் (தொண்டர்)**

இரசாயன தொழில்நுட்பத்தில் விஞ்ஞான பட்டம் (BSc Honours). மேற்பரப்பு இரசாயன சிகிச்சை தொடர்பான அனுபவம் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

**ஆ. மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு**

**மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் அதிகாரி ஆண் (நிரந்தர)**

மின்னணு & தொலைத்தொடர்பு பொறியியல் / மெகாட்ரானிக்ஸ் பொறியியல் துறையில் பொறியியல் பட்டப்படிப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மின்னணு / தொலைத்தொடர்பு பிரதான பாடமாகக் கொண்ட இயற்பியல் அறிவியல் பட்டம் அல்லது மின்னணு / தொலைத்தொடர்பு துறையில் உயர் டிப்ளோமா / டிப்ளோமா தகுதி. தொடர்புடைய துறையில் ஆறு (6) மாத அனுபவம் மற்றும் IESL உடைய உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாக கருதப்படும்.

**இ. சிவில் பொறியியல் பிரிவு**

**(1) சிவில் / மெக்கானிக்கல் / மின்சார / பொருள் பொறியியல் அதிகாரி – ஆண் / பெண் (நிரந்தர / தொண்டர் )**

(அ) சிவில் / மெக்கானிக்கல் / மின்சார / பொருள் பொறியியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற IESL நிறுவன உறுப்பினர் (Chartered Engineer).

(ஆ) சிவில் / மெக்கானிக்கல் / மின்சார / பொருள் பொறியியல் துறையில் BSc பொறியியல் பட்டம் மற்றும் IESL இணை உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாக கருதப்படும்.

(இ) பொறியியல் துறையில் Bachelor of Technology (B Tech) பட்டம்.

(ஈ) சிவில் / மெக்கானிக்கல் / மின்சார / பொருள் பொறியியல் துறையில் NDT / NDES / HNDE அல்லது அதற்கு இணையான தகுதி மற்றும் IIESL உறுப்பினர் பதவி கூடுதல் தகைமையாக கருதப்படும்.

**ஈ. பல் மருத்துவ பிரிவு**

**(1) பல் மருத்துவ அதிகாரிகள் – ஆண் / பெண் (நிரந்தர / தொண்டர் )**

BDS (இலங்கை) பட்டம் அல்லது வெளிநாட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட அதற்கு இணையான பட்டம் மற்றும் இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவு.

**(2) பல் மருத்துவ மாணவர்கள் ஆண் / பெண் (நிரந்தர)**

BDS (இலங்கை) படிப்பின் 7 ஆவது – 8 ஆவது அரையாண்டில் (4ஆம் ஆண்டு சமமானது) கல்வி பயிலும் மாணவர்கள் அல்லது எட்டு (08) அரையாண்டுகள் (5ஆம் ஆண்டு சமமானது) வெற்றிகரமாக முடித்த மாணவர்கள்.

**(3) இடைக்கால பயிற்சி பெறும் (Pre-Intern) பயிலுநர்கள் – ஆண் / பெண் (நிரந்தர)**

BDS (இலங்கை) அல்லது வெளிநாட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெறப்பட்ட அதற்கு இணையான பட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ள, ஆனால் இலங்கை மருத்துவ சபையில் தற்காலிக பதிவு பெறாத பல் மருத்துவர்கள் விண்ணப்பிக்கலாம். ERPDS தேர்வை நிறைவு செய்யாத வெளிநாட்டு பட்டதாரிகள், நியமன தேதி முதல் ஐந்து (05) ஆண்டுகளுக்குள் அந்தத் தேர்வை முடித்து, இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உ. நிகழ்திறன் கலைகள் பிரிவு**

**பாண்ட் மாஸ்டர் இசை - (ஒலி பொறியியல்) ஆண் (நிரந்தர)**

(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இசை துறையில் பட்டப்படிப்பு (நேரடி ஒலி மேலாண்மையில் தொழில்முறை அனுபவம் அவசியம்.

அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் நேரடி ஒலி பொறியியல் துறையில் பட்டப்படிப்பு.

அல்லது

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நேரடி ஒலி மேலாண்மை தொடர்பான டிப்ளோமா.

ஊ. **வேளாண்மை**
**வேளாண்மை அதிகாரி ஆண் (நிரந்தர)**

வேளாண்மை / தோட்டக்கலை / பசுமைப்பரப்பு வடிவமைப்பு (Landscaping) துறையில் பட்டப்படிப்பு அல்லது அதே துறையில் முதுநிலை பட்டம் அல்லது அதற்கு இணையான தகுதி.

ஏ. **கால்நடை மருத்துவ பிரிவு**
**கால்நடை மருத்துவ அதிகாரி – ஆண் / பெண் (நிரந்தர / தொண்டர் )**

(1) கால்நடை மருத்துவ அறிவியல் (BVSc) பட்டம் அல்லது அதற்கு இணையான தகுதி மற்றும் இலங்கை கால்நடை மருத்துவ சபை (SLVC) பதிவு.
அல்லது
(2) BVSc பட்டம் பெற்றிருப்பதுடன், 06 மாத பயிற்சியை முடித்த பின் SLVC பதிவு பெற வேண்டியவர்கள்.
அல்லது
(3) பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ மற்றும் விலங்கு அறிவியல் பீடத்தில் BVSc படிப்பில் குறைந்தது எட்டு (08) அரையாண்டுகள் அல்லது அதற்கு மேல் வெற்றிகரமாக முடித்துள்ள மாணவர்கள்.
(4) பணியியல் அனுபவம் கூடுதல் தகைமையாக கருதப்படும்.

ஏ. **கணக்காய்வு பிரிவு**

**உள்நாட்டு கணக்காய்வு அதிகாரி ஆண் / பெண் (நிரந்தர)**

(1) இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் / மேலாண்மை / கணக்கியல் அல்லது வணிக துறையில் பட்டப்படிப்பு மற்றும் கணக்காய்வு அல்லது கணக்காய்வு அல்லாத துறையில் குறைந்தது 1 முதல் 3 ஆண்டுகள் வரை பணியியல் அனுபவம், மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறை தகுதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை.

(அ) இலங்கை பொது நிதி கணக்காளர்கள் சங்கத்தின் (Association of Public Finance Accountants of Sri Lanka) சார்ட்டர்ட் பொது நிதி கணக்காளர் தகுதி.
அல்லது
(ஆ) இலங்கை சார்ட்டர்ட் கணக்காளர்கள் நிறுவனம் (ICASL) சார்ட்டர்ட் கணக்காளர் தகுதி அல்லது இங்கிலாந்தின் Chartered Institute of Management Accountants (CIMA) வழங்கும் சமமான தகுதி.
அல்லது
(இ) இலங்கை Certified Management Accountants (CMA) நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட மேலாண்மை கணக்காளர் தகுதி.
அல்லது
(ஈ) இலங்கை சார்ட்டர்ட் கணக்காளர்கள் நிறுவனம் வழங்கும் Certified Business Accountant (CBA) தகுதி அல்லது இங்கிலாந்தின் Chartered Institute of Management Accountants (CIMA) அல்லது இலங்கையின் Certified Management Accountants (CMA) நிறுவனத்தின் சமமான தகுதி.

(2) இலங்கை சார்ட்டர்ட் கணக்காளர்கள் நிறுவனம் வழங்கும் Certified Business Accountant (CBA) தகுதி அல்லது CIMA (UK) அல்லது CMA (இலங்கை) சமமான தகுதியுடன், கணக்காய்வு அல்லது கணக்காய்வு அல்லாத துறையில் குறைந்தது ஒரு (01) ஆண்டு பணியியல் அனுபவம்.

4. **அனுபவம்**

தகுதி பெற்ற பின் தொடர்புடைய துறையில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் நிர்வாக (Executive) பணியியல் அனுபவம் இருந்தால், தேர்வு குழுவினால் கூடுதல் நன்மையாக கருதப்படும்.

5. **அடிப்படை கல்வித் தகுதி**

அ. GCE (O/L) தேர்வில் ஒரே அமர்வில் குறைந்தது ஆறு (06) Credit (C) தேர்ச்சி பெற வேண்டும். இதில் ஆங்கிலம், அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் கட்டாயமாக Credit (C) தேர்ச்சி மற்றும் சிங்களம் / தமிழ் மொழியில் குறைந்தது

Simple (S) தேர்ச்சி அல்லது அதற்கு மேல் பெற வேண்டும் (கூடுதல் மற்றும் விருப்பப் பாடங்கள் கருதப்படமாட்டாது). மேலும், தொழில்நுட்ப துறைகளுக்கு (விமான மற்றும் பொது பொறியியல் பிரிவு, மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு) விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தேவையான அளவை விட உயர்ந்த தொழில்முறை தகுதிகள் கொண்டிருந்தாலும், GCE O/L ஆங்கிலத்தில் Simple (S) தேர்ச்சி அல்லது இரண்டாம் அமர்வில் Credit (C) தேர்ச்சி பெற்றிருந்தால், ஆரம்ப நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படலாம்.

*குறிப்பு*: NVQ நிலை 3 அல்லது அதற்கு மேல் அல்லது SLQF நிலை 1 அல்லது அதற்கு மேல் தகுதி O/L க்கு மாற்றாக கருதப்படும்.

ஆ. GCE (A/L) தேர்வில் எந்தத் துறையிலும் ஒரே அமர்வில் குறைந்தது மூன்று (03) Simple (S) தேர்ச்சிகள் பெற வேண்டும்.

குறிப்பு: NVQ நிலை 4 அல்லது அதற்கு மேல் அல்லது SLQF நிலை 2 அல்லது அதற்கு மேல் தகுதி A/L க்கு மாற்றாக கருதப்படும்.

இ. விசேட குறிப்பு : Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகளில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற வேண்டும். இதில் Physics, Chemistry, Biology, Mathematics மற்றும் English ஆகியவை கட்டாயம். பெறப்பட்ட மதிப்பெண்கள் GCE O/L இல் Credit (C) தேர்ச்சி பெற வேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமாக அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். Pearson Edexcel GCSE அல்லது Cambridge O/L தேர்வுகளுடன் விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள், சிங்களம் அல்லது தமிழ் மொழியில் Simple (S) தேர்ச்சி இல்லாவிட்டால், நியமன தேதி முதல் ஐந்து (05) ஆண்டுகளுக்குள் அந்த மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

Pearson Edexcel / Cambridge – International Advanced Level தேர்வுகளுக்கு, தொடர்புடைய பிரிவுகளுக்கு தனியாக குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் GCE A/L தேர்வில் தேர்ச்சி பெற தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

6. **அடிப்படை சேர்க்கைத் தேவைகள்**

| | | |
|---|---|---|
| அ. | தேசியம் | : இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் |
| ஆ. | திருமண நிலை | : திருமணமானவர் / திருமணமாகாதவர் |
| இ. | வயது | : அனைத்து பிரிவுகளுக்கும்<br>(2026, ஓகத்து 01 ஆம் தேதி – முதல் கட்டம்)<br>(2026, திசெம்பர் 01 ஆம் தேதி – இரண்டாம் கட்டம்)<br>ஆண் / பெண் – 18 முதல் 32 வயது வரை |
| ஈ. | உயரம் | : ஆண் – 165 செ.மீ (5'5") மற்றும் அதற்கு மேல்<br>பெண் – 160 செ.மீ (5'3") மற்றும் அதற்கு மேல் |
| உ. | எடை (BMI) | : ஆண் – 17 < BMI < 26<br>பெண் – 17 < BMI < 25<br><br>: உடற்பருமன் சுட்டி (BMI) = $\frac{\text{நிறை (கி. கி)}}{\text{உயரம் (மீ.)}^{2}}$ |
| ஊ. | மார்பு அளவு | : குறைந்தபட்சம் 32" (ஆண்) |
| எ. | நிற பார்வை தரநிலை | : CP2 |
| ஏ. | கண் பார்வை திறன் | : இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (கண்ணாடி / கான்டாக்ட் லென்ஸ் இல்லாமல்) மருத்துவ / பல் மருத்துவ பிரிவுகளுக்கு ஒவ்வொரு கண்ணிலும் 6/18 (கண்ணாடியுடன் திருத்தியபின் 6/6 ஆக இருக்க வேண்டும்) |

7. **சிறப்பு குறிப்புகள்**:

அ. பிரிவு 2, 3 மற்றும் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் நேர்முகத் தேர்விற்கு வருகை தரும் போது உயரம், பார்வை மற்றும் எடை அளவிடப்படும். Gazette அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைக்கு குறைவானவர்கள் மற்றும் விசேஷ திறமைகள் இல்லாதவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆ. தேர்வு செய்யப்பட்டவர்கள், அவர்களின் தொழில்முறை தகுதி மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை வான்படை தளபதியின் விருப்பப்படி Flight Lieutenant, Flying Officer அல்லது Pilot Officer பதவிகளில் நியமிக்கப்படுவர். ஆலோசகர்கள் மற்றும் நிபுணர் மருத்துவ அதிகாரிகள், அவர்களின் தகுதி மற்றும் அனுபவத்தைப் பொருத்து Squadron Leader அல்லது Wing Commander பதவிகளில் நியமிக்கப்படுவர்.

இ. தேர்வு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் தேர்வு செயல்முறையின் போது எழுத்துத் தேர்வு, நடைமுறைத் தேர்வு மற்றும் அதிகாரி தரத் தேர்வு (Officer Quality Test) ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

ஈ. தேர்வு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை வான்படை மருத்துவ தரநிலைகளின்படி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

உ. அனைத்து முதுநிலை, பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா தகுதிகளும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் (UGC) அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஊ. விசேஷ தகுதிகள் கொண்ட விண்ணப்பதாரர்கள், மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தேவைகள் இல்லாவிட்டாலும், இலங்கை விமானப்படையின் நலனுக்காக தளபதியின் விருப்பப்படி பரிசீலிக்கப்படலாம்.

எ. விளையாட்டு துறையில் சிறப்பான சாதனைகள் பெற்றவர்களுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படும்.

ஏ. அதிகாரப்பூர்வ மொழித் தேவைகள் தேர்வு செய்யப்பட்டவர்கள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் விதிமுறைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும். குறிப்பாக, 1956 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழி சட்டம் (No. 33) தொடர்பான விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

ஒ. தேர்வு செய்யப்பட்டவர்கள், இலங்கை வான்படை தளபதி தீர்மானிக்கும் இடங்களில் பயிற்சி பெற வேண்டும். பயிற்சிக் காலத்தில் எந்த நேரத்திலும் தவறான நடத்தை அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள காரணங்களால் பொருத்தமற்றவர் என அதிகாரிகள் அறிக்கை அளித்தால்,

அவர் / அவள் தமது ஆணையம் (commission) திரும்பப் பெறப்படுவதற்கும் மற்றும் / அல்லது இலங்கை விமானப்படை ஒழுங்கு விதிகளின்படி பிற ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கும் பொறுப்பாக இருப்பார் / இருப்பார்.

ஓ. மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் அதிகாரி தரத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவர். இந்த தேர்வுகளை வெற்றிகரமாக முடிக்கும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு கிளைக்கும் தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தகுதி வரிசைப் பட்டியலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த நேர்முகத் தேர்வுகள் மற்றும் தேர்வுகளின் பின்னர் இறுதி தகுதி வரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். எந்தவொரு விண்ணப்பதாரரும் தமக்கு ஏற்பட்டிருந்த நோய்கள், காயங்கள் அல்லது குறிப்பிட்ட நோய்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகள் பற்றிய தகவல்களை மறைத்திருந்தால், அவர்கள் தேர்வு செயல்முறையின் எந்த நிலையிலும் நிராகரிக்கப்படுவர்.

ஔ. இலங்கை விமானப்படையின் (நிரந்தர / நிரந்தர காப்பு) அதிகாரியின் சேவை நிபந்தனைகள் 27 ஏப்பிறல் 1951 ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசிதழ் எண் 10,240 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை விமானப்படை விதிகளின்படி மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட விதிகளின்படி அமையும். விமானப்படை சட்டத்தின் பிரிவு 10 இன் படி, ஒவ்வொரு அதிகாரியும் தனது நியமனத்தை குடியரசுத் தலைவரின் விருப்பப்படி வைத்திருப்பார்/வைத்திருப்பார்" எனினும், ஒரு அதிகாரிக்கு தமது ஆணையை ஒருதலைப்பட்சமாக ராஜினாமா செய்ய உரிமை இல்லை ஆனால் விமானப்படை சட்டத்தின் பிரிவு 11 இன் படி, குடியரசுத் தலைவரால் அனுமதிக்கப்பட்டால் அவர் அதை செய்யலாம்.

பயிற்சி மற்றும் பின்னர் நடைபெறும் பாடநெறிகளுக்கான கட்டாய சேவை காலத்தை குறிப்பிடும் எந்தவொரு பிணை/ ஒப்பந்த விதிகளும் மேலே குறிப்பிடப்பட்ட விமானப்படை சட்டத்தின் பிரிவு 11 ஐ மீறாது. விமானப்படையிலிருந்து ஓய்வு பெறுதல் விமானப்படை ஓய்வூதிய மற்றும் நலன்கள் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி அமையும்.

ஃ. இறுதி நேர்முகத் தேர்வில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் இலங்கை விமானப்படையில் சேர விருப்பமுள்ளதா என்பதை நேர்முகத் தேர்வு குழுவில் அல்லது அதன் உடனடியாக பின்னர் அறிவிக்க வேண்டும். இதன் மூலம் காத்திருப்பு பட்டியலில் உள்ள பிற விண்ணப்பதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். இறுதி நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று, இலங்கை விமானப்படையில் சேர முடியாததை அறிவிக்காமல் வருகை தராத விண்ணப்பதாரர்கள் எதிர்காலத்தில் எந்தவொரு சேர்க்கைக்கும் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

க. எந்த நிலையிலும் குறைந்த செயல்திறன், சரியான மனப்பாங்கு, நெறிமுறை நடத்தை மற்றும் சுய ஒழுக்கம் இல்லாத விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

ச. அனைத்து அதிகாரிகளும் எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பகுதிக்கும் பணிக்காக அல்லது பயிற்சிக்காக இடமாற்றம் செய்யப்படலாம்.

ட. அனைத்து அதிகாரிகளும் விமானப்படை சட்டம் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் உத்தரவுகளின்படி ஆளப்படுவர்.

த. ஒற்றை (திருமணமாகாத) அதிகாரி அதிகாரிகள் மாளிகையில் (Officers’ Mess) வசிக்க வேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். பேட்மேன் சேவையும் வழங்கப்படும்.

ப. திருமணமான அதிகாரிக்கு, கிடைப்பின் படி திருமண குடியிருப்பு வழங்கப்படலாம். வாடகை வசூல் நிறுவல் குறியீட்டின்படி செய்யப்படும். திருமண குடியிருப்பில் வசிக்காத திருமணமான அதிகாரிகளுக்கு பத்தி 8.ஆ.(11) இல் குறிப்பிடப்பட்டபடி வாடகை கொடுப்பனவு வழங்கப்படும்.

8. **ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்:**

அ. ஒவ்வொரு பதவிக்கும் பொருந்தும் ஒருங்கிணைந்த ஊதியங்கள் பின்வருமாறு உள்ளன. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஒருங்கிணைந்த ஊதியங்களும் அந்தப் பதவியின் ஆரம்ப நிலை ஊதியமாகும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

| *வருடம்* | *சம்பள அளவு - ஆண்டு (DMS 05/2025)* |
|---|---|
| பதவி | |
| அதிகாரி பயிற்சி மாணவர்கள் | ரூபா 656,040.00 |
| பைலட் அதிகாரி (பயிற்சி மாணவர்) | ரூபா 790,560.00 |
| பைலட் அதிகாரி (பயிற்சி அல்லாதவர்) | ரூபா 861,960.00 |
| பறக்கும் அதிகாரி | ரூபா 985,800.00 – (30x ரூபா 28,800.00) = ரூபா 1,849,800.00 |
| விமானப் படை லெப்டினன்ட் | ரூபா 1,158,600.00 (24x ரூபா 28,800.00) = ரூபா 1,849,800.00 |
| ஸ்க்வாட்ரன் தலைவர் | ரூபா 1,273,800.00 (22x ரூபா 28,800.00) = ரூபா 1,907,400.00 |
| விங் கமாண்டர் | ரூபா 1,309,080.00 (17x ரூபா 35,280.00) = ரூபா 1,908,840.00 |

ஆ. மருத்துவ அதிகாரிகளுக்கு பொருந்தும் ஊதியம்.

| *ஆண்டு* | *ஆண்டு ஊதிய அளவுகோல் (PAC 10/2025)* |
|---|---|
| தரம் | |
| ஆரம்ப தரம் | ரூபா 1,129,800.00 2 x ரூபா 28,800.00 7 x 29,040.00 2 x ரூபா 35,280.00 16 x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| தரம் II | ரூபா 1,216,440.00 – 6 x ரூபா 29,040.00 - 2x ரூபா 35,280.00 – 16 x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| தரம் I | ரூபா 1,508,040.00 (15x ரூபா 46,800.00) = ரூபா 2,210,040.00 |
| நிபுணர் தரம் | ரூபா 1,872,000.00 (12x ரூபா 58,200.00) = ரூபா 2,570,400.00 |

இ. மருத்துவ அதிகாரிகளுக்கு பொருந்தும் பிற கொடுப்பனவுகள்.

(1) ஓய்வூதியத்திற்குரிய கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| ஆரம்ப தரம் | – | மாதத்திற்கு ரூ. 1,700.00 |
| தரம் II | – | மாதத்திற்கு ரூ. 1,700.00 |
| தரம் I | – | மாதத்திற்கு ரூ. 3,400.00 |
| நிபுணர் தரம் | – | மாதத்திற்கு ரூ. 3,400.00 |

(2) ஓய்வூதியத்திற்குரிய அல்லாத கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| ஆரம்ப தரம் | – | மாதத்திற்கு ரூ. 2,125.00 |
| தரம் II | – | மாதத்திற்கு ரூ. 1,700.00 |
| தரம் I | – | மாதத்திற்கு ரூ. 400.00 |

(3) ஓய்வுப்பணி கொடுப்பனவுகள்

போக்குவரத்து மற்றும் வருகைக்கான கொடுப்பனவு – மாதத்திற்கு ரூ. 70,000.00

(4) கூடுதல் கடமைக்கான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| ஆரம்ப தரம் | – | மணி ஒன்றுக்கு ரூ. 795.00 |
| தரம் II | – | மணி ஒன்றுக்கு ரூ. 967.00 |
| தரம் I | – | மணி ஒன்றுக்கு ரூ. 1,291.00 |
| நிபுணர் தரம் | – | மணி ஒன்றுக்கு ரூ. 1,542.00 |

(5) பத்தி 4 இல் குறிப்பிடப்பட்ட சேவை கொடுப்பனவுகள், பொருந்தும் வகையில் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும்.

**ஈ. சேவை கொடுப்பனவுகள் மற்றும் பிற வசதிகள்**

(1) வாழ்வாதார செலவுக் கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 17,800.00

(2) ஊக்கத் தொகை ஐந்து (05) ஆண்டுகள் சேவைக்கு பின் மாதத்திற்கு ரூ. 250.00 (வழக்கமான சேவைக்கு மட்டும்)

(3) கடினப்பணி கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 620.00 (நாளொன்றுக்கு ரூ. 20.00)

(4) கூடுதல் கடினப்பணி கொடுப்பனவு செயல்பாட்டு பகுதிகளில் பணியாற்றுபவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 4,380.00

(5) சிறப்பு கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 3,100.00 (நாளொன்றுக்கு ரூ. 100.00 வழங்கப்படும்)

(6) இடைக்கால கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 1,000.00

(7) சீருடை பராமரிப்பு கொடுப்பனவு ஏர் கமடோர் (Air Cdre) மற்றும் அதற்கு மேல் மாதத்திற்கு ரூ. 600.00, மற்றும் குழு கேப்டன் (Gp Capt) மற்றும் அதற்கு கீழ் மாதத்திற்கு ரூ. 525.00

(8) பட்மேன் கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 637.50

(9) உணவு கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 36,008.36(நாளொன்றுக்கு ரூ. 1,161.56)

(10) தகுதி கொடுப்பனவு பொருந்தும் இடங்களில் (அதிகபட்சம் மாதத்திற்கு ரூ. 637.50 வரை)

(11) வீட்டு வாடகை கொடுப்பனவு அரசாங்க சேவை வீடுகளில் வசிக்காத திருமணமான அதிகாரிகளுக்கு (மாதத்திற்கு ரூ. 3,200.00 முதல் ரூ. 8,500.00 வரை)

(12) தொலைபேசி கட்டண கொடுப்பனவு விங் கமாண்டர் (Wing Commander) பதவியிலிருந்து தொடங்கி (பொருந்தும் வகையில் மாதத்திற்கு ரூ. 1,875.00 முதல் ரூ. 3,750.00 வரை)

(13) ஆண்டுக்கு மூன்று தொகுப்பு விடுமுறை ரயில் பயண அனுமதி சீட்டுகள் (அதிகாரி, துணைவர் மற்றும் குழந்தைகளுக்கு)

(14) மெஸ் வசதிகளில் தங்கும் அதிகாரிகள் மாதத்திற்கு ஒருமுறை தங்கள் சொந்த ஊருக்கு பயணம் செய்ய, கூடுதல் ஒரு தொகுப்பு ரயில் அனுமதி சீட்டுகள் அல்லது பேருந்து கட்டணம் திருப்பிச் செலுத்துதல்

(15) சீருடைகள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (பொருந்துமானால் குடும்பத்தினருக்கும் உட்பட)

(17) வெளியே வசிக்க அனுமதி பெற்ற திருமணமான அதிகாரிகளுக்கு, 30 மைல் சுற்றளவில் வீடு முதல் பணியிடம் வரை பயணிக்க இலங்கை போக்குவரத்து வாரியத்தின் இலவச பேருந்து பாஸ் வழங்கப்படும்.

(18) பொறியியல் கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 15,000.00 (தகுதி பெற்ற பொறியியல் அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

(19) சேவை கொடுப்பனவு ரூ. 300.00, ரூ. 400.00 மற்றும் ரூ. 500.00 (பொருந்தும் வகையில் சேவையில் முடித்த ஆண்டுகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மருத்துவ மற்றும் பல் மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்படும்)

(20) கூடுதல் சேவை கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 1,500.00 (மருத்துவ மற்றும் பல் மருத்துவ அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

(21) 1/20 மாதாந்த கொடுப்பனவு - அடிப்படை சம்பளம் x 1/20 x2/3 (அதிகபட்சம்) மாதத்திற்கு 3 நாட்கள் (மருத்துவ மற்றும் பல் மருத்துவ அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

(22) கூடுதல் கடமைக்கான கட்டணங்கள் மாதத்திற்கு அதிகபட்சம் 120 மணிநேரம் (மருத்துவ மற்றும் பல் மருத்துவ அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

(23) தொலைபேசி கட்டண கொடுப்பனவு நிபுணர் மருத்துவர்கள் மாதத்திற்கு ரூ. 6,000.00 மற்ற மருத்துவர்கள் மாதத்திற்கு ரூ. 3,000.00

(24) சார்ட்டர்ட் பொறியியல் கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 15,000.00 முதல் ரூ. 30,000.00 வரை (சார்ட்டர்ட் பொறியியல் அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

(25) சார்ட்டர்ட் கட்டிடக்கலை கொடுப்பனவு மாதத்திற்கு ரூ. 15,000.00 முதல் ரூ. 30,000.00 வரை (சார்ட்டர்ட் பொறியியல் அதிகாரிகளுக்கு மட்டும் பொருந்தும்)

9. ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் : 1981 ஆம் ஆண்டின் விமானப்படை ஓய்வூதியம் மற்றும் பரிசுத்தொகைச் சட்டக் கோட்பாட்டின்படி (தேவையானபோது திருத்தங்களுடன்) ஓய்வூதியங்கள் / பரிசுத்தொகைகள் வழங்கப்படும். அனைத்து அதிகாரிகளும் ஆயுதப்படைகளுக்கான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் கட்டாய பங்களிப்பாளர்களாக இருப்பார்கள். பங்களிப்பு விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட விதிமுறைகளின்படி அமுலில் இருக்கும்.

10. **விண்ணப்பதாரர்களுக்கான வழிமுறைகள்:**

அ. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தின் அனைத்து பகுதிகளையும் கீழே கொடுக்கப்பட்ட வடிவத்திற்கு இணங்க சரியாகவும் ஒழுங்காகவும் பூர்த்தி செய்து, பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்: "முதன்மை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழில் பயிற்சி பள்ளி, ஏகல, கொடுகொட" இது 2026, யூன் 30 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்குள் சென்றடைய வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply என்ற இணையதளத்தின் மூலமாகவும் அனுப்பலாம். விண்ணப்பத்தை கொண்ட உறையின் மேல் "........................................... கிளை" அதிகாரத்திற்கான விண்ணப்பம் என்று குறிப்பிடப்பட வேண்டும். மூடும் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப் பங்கள் அல்லது இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு இணங்க இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

ஆ. அரசாங்க சேவை / கழகங்கள் / வாரியங்கள் / சிவில் நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை துறைத் தலைவர் / கழகம் / வாரியம் / சிவில் நிறுவனம் வழியாக அனுப்ப வேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்டால் விண்ணப்பதாரரை விடுவிப்பதாக உறுதிப்படுத்தும் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

இ. விண்ணப்பதாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply என்ற இணையதளத்தின் மூலம் அனுப்பலாம் அல்லது மேலே 10 (அ) பகுதியில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

ஈ. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும்போது அல்லது கேட்டுக்கொள்ளப்பட்டபோது, விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் அசல் பிரதிகளையும் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்:

(1) பிறப்புச் சான்றிதழ் (கல்வி குறியீட்டு நோக்கத்திற்காக வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படாது).

(2) தேசிய ஆளடையாள அட்டை.

(3) விண்ணப்பிக்கப்பட்ட கிளைக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளை உறுதிப்படுத்தும் அசல் சான்றிதழ்கள்.

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்ற தொழில் / தொழில்நுட்ப பயிற்சி / அனுபவச் சான்றிதழ்கள் (இருந்தால்).

(5) இரண்டு சமீபத்திய குணச்சான்றுகள் (06 மாதங்களுக்குள் பெறப்பட்டவை). இதில் ஒன்று கடைசியாக கல்வி பயின்ற பள்ளியின் முதல்வரிடமிருந்து, மற்றொன்று விண்ணப்பதாரரை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அறிந்த பொறுப்பான நபரிடமிருந்து அல்லது தற்போதைய வேலை வழங்குநரிடமிருந்து (பணியில் இருந்தால்) பெறப்பட்டிருக்க வேண்டும்.

(6) விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகளை உறுதிப்படுத்தும் அசல் சான்றிதழ்கள்.

(7) ஆறு மாதங்களுக்குள் வழங்கப்பட்ட கிராம அலுவலர் (Grama Niladhari) சான்றிதழ்.

(8) பள்ளி விட்டு வெளியேறும் சான்றிதழ்.

(9) கோப்பு குறியீட்டுடன் கூடிய சாதாரண கோப்பு (plain folder).

(10) கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட 2x2.5 அங்குல அளவிலான இரண்டு நிறப் புகைப்படங்கள்.

ந. கேட்கப்பட்டபோது தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

க. விண்ணப்பப்படிவத்துடன் எந்த ஆவணங்களும் அல்லது ஆவணங்களின் அசல் பிரதிகளும் இணைக்கப்படக்கூடாது.

ப. விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் அசல் பிரதிகள் இழந்தால், அதற்கு விமானப்படை பொறுப்பாகாது.

ர. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி, தொழில்முறை தகுதி, உயரம், வயது, மார்பு அளவு போன்ற அடிப்படை தேவைகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் ஆரம்ப நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் ஆரம்ப பரிசோதனையின் போது நிராகரிக்கப்படுவர்.

11. விண்ணப்பத்தில் உள்ள ஏதேனும் அறிக்கை தவறானதாக இருப்பதாக கண்டறியப்பட்டால், அந்த தவறான தகவல் தேர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரர் தகுதி நீக்கம் செய்யப்படுவார்; தேர்வுக்குப் பிறகு கண்டறியப்பட்டால் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

**12. தேர்வு நேர்முகம்:**

அ. மேற்குறித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஆரம்பத் தேர்வுகள் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், விமானப்படைத் தளபதி நிர்ணயிக்கும் நடைமுறை மற்றும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்பட வேண்டும். அனைத்து நேர்முகத் தேர்வுகள், நடைமுறை பரிசோதனை மற்றும் அதிகாரி தகுதி தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள், பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படும் இறுதி தேர்வு குழு முன்னிலையில் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

ஆ. நேர்முகத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, அந்தத் தேர்வு நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி ஆகியவை எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இதற்காக பயணச் செலவோ அல்லது பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

இ. ஒவ்வொரு முறையும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது, விண்ணப்பதாரர் மக்கள் பதிவுத்துறை வழங்கிய தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரரை பரிந்துரைக்க விரும்பும் எவரும், அவருக்கு சான்றிதழை வழங்கி பரிந்துரைக்க வேண்டும். எந்தவிதமான தலையீடு அல்லது தேர்வை பாதிக்க முயற்சிக்கும் செயலும், அந்த விண்ணப்பதாரர் தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கு காரணமாகும்.

உ. சேவைக்கு பொருத்தமற்றதாகக் கருதப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்படமாட்டாது.

**(விபி எதிரிசிங்க)**
WWV, RWP, RSP and three Bars, USP
fndu (china), psc, qhi,
எயார் மார்ஷல்,
விமானப்படைத் தளபதி.

இலங்கை விமானப்படை, தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
இல. 594, ஸ்ரீ ஜயவர்தனபுர
கோட்டை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

**அரசாணைபெற்ற அலுவலருக்கான விண்ணப்பப்படிவம்**
**இலங்கை நிரந்தர/ தொண்டர் விமானப்படையில் . . . . . . . . . பிரிவில்**

1. தேசிய இனம் : ..........................................................................................................................................
(இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக).

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு): ..........................................................................
..........................................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:.........................................................................................................

4. விண்ணப்பிக்கும் துறை :...........................................................................................................................

5. விண்ணப்பிக்கும் பிரிவு :...........................................................................................................................

6. நிரந்தர முகவரி :.......................................................................................................................................

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்:.........................................................................

8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள விமானப்படை முகாம் .....................................................................

9. பாடசாலை பற்றிய விபரங்கள்.....................................................................................................................

10. அஞ்சல் முகவரி : ......................................................................................................................................

11. e - mail முகவரி:... ...................................................................................................................................

12. பிறந்த திகதி :............................................................................................................................................

(வயது முதலாம் குழு 2026, ஓகத்து 01 ஆந் திகதி / இரண்டாம் குழு 2026, திசெம்பர் 01 ஆந் திகதி நிலவரப்படி)

| விண்ணப்பிக்கும் குழு | 2026 ஆம் ஆண்டு முதலாம் குழு / 2026 ஆம் ஆண்டு இரண்டாம் குழு |
|---|---|
| வயது | வருடங்கள் ............ மாதங்கள் ............ நாட்கள்.............. |

13. உயரம் : சென்றி மீட்டரில் ........................................................... (.அடி............அங்குலம்.....................)

14. மார்பு அளவு: அஙகுலம் .........................................

15. நிறை : கிலோ கிராம் .........................................

16. மாவட்டம்: ...............................................................................................................................................

17. தேர்தற் தொகுதி :.......................................................................................................................................

18. கிராம அலுவலர் பிரிவு :.............................................................................................................................

19. தொலைபேசி இலக்கம். :................................................................... WhatsApp இலக்கம:........................................

20. சிவில் அந்தஸ்து: திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா :..................................................................................

21. பாடசாலை அத்துடன் அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் –

| *பாடசாலை/சர்வகலா சாலை பெயர்கள்* | *பரீட்சை* | *ஆண்டு மற்றும் சுட்டிலக்கம்* | *பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட)* | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த (உ. த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| பல்கலைக்கழக பெயர் | | | | |
| பல்கலைக்கழக தொழில் தகைமைகள் | பட்டம் அல்லது டிப்ளோமா | | | |
| வேறு | எந்தவொரு தொழில்முறை அமைப்பிலும் உறுப்பினர் | | | |

22. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -

23. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலப்பகுதி* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

24. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| *முழுப்பெயர்* | *தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்* | *தொழில்* | | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|---|
| | | *முன்பு* | *தற்போதைய* | |
| தந்தை : | | | | |
| தாய் : | | | | |
| சகோதர /சகோதரிகள் : | | | | |
| | | | | |
| | | | | |

25. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையிலோ அல்லது ஏனைய ஆயுதப் படையிலோ சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் அல்லது சேவையில் இருந்து விலகி இருந்தால் விலகிய முறையினை குறிப்பிடுக.(சட்டபூர்வமாக அல்லது சட்டத்திற்கு புரம்பாக)

| *நிலை* | *பெயர்* | *பிரிவு / துறை* | *தற்போதைய விபரம்* |
|---|---|---|---|
| | | | |

26. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் -(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| *தொடர் இல.* | *விபரம்* | *பாடசாலை* | *மாகாணம்* | *தேசிய* | *சர்வதேச* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

27. புறம்பான சாதனைகள் பாடசாலை / பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

28. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை -

29. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக.

30. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக.

31. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் .

32. **நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -**

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

33. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆனையாக உறுதிப்படுத்துகிறேன் . இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத்' தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து அறிந்து கொண்டேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பகாரரின் கையொப்பம்

34. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை –

அ. இலங்கை விமானப் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 33 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இவருக்கு நான், பெற்றோர் / பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொருப்பாளியாவேன் -

(1) பயிற்சியின்போது ஆனைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திருப்பக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடுக்கு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதியற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும் .

.....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) ...................................................................
முகவரி : .......................................................................................................

...................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) ...................................................................
முகவரி : .......................................................................................................

......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) ...................................................................
முகவரி : .......................................................................................................

06 - 237/1

**இலங்கை நிலையான / தொண்டர் விமானப்படை**
**விமான வீரர்கள் / வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்**

1. இலங்கை விமானப்படையின் நிலையான / தொண்டர்ப் படையில் விமான வீரர்கள் / விமான வீராங்கனைகளுக்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்கான குறைந்தபட்ச மற்றும் குறிப்பிட்ட தகுதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அடிப்படைக் கல்வித் தகைமைகள் :**

2 (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண (S) தரத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**தேவையான தகைமைகள் :**

3. தொழில்களுக்கு ஏற்ப தேவையான தகைமைகள் பின்வருமாறு:

அ. **விமான பொறியியல் தொழில்கள் (ஆண் / பெண்) – நிலையான / தொண்டர்**

(1) ஏர்/ப்ரேம் தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிலையான
(2) ஏரோ இன்ஜின் தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிலையான
(3) ஏரோ மின்சார & கருவி தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிலையான
(4) பாதுகாப்பு உபகரண தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் ஆங்கிலத்தில் குறைந்தது சாதாரண (S) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், கணிதம் அல்லது அறிவியல் பாடங்களில் குறைந்தது கிரெடிட் (C) தேர்ச்சி அவசியமாகும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level) பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம், கணிதம், இயற்பியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்கள் அடங்கியிருக்க வேண்டும். மேலும் இயற்பியல் , இரசாயனவியல், உயிரியல் அல்லது கணிதத்தில் (க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சைக்கு கிரெடிட் தேர்ச்சிக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண் பெறப்பட்டிருக்க வேண்டும்.

மற்றும்

தொழிலுக்கு பணியாளர்களை இணைக்கும்போது தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் (Electronics / Electrical) துறையில் இரண்டு (02) ஆண்டுகள் முழுநேர (NVQ) நிலை III தகுதி பாடநெறியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் மற்றும் தொழில்களுக்காக தேர்வு செய்யும்போது நம்பகமான நிறுவனம் ஒன்றிலிருந்து மெக்கானிக்கல் துறையில் நிலை தகுதி / பயிற்சி மற்றும் பணியியல் அனுபவம் பெற்றிருப்பது கூடுதல் நன்மையாக கருதப்படும்.

(5) ஏர்ஃப்ரேம் தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – தொண்டர்

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் / விஞ்ஞான பாடங்களில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level பரீட்சைகளில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம் மற்றும் அனைத்து விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல்,உயிரியல்) அல்லது கணிதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

மற்றும்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் வெற்றிகரமாக முடித்திருக்க பொறியியல் வடிவமைப்பு தொழில்நுட்ப வல்லூநர் பாடநெறி சான்றிதழ் வேண்டும். இது (தேசிய தொழில்வாழ்க்கை தகுதி நிலை III அல்லது IV அல்லது அதுக்கு சமமானதாக இருக்க வேண்டும்.)

**ஆ. பொது பொறியியல் தொழில்கள் (ஆண் / பெண்) – நிலையான**

(1) ஆயுத இயந்திர நிபுணர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் / விஞ்ஞானப் பாடங்களில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம் மற்றும் அனைத்து விஞ்ஞானப்பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல், உயிரியல்) அல்லது கணிதம் ,ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

(2) மோட்டார் போக்குவரத்து மெக்கானிக் (ஆண்) – நிலையான
(3) விமான தரை ஆதரவு உபகரண மெக்கானிக் (ஆண்) – நிலையான
(4) மேற்பரப்பு தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிலையான
(5) ஏர் /போட்டோ (ஆண் / பெண்) – நிலையான
(6) தொழில்நுட்ப மர தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிலையான
(7) விமான உற்பத்தி வெல்டர் (ஆண்) – நிலையான
(8) டர்னர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் / அறிவியல் பாடங்களில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம் மற்றும் அனைத்து அறிவியல் பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல், உயிரியல்) அல்லது கணிதம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

மற்றும்

தொழில்நுட்பக் கல்லூரி அல்லது நம்பகமான நிறுவனம் ஒன்றிலிருந்து நிலை தகுதி / பயிற்சி பெற்றிருப்பதும் தொடர்புடைய துறையில் பணியியல் அனுபவம் கொண்டிருப்பதும் கூடுதல் நன்மையாக கருதப்படும்.

(9) மோட்டார் போக்குவரத்து இயக்குநர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

இலகு வாகனம் அல்லது கனரக வாகனத்திற்கான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இ. மின்னணு தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியியல் தொழில்கள் (ஆண் / பெண்) – நிலையான

(1) ஏர் ரேடியோ தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிலையான

(2) தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் அறிவியல் அல்லது கணித பாடங்களில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெறுவது அவசியமாகும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கிலம் கணிதம் இயற்பியல் இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்கள் அடங்கியிருக்க வேண்டும். மேலும் இயற்பியல் இரசாயனவியல் உயிரியல் அல்லது கணிதத்தில் கிரெடிட் தேர்ச்சிக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(3) தொலைபேசி இயக்குநர் (ஆண்) – நிலையான
(4) விமான தொடர்பாளர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(5) கணினி தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ்/ கணிதம் விஞ்ஞான மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் கணிதம் விஞ்ஞான மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும்

நம்பகமான நிறுவனம் ஒன்றிலிருந்து (NVQ) நிலை தகுதி பெற்றிருப்பதும் தொடர்புடைய துறையில் பணியியல் அனுபவம் கொண்டிருப்பதும் தொழிலுக்கான விண்ணப்பதாரர்களுக்கு கூடுதல் நன்மையாக கருதப்படும்.

ஈ. மருத்துவ தொழில்கள் (ஆண்) – நிலையான / தொண்டர்

(1) நர்சிங் உதவியாளர் (ஆண்) – நிலையான / தொண்டர்

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் சிங்களம் / தமிழ் கணிதம் / அறிவியல் மற்றும் மற்றொரு பாடத்தில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். அவை அனைத்து விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல்,உயிரியல்) அல்லது கணிதம் மற்றும் மற்றொரு ஒரு பாடம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் கிரெடிட் தேர்ச்சிக்கு தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அறிவியல் / கணிதம் / விவசாயம் பிரிவுகளில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பது தேர்விற்கான கூடுதல் நன்மையாகவும் சுகாதார அமைச்சகத்தின் கீழ் எதிர்கால மேம்பட்ட பயிற்சிகளுக்கான தகுதியாகவும் கருதப்படும்.

(2) பல் மருத்துவ உதவியாளர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் சிங்களம் / தமிழ் மொழி கணிதம் அறிவியல் மற்றும் மற்றொரு ஒரு பாடத்தில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE)பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் அனைத்து விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல்,இரசாயனவியல், உயிரியல்) கணிதம் மற்றும் மற்றொரு ஒரு பாடம் ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் கிரெடிட் தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

மேலும் எந்தவொரு பிரிவிலும் (முன்னுரிமையாக உயிரியல் பிரிவு) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்பது கூடுதல் நன்மையாக கருதப்படும்.

உ. நிர்வாகத் தொழில்கள் (ஆண் / பெண்) – நிலையான

(1) நிர்வாக உதவியாளர் (ஆண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழிகள் மற்றும் கணிதம் ஆகியவற்றில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

கணினி அறிவு இருப்பது கூடுதல் தகுதியாக கருதப்படும்.

(2) கணக்கு உதவியாளர் (ஆண் / பெண்) – நிலையான

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் கணிதம் / வணிகம் கணக்கு ஆய்வுகள் பாடத்தில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணிதம் அல்லது கணக்கியல் பாடத்தில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் கிரெடிட் தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கணினி அறிவு இருப்பது கூடுதல் தகுதியாக கருதப்படும்.

ஊ செயல்பாட்டு தொழில்கள் (ஆண்) – நிலையான / தொண்டர்

(1) **செயல்பாட்டு விமானம் (விமான போக்குவரத்து சேவை உதவியாளர் மற்றும் விமான பாதுகாப்பு அமைப்பு இயக்குநர்) – ஆண் – நிலையான**

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி மற்றும் ஆங்கில மொழியில் குறைந்தது கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் (க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சைக்கு கிரெடிட் தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

(2) **தீயணைப்பு வீரர் (ஆண்) – நிலையான**

(க.பொ.த.) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

செல்லுபடியாகும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் இருப்பது கூடுதல் தகுதியாக கருதப்படும்.

(3) **தரை செயல்பாடுகள் (ஆண் / பெண்) – நிலையான (பெண்) – தொண்டர்**

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(4) **தரை செயல்பாடுகள் (ஆண்) – தொண்டர்**

விண்ணப்பதாரர் (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) சாதாரண தேர்ச்சிகளை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சையில் குறைந்தது இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்தேர்ச்சிகள் (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சைக்கு சாதாரண தேர்ச்சிக்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் இத்தேர்ச்சிகள் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் பெற்றிருக்க வேண்டும்.

(5) நாய் கையாள்பவர் (ஆண்) - நிரந்தரப் பணி

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை: அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(6) விவசாய உதவியாளர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஏ. பொருளாதார (லாஜிஸ்டிக்) துறைகள் (ஆண்) – நிரந்தர / தொண்டர்

(1) லாஜிஸ்டிக் உதவியாளர் (ஆண்) – நிரந்தர
(2) விமான எரிபொருள் தரக் கட்டுப்பாளர் (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண தேர்ச்சி மேலும் கணிதம் / விஞ்ஞானம்/ வணிகம் மற்றும் கணக்கியல் பாடங்களில் ஒரு தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் அதில் ஆங்கிலம் உட்பட தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல் , இரசாயனவியல் உயிரியல்) அல்லது கணிதம் அல்லது கணக்கியல் ஆகியவற்றில் அனைத்திலும் தேர்ச்சி அவசியம். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் (க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் சாதாரண தரம் பெற தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

கணினி அறிவு இருப்பது கூடுதல் தகுதியாக கருதப்படும்.

(3) கேட்டரிங் உதவியாளர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(4) தரை பராமரிப்பு பணியாளர் (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

சுற்றுலா வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களில் விருந்தோம்பல் துறையில் அனுபவம் மற்றும் தொழில்முறை தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (உதா: வேட்டர் / பார்மேன் / ஹவுஸ் கீப்பர் / ரூம் பாய் / ரூம் அட்டெண்டண்ட் / ரூம் ஸ்டீவர்ட்)

ஏ. பிரவோஸ்ட் (ஆண்) – நிரந்தர

(1) விமானப்படை காவல்துறை (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் கணிதம் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் அதில் ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

உயரத்தில் 5' 8" மற்றும் அதற்கு மேல் உள்ள ஆண் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஐ. நிகழ்கலை துறைகள் (ஆண் / பெண்) – நிரந்தர

(1) நடனக் கலைஞர் (ஆண் / பெண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE)பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

பாரம்பரிய மற்றும் மேற்கத்திய நடன வகைகளை நிகழ்த்தும் திறன் இருக்க வேண்டும். நடனத்திற்கேற்ற உடல் அமைப்பு நாட்டுப்புறப் பாடல் பாடும் திறன் நடன இசைக்கருவி வாசிக்கும் திறன் சவுண்ட் கன்ட்ரோல் செய்யும் திறன் மற்றும் மேக்கப் செய்யும் திறன் ஆகியவை சிறப்பு தகுதிகளாக கருதப்படும்.

(2) இசைக் கலைஞர் (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE)பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

மேற்கத்திய / கிழக்கத்திய இசைக்கருவிகளை வாசிக்கும் திறன் பாடும் திறன் மேற்கத்திய / கிழக்கத்திய இசை குறியீடுகளை வாசிக்கும் மற்றும் எழுதும் திறன் ஆகியவை இருக்க வேண்டும். (க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் இசைப் பாடத்தில் (மேற்கத்திய / கிழக்கத்திய) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இசை தரப்படுத்தப்பட்ட கோட்பாட்டு அல்லது நடைமுறை பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருப்பதும் பள்ளி மேற்கத்திய / கேடட் / பிராஸ் பாண்டின் உறுப்பினராக இருப்பதும் சிறப்பு தகுதிகளாக கருதப்படும்.

ஒ. உடற்கல்வி பயிற்றுநர் (ஆண் / பெண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தேர்வின்போது தேசிய மட்ட விளையாட்டு சாதனைகள் சிறப்பு தகுதிகளாக கருதப்படும். ஆரம்ப நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களும் சிறப்பு உடற்தகுதி பரிசோதனையில் தேர்ச்சி பெற வேண்டும்.

ஓ. கட்டுமான பொறியியல் துறைகள் (ஆண்) – நிரந்தர / தொண்டர்

(1) இரும்புக்கலைஞர் & வெல்டர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்
(2) மர தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்
(3) கட்டுமான தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்
(4) ஏர் கண்டிஷனர் மற்றும் குளிர்பதன மெக்கானிக் (ஆண்) – நிரந்தர
(5) மெக்கானிக்கல் தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை: அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மூன்று நிலை அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி, அல்லது மூன்று நிலைக்கு சமமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி சான்றிதழ் மற்றும் தொடர்புடைய துறையில் பணியாற்றிய அனுபவம் கூடுதல் முன்னுரிமையாக கருதப்படும்.

(6) அலுமினியம் தயாரிப்பு தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிரந்தர

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் ஒரு சாதாரண தரத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை: அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

தொழில்நுட்பக் கல்லூரி (NVQ Level III) சான்றிதழ் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது 01 ஆண்டு பணியனுபவம் இருக்க வேண்டும்.

(7) அளவையியல் உதவியாளர் (ஆண்) – நிரந்தர / தொண்டர்

(க.பொ.த) சாதாரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் ஒரு சாதாரண (S) தரத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து பெறப்பட்ட அளவு மதிப்பீட்டில் தேசிய சான்றிதழ் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட தகுதி (தேசிய தொழில்முறை தகுதிகள்/சர்வதேச தொழுல்முறை தகுதிகள் இருப்பது கூடுதல் முன்னுரிமையாக கருதப்படும்.

இலங்கை நிரந்தர / தொண்டர் விமானப்படையில் நேரடி சேர்க்கைக்கான விமானப்படை ஆண்கள் / பெண்களுக்கான வெற்றிடங்கள்

**5. தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள்:**

அ. மின்னணு தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியியல் துறைகள் (ஆண் / பெண்) – நிரந்தர / தொண்டர்

(1) விமான வானொலி தொழில்நுட்ப நிபுணர் (ஆண்) – நிரந்தர
(2) தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிபுணர் (ஆண் / பெண்) – நிரந்தர

(க.பொ.த) சாதசரண நிலைப் பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண (S) தரத் தேர்ச்சி, மேலும் கணிதம் / விஞ்ஞானம் பாடங்களில் ஒரு கிரெடிட் தரத் தேர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) பரீட்சை அல்லது Cambridge International Ordinary Level பரீட்சை: அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் 06 பாடங்களில் அதில் ஆங்கிலம் உட்பட தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல், உயிரியல்) அல்லது கணிதத்தில் தரம் பெறுவது கட்டாயமாகும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் க.பொ.த.) சாதாரண தரப் பரீட்சையில் கிரெடிட் தரம் பெற தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

மற்றும்

தேசிய தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் (மின்னணு / தொலைத்தொடர்பு )துறையில் நடத்தப்படும் பொறியியல் கைத்தொழில் பயிற்சி தொடர்பான தேசிய சான்றிதழ் பாடநெறியில் இரண்டு ஆண்டுகள் முழுநேரமாக வெற்றிகரமாக நிறைவு செய்தல், தேசிய தொழில்முறை தகுதி நிலை IV (NVQ Level IV) க்கு சமமாகக் அல்லது கருதப்பட வேண்டும்.

அல்லது

தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் (மின்னணு / மின்சாரம்) துறையில் மூன்று வருட தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

(3) வானொலி வானியல் தொழில்நுட்பவியலாளர் (ஆண்) - தொண்டர் (சீருடை அல்லாத)

(க.பொ.த.) சாதாரண தரத் தேர்வில் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரணதேர்ச்சி மற்றும் கணிதம் / விஞ்ஞானம் பாடத்தில் கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள்: இரண்டு அமர்வுகளை மீறாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விஞ்ஞான பாடங்கள் மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் GCE O/L தேர்வில் கிரெடிட் (C) தேர்ச்சிக்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமானது அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும்

தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணு / தொலைத்தொடர்பு துறையில் இரண்டு வருட முழுநேர தேசிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும். இது தேசிய தொழில்முறை தகுதி IV (NVQ Level IV) க்கு சமமாக கருதப்படும்.

அல்லது

தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மின்னணு / மின்சாரம் துறையில் மூன்று வருட தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) படிப்பை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

ஆ. நிகழ்கலைத் துறைகள் (ஆண் / பெண்) - நிரந்தர

(1) இசைக்கலைஞர் (ஆண் / பெண்) - நிரந்தர

(க.பொ.த) சாதரண தரத் தேர்வில் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

மேற்கு / கிழக்கு இசைக்கருவிகளை வாசிக்கும் திறன் பாடும் திறன் மேற்கு / கிழக்கு இசை குறியீடுகளை வாசித்து எழுதும் திறன் இசை பாடத்தில் தேர்ச்சி இசை தரப்படுத்தப்பட்ட தியரி அல்லது நடைமுறை தேர்வில் தேர்ச்சி பள்ளி மேற்கு இசைக்குழு / கேடட் இசைக்குழு / ப்ராஸ் பாண்ட் உறுப்பினராக இருப்பது ஆகியவை சிறப்பு தகுதிகளாக கருதப்படும்.

பின்வரும் இசைக்கருவிகளை வாசிப்பதில் சிறப்பு திறன் கொண்ட விண்ணப்பதாரர்கள்:
•லீட் கிட்டார்
•பேஸ்கிட்டார்
•தப்லா
•கீபோர்ட்
•வயலின்
•புல்லாங்குழல்
•சவுண்ட் கண்ட்ரோலர்
• டிஜே (ஆண் / பெண்)

இ. **கணக்காய்வு துறை (ஆண் / பெண்) - நிரந்தர**

(1) கணக்காய்வு உதவியாளர் (ஆண் / பெண்) - நிரந்தர

(க.பொ.த) மேம்பட்ட நிலைத் தேர்வில் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சாதாரண தேர்ச்சி மேலும் கணிதம் / வணிகம் மற்றும் கணக்கு ஆய்வு பாடங்களில் கிரெடிட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள்: இரண்டு அமர்வுகளை மீறாமல் ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் கணிதம் அல்லது கணக்கியல் பாடத்தில் கட்டாயமாக இருக்க வேண்டும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் (க.பொ.த) மேம்பட்ட நிலை கிரெடிட் தேர்ச்சிக்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமானது அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும்

வர்த்தக பிரிவில் (க.பொ.த) மேம்பட்ட நிலை தேர்வில் மூன்று பாடங்களில் சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவளம் நிலை I (AAT Stage I) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

அல்லது

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவளம் நிலை II (AAT Stage II) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

அல்லது

அரசு நிறுவனம் அல்லது அரசால் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்தில் வழங்கப்படும் படிப்பின் முதல் ஆண்டு தேர்ச்சி

அல்லது

அரசு நிறுவனம் அல்லது அரசால் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்தில் வழங்கப்படும் படிப்பின் முதல் ஆண்டு தேர்ச்சி

மற்றும்

கணக்காய்வு மற்றும் கணக்கியல் துறையில் குறைந்தபட்சம் ஆறு (06) மாதங்கள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**ஈ. மருத்துவத் துறைகள் (ஆண்) - தொண்டர்**

(1) நர்சிங் உதவியாளர் (ஆண்) – தொண்டர்

(க.பொ.த.) சாதாரண தரத் தேர்வில் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் ஆங்கில மொழி அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள் இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், இதில் ஆங்கிலம் உட்பட விஞ்ஞான பாடங்கள் (இயற்பியல், இரசாயனவியல்,உயிரியல்) அனைத்திலும், கணிதத்திலும் Grade கட்டாயமாக இருக்க வேண்டும். மேலும் பெறப்பட்ட மதிப்பெண்கள் (க.பொ.த.) சாதாரண தரத் தேர்வில் சாதாரண தேர்ச்சிக்குத் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களுக்கு சமமானது அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

மற்றும்

அரசாங்க அல்லது நம்பகமான தனியார் மருத்துவ நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒரு (01) ஆண்டு கால நர்சிங் பயிற்சி (கிளினிக்கல் பயிற்சியுடன்) பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதற்கான தேவையான சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும். அல்லது NVQ Level III அல்லது அதற்கு மேற்பட்ட நர்சிங் உதவியாளர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

**உ. செயல்பாட்டு துறைகள் (ஆண்) – தொண்டர் (சீருடை அல்லாதது)**

(1) விவசாய உதவியாளர் (ஆண்) – தொண்டர் (சீருடை அல்லாதது)

விண்ணப்பதாரர் (க.பொ.த.) சாதாரண தரத் தேர்வில் தேர்வு எழுதியிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகளில் தேர்வு எழுதியிருக்க வேண்டும்.

அல்லது

வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் (நர்சரி மேலாண்மை வீட்டுத் தோட்டப் பயிரிடல் Protected Culture மொட்டு கட்டுதல் குத்துச் சேர்த்தல், தேனீ வளர்ப்பு, உணவு செயலாக்கம்) மற்றும் கால்நடை மேலாண்மை பாடங்களில் (NVQ) நிலை தகுதி பெற்றிருப்பது கூடுதல் நன்மையாக கருதப்படும்.

இயக்குதல் நான்கு சக்கர டிராக்டர் இயக்குதல், அரிசி செயலாக்க இயந்திரங்கள், மைக்ரோ நீர்ப்பாசன முறைமை மற்றும் இதர செயல்பாடுகளில் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும்.

வெல்டிங், பிளம்பிங், கட்டிட வேலை (Masonry), மின்சார வயரிங், வாகன திருத்தம் மற்றும் பேயிண்டிங், குளிரூட்டும் அறை பழுது கண்டறிதல் மற்றும் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் போன்ற சிறப்பு திறன்கள் கூடுதல் தகுதிகளாக கருதப்படும்.

**ஊ. நிர்வாகக் கல்வித் துறை - தொண்டர் (சீருடை அல்லாதது)**

(1) முன்பள்ளி ஆசிரியர் (பெண்) - தொண்டர் (சீருடை அல்லாதது)

க.பொ.த. (சா. / த.) தேர்வில் இரண்டு அமர்வுகளை (sittings) மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழிகளில் ஒன்று மற்றும் ஆங்கில மொழியில் கிரெடிட் (Credit) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள்: இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், இதில் ஆங்கிலத்தில் கிரெடிட் (Credit) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றில் முன்பள்ளி கல்வி (Pre-school Teaching) தொடர்பான டிப்ளோமா பெற்றிருக்க வேண்டும்.

மேலும்

முன்பள்ளி ஆசிரியராக குறைந்தபட்சம் ஆறு (06) மாதங்கள் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

பதிவு செய்யப்பட்ட ஆரம்ப குழந்தை கல்வி மையத்தில் (Early Childhood Education Centre) ஆறு (06) மாதங்களுக்கும் அதிகமான நடைமுறை பயிற்சி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

கூடுதல் தகுதி:

முன்பள்ளி ஆசிரியர் தொடர்பான NVQ Level 3 அல்லது NVQ Level 4 தகுதி பெற்றிருப்பது கூடுதல் தகுதியாக கருதப்படும் மற்றும் முன்னுரிமை வழங்கப்படும்.

எ. **பொதுப் பொறியியல் துறைகள் (ஆண்) - தொண்டர்**

(1) மோட்டார் போக்குவரத்து இயக்குநர் (ஆண்) - தொண்டர்

க.பொ.த (சா .த) தேர்வில் இரண்டு அமர்வுகளை (sittings) மீறாமல் 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழியில் சாதாரண (S) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள்: இரண்டு அமர்வுகளை மீறாமல் 04 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

க.பொ.த (சா .த) தேர்வில் 04 பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்கு பதிலாக, NVQ Level III சான்றிதழ் இந்த தொழிலுக்கு நுழைவு தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏ. **லாஜிஸ்டிக் துறைகள் (ஆண் / பெண்) - தொண்டர்**

(1) யூனிஃபார்ம் அவுட் ஃபிட்டர் (ஆண் / பெண்) - தொண்டர்

க.பொ.த. (சா./த.) தேர்வில் இரண்டு அமர்வுகளை (sittings) மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சிங்களம் / தமிழ் மொழிகளில் சாதாரண (S) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகள்: இரண்டு அமர்வுகளை மீறாமல் 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

நம்பகமான நிறுவனத்திலிருந்து NVQ Level III அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி பெற்றிருக்க வேண்டும் மற்றும் நெசவுத் துறையில் (Textile Industry) இயந்திர இயக்குநராக குறைந்தபட்சம் இரண்டு (02) வருட பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும்.

மாதிரி தயாரித்தல், தரக்கட்டுப்பாடு மற்றும் இயந்திரங்களைக் கையாளுதல் ஆகியவை கூடுதல் தகுதிகளாக கருதப்படும். மேலும் விமானப்படை நடாத்தும் இறுதி நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் கட்டாயமாகும்.

5. **சிறப்பு குறிப்புகள்:**

அ. Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) அல்லது Cambridge International Ordinary Level தேர்வுகளுடன் சிங்களம் அல்லது தமிழ்மொழியில் சாதாரண (S) தேர்ச்சி இல்லாத விண்ணப்பதாரர்கள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து 05 ஆண்டுகளுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சி தரத்தை (pass grading) பெற வேண்டும்.

ஆ. NVQ Level 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி அல்லது SLQF Level 1 அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் க.பொ.த (சா./த.) தேர்வுக்கு மாற்றாக கருதப்படும். அதேபோல், NVQ Level 4 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி அல்லது SLQF Level 2 அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் க.பொ.த. (உ./த.) தேர்வுக்கு மாற்றாக நேரடி சேர்க்கை (Direct Entry) விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் கருதப்படும்.

6. **பிற தேவைகள்:**

அ. இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் சேர்வதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொதுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(1) குடியுரிமை - இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்.
(2) வயது - 2026, ஓகத்து 01 நிலவரப்படி – 01வது தொகுதி
2026, திசெம்பர் 01 நிலவரப்படி – 02வது தொகுதி

**நிரந்தர**
ஆண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 23 வயது
பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 22 வயது

**தொண்டர்**
ஆண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 28 வயது
ஆண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 32 வயது
(வேளாண் உதவியாளர் – தொண்டர் சீருடை அல்லாத பதவிக்கு மட்டும்)
பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 26 வயது

**நேரடி சேர்க்கை– நிரந்தர / தொண்டர்**
ஆண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 28 வயது
பெண்: குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 26 வயது

(3) உயரம்
ஆண்: 5 அடி 3 அங்குலம் (159 செ.மீ.) அல்லது அதற்கு மேல்
பெண்: 5 அடி 1 அங்குலம் (154 செ.மீ.) அல்லது அதற்கு மேல்
(4) உடல் எடை
ஆண்: $17 < BMI < 26$
பெண்: $17 < BMI < 25$
(5) நிறக்காட்சி தரநிலை CP2
(6) ஒரு கண்ணில் 6/9, மற்றொரு கண்ணில் 6/6 மற்றும் இருகண் பார்வைத் தெளிவு 6/6 (கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்கள் இல்லாமல்)
(7) மார்பு அளவு ஆண்: 32 அங்குலம்
(8) திருமண நிலை
நிரந்தர : திருமணமாகாதவர்
தொண்டர் மற்றும் நேரடி சேர்க்கை திருமணமானவர் / திருமணமாகாதவர்

(அ) நிரந்தர விமான வீரர் / வீராங்கனை விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவராக இருக்க வேண்டும். மேலும் சேவையில் இணைந்த தினத்திலிருந்து நான்கு (04) ஆண்டுகள் நிறைவு பெறும் வரை மற்றும் அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி முடிந்த பின் ஒரு (01) ஆண்டு நிறைவு பெறும் வரை, இதில் எது பின்னர் வருகிறதோ அதுவரை திருமணம் செய்ய அனுமதி இல்லை.

(ஆ) 25 வயதுக்கு மேல் சேர்க்கப்படும் விமான வீரர் / வீராங்கனைகள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து ஒரு (01) வருடம் நிறைவு பெற்ற பின் மற்றும் Basic Combat Course மற்றும் ஆகியவற்றை முடித்த பின் திருமணம் செய்ய தகுதியுடையவர்கள்.

(இ) நிரந்தர / தொண்டர் / நேரடி சேர்க்கை விமான வீரர் / வீராங்கனைகள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து ஒரு (01) வருடம் நிறைவு பெற்ற பின் மற்றும் Basic Combat Course முடித்த பின் திருமணம் செய்ய தகுதியுடையவர்கள்.

(ஈ) நடனத் துறை (Dancer Trade) விமான வீராங்கனைகள், சேவையில் இணைந்த தினத்திலிருந்து ஐந்து (05) ஆண்டுகள் நிறைவு பெறும் வரை திருமணம் செய்ய அனுமதி இல்லை.

7. விண்ணப்பதாரர்கள் தேவையான கல்வித் தகுதிகளை கொண்டிருக்காவிட்டால் அல்லது 03, 04 மற்றும் 06 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாவிட்டால் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் நேர்முகத் தேர்விற்கு வருகை தரும் போது உயரம், எடை, மார்பு அளவு மற்றும் பார்வைத் திறன் அளவிடப்படும். குறிப்பிட்ட தரநிலைக்கு கீழ் உள்ள உயரம், எடை, மார்பு அளவு மற்றும் பார்வைத் திறன் கொண்ட விண்ணப்பதாரர்கள், சிறப்பு திறன்கள் இல்லாத பட்சத்தில் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேற்கண்ட எந்தவொரு முன் நிபந்தனையையும் பூர்த்தி செய்யாதிருந்தாலும், சிறப்பு திறன் அல்லது தகுதி கொண்ட எந்தவொரு விண்ணப்பதாரரும், இலங்கை விமானப்படையின் தேவைக்கேற்ப, விமானப்படை தளபதியின் விருப்ப அதிகாரத்தின் (discretion) அடிப்படையில் பரிசீலிக்கப்படலாம். ஆனால் அவர் இலங்கை விமானப்படையின் நலனுக்காக தேவையான தொழில்முறை / சிறப்பு தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

8. விளையாட்டுத் துறையில் குறிப்பிடத்தக்க (சிறந்த) சாதனைகள் பெற்றிருப்பவர்களுக்கு உரிய முன்னுரிமை மற்றும் கவனம் வழங்கப்படும்.

9. சேவை நிபந்தனைகள்:

அ. விண்ணப்பதாரர் ஆரம்பத்தில் நிரந்தர அல்லது தொண்டர் அடிப்படையில் விமானப்படையில் விமான வீரர்/ வீராங்கனையாக சேர்க்கப்படுவார் மற்றும் அடிப்படை போர்ப் பயிற்சி (Basic Combat Training Course) மேற்கொள்ள வேண்டும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின் (பயிற்சியின் காலம் தொடர்புடைய தொழில் (trade) அடிப்படையில் மாறுபடும்), அவர் சம்பந்தப்பட்ட தொழிலுக்கு ஏற்ப விமான வீரர் / வீராங்கனையாக சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

ஆ. விமான வீரர் / வீராங்கனைகள் இலங்கை அல்லது வெளிநாட்டில் பயிற்சி பெற வேண்டியிருக்கும். இது விமானப்படை தளபதி, பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஆலோசித்து தீர்மானிக்கும் இடத்தில் நடைபெறும்.

இ. விமான வீரர் / வீராங்கனையாக பயிற்சி காலத்திலும் அதற்குப் பிந்தைய காலத்திலும், அனைத்து பணியாளர்களும் இலங்கை விமானப்படை சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஈ. ஒவ்வொரு விமான வீரர் / வீராங்கனைக்கும் சீருடைகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

உ. பயிற்சிக் காலத்தில் விமான வீரர் / வீராங்கனைகள் விமானப்படை மெஸ்ஸ்களில் (Air Force Messes) தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கப்படும்.

ஊ. பயிற்சிக் காலத்தில் ஒரு விமான வீரர் / வீராங்கனை தன்னிச்சையாக தனது விண்ணப்பத்தை விலக்கிக் கொண்டால், அந்த நபருக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இதுவரை மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அரசுக்கு மீள செலுத்த வேண்டும்.

எ. பயிற்சிக் காலத்தில் எந்த நேரத்திலும் ஒரு விமான வீரர் / வீராங்கனை ஒழுங்கு மீறல் அல்லது அவரது/அவளது கட்டுப்பாட்டிற்குள் உள்ள காரணங்களால் தகுதியற்றவர் என அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டால், அந்த நபரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர், அவரின் பயிற்சிக்காக இலங்கை விமானப்படை மேற்கொண்ட அனைத்து செலவுகளையும் மீள செலுத்த வேண்டும். மேலும் இதற்காக இலங்கை அரசின் சார்பில் செயல்படும் விமானப்படை தளபதியுடன் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

ஏ. (க) மற்றும் (ப) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை ஒட்டியதாக, விண்ணப்பப்படிவத்தின் 32 ஆம் பகுதியிலுள்ள அறிவிப்பை பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பமிட்டு, விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இந்த விண்ணப்பதாரர்கள் விமான வீரர் / வீராங்கனையாக நியமிக்கப்படுவதற்கு முன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பின்னர் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

ஐ. 1 முதல் 6 வரை உள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் ஆரம்ப நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். அதில் வெற்றி பெறுவோர் மருத்துவ பரிசோதனைக்கு அழைக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை விமானப்படையின் ஏற்பாட்டில் மருத்துவ மற்றும் உடல் தகுதி பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். இலங்கை விமானப்படை மருத்துவ வேலை தகுதி தரநிலைகளுக்கு ஏற்ப தகுதி உறுதி செய்யப்படும். இந்த பரிசோதனைகளில் வெற்றி பெறுவோர் இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்த நேர்முகத் தேர்வுகள் மற்றும் பரிசோதனைகளின் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஒ. திருமணமாகாத விமான வீரர் / வீராங்கனை விமானப்படை விடுதிகளில் (Barracks) வசிக்க வேண்டும். அவர்களுக்கு மரச்சாமான்களுடன் கூடிய தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். ஒற்றை விமான வீரருக்கான உணவுக் கொடுப்பனவு மெஸ்ஸுக்கு (Mess) வழங்கப்படும்.

ஓ. திருமணமான விமான வீரர் / வீராங்கனைக்கு, வசதி இருப்பின் திருமண குடியிருப்பு வழங்கப்படலாம். வாடகை மீளப் பெறுதல் பொதுச் சேவை விதிகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும்.

ஔ. அனைத்து விமான வீரர் / வீராங்கனைகளும் எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பகுதிக்கும் கடமை அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படக் கூடியவர்களாக இருப்பார்கள்.

க. அனைத்து விமான வீரர் / வீராங்கனைகளும் இலங்கை விமானப்படைச் சட்டம் மற்றும் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் உத்தரவுகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

10. **நியமன நிபந்தனைகள் (Terms of Engagement):**

அ. நிரந்தர விமான வீரர் மற்றும் வீராங்கனைகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிரந்தர விமானப்படையின் பதவிகளின் மூன்றாம் வகுப்பில் இணைக்கப்படுவார்கள். அவர்கள் மொத்தம் பன்னிரண்டு (12) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். இதில் எட்டு (08) ஆண்டுகள் இடையறாது செயற்பட வேண்டும். மேலும், தேவையானபோது அழைக்கப்படும் போது நிரந்தர விமானப்படை (Reserve) இல் கூடுதலாக நான்கு (04) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டியுள்ளது. எட்டு (08) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின், தகுதியான விமான வீரர்/வீராங்கனைகளுக்கு மேலதிக சேவை நீட்டிப்பு வாய்ப்பு வழங்கப்படலாம். இது இலங்கை விமானப்படை தளபதியின் விருப்ப அதிகாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

ஆ. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இல் Aircraftsman/Aircraftswoman தரத்தின் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் ஐந்து (05) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். ஐந்து (05) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின்னர், தகுதியானவர்களுக்கு இலங்கை விமானப்படை தளபதியின் விருப்பப்படி மேலதிக சேவையை நீட்டிக்க வாய்ப்பு உள்ளது.

இ. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தரத்தின் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் இரண்டு (02) ஆண்டுகள் சேவை செய்ய வேண்டும். இரண்டு (02) ஆண்டுகள் சேவையை நிறைவு செய்த பின்னர், தகுதியானவர்களுக்கு இலங்கை விமானப்படை தளபதியின் விருப்பப்படி மேலதிக சேவையை நீட்டிக்க வாய்ப்பு உள்ளது.

11. அதிகாரபூர்வ மொழித் தேவைகள்: தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே இயற்றப்பட்ட அல்லது எதிர்காலத்தில் இயற்றப்படக்கூடிய விதிமுறைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும். குறிப்பாக, 1956 ஆம் ஆண்டின் அதிகாரபூர்வ மொழிகள் சட்டம் எண் 33 இன் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேவைகளை பின்பற்ற வேண்டும்.

12. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

அ. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொடுப்பனவுகளுடன் கூடிய ஒருங்கிணைந்த சம்பளங்கள், சம்பந்தப்பட்ட பதவியின் ஆரம்ப நிலை (initial step) என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

| *பதவி நிலைகள்* | *அடிப்படை சம்பளம்* | *மொத்த நிலையான கொடுப்பனவுகள்* | *நிகர சம்பளம்* |
|---|---|---|---|
| விமான கலைஞர் | 46,922.00 | 22,150.00 | 69,072.00 |
| மூத்த விமான கலைஞர் | 48,290.00 | 22,150.00 | 70,440.00 |
| கார்ப்பரல் (படைப்பிரிவு மேலாளர் நிலை) | 49,658.00 | 22,150.00 | 71,808.00 |

**குறிப்பு**: திருமணமான வெளியில் வசிக்கும் பணியாளர்கள் சுமார் ரூ. 30,000.00 அளவிலான உணவுகொடுப்பனவுக்கும், பொருந்தும் வீட்டு வாடகை உச்சவரம்புக்கும் உரிமையுடையவர்கள்.

ஆ. ஓய்வூதியம் / கிராசுட்டி (Gratuities): 1981 ஆம் ஆண்டு விமானப்படை ஓய்வூதியம் மற்றும் கிராசுட்டி விதிமுறைச் சட்டம் மற்றும் அவ்வப்போது திருத்தப்படுவதற்கேற்ப செலுத்தப்படும். அனைத்து விமானப்படை ஆண் / பெண் பணியாளர்களும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு பங்களிப்பாளர்களாக உள்ளனர். பங்களிப்பு விகிதங்கள் 1970 ஆம் ஆண்டு விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்ட விதிமுறைகளின் படி அமையும்.

13. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்:**

அ. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தின் அனைத்து பிரிவுகளையும் கீழே குறிப்பிடப்பட்ட வடிவமைப்பின்படி சரியாகவும் ஒழுங்காகவும் நிரப்பி, பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்: முதன்மை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை தொழிற்பயிற்சி பள்ளி, எகல, கொட்டுகொட"இவ்விண்ணப்பம் 2026, யூன் 30 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் "நிரந்தர / தொண்டர் விமானப்படை ஆண் / பெண் பணியாளர்களுக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply என்ற இணையத்தளம் மூலமும் அனுப்ப முடியும். மூடும் திகதிக்குப் பிறகு இலங்கை விமானப்படை, கொட்டுகொடவில் பெறப்படும் விண்ணப்பங்கள், இந்த அறிவிப்பின் தேவைகளுக்கு ஏற்ப இல்லாதவை மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாதவை பரிசீலிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்க சேவை / கூட்டுத்தாபனங்கள் / வாரியங்கள் / சிவில் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்ப தாரர்கள் தங்களது விண்ணப்பங்களை துறைத் தலைவர்கள் / கூட்டுத்தாபனங்கள் / வாரியங்கள் / சிவில் நிறுவனங்கள் மூலமாக அனுப்ப வேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்டால் அந்த விண்ணப்பதாரரை விடுவிக்கப்படும் என உறுதிப்படுத்தும் சான்றிதழையும் இணைத்திருக்க வேண்டும்.

ஆ. இணைய வசதி உள்ள விண்ணப்பதாரர்கள் www.airforce.lk/joinus/apply என்ற இணையத்தளம் மூலம் தங்களது விண்ணப்பங்களை அனுப்பலாம். இணைய வசதி இல்லாத விண்ணப்பதாரர்கள் மேலே 14 (a) பத்தியில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் தங்களது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

இ. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது அல்லது கேட்கப்படும் போது, விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங் களின் மூலப் பிரதிகளையும் சான்றளிக்கப்பட்ட புகைப்பட நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்:

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கல்வி விதிமுறைகளுக்காக வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படாது).
(2) தேசிய ஆளடையாள அட்டை.
(3) விண்ணப்பிக்கப்பட்ட தொழிலுக்கு தேவையான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளை உறுதிப்படுத்தும் மூலச் சான்றிதழ்கள்.
(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்ப பயிற்சி மற்றும் / அல்லது அனுபவச் சான்றிதழ்கள் (உள்ளிருந்தால்).
(5) சமீபத்திய இரண்டு (06 மாதங்களுக்குள் பெறப்பட்ட) நடத்தைச் சான்றிதழ்கள். இதில் ஒன்று கடைசியாக கல்வி கற்ற பள்ளியின் முதல்வரிடமிருந்து மற்றும் மற்றொன்று விண்ணப்பதாரரை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அறிந்த பொறுப்புள்ள நபரிடமிருந்து அல்லது தற்போதைய வேலைவாய்ப்பாளரிடமிருந்து (வேலைவில் இருந்தால்) பெறப்பட்டிருக்க வேண்டும்.

(6) விளையாட்டு மற்றும் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளுக்கான ஆதாரச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள்.

(7) ஆறு (06) மாதங்களுக்குள் வழங்கப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்.

(8) பள்ளி விட்டு வெளியேறும் சான்றிதழ்.

(9) கோப்பு குறியுடன் கூடிய ஒரு சாதாரண கோப்பு (plain folder).

(10) கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்ட 2 x 2 ½ அங்குல அளவுடைய இரண்டு நிறப் புகைப்படங்கள்.

ஈ. கேட்டபோது தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் படமாட்டாது.

உ. விண்ணப்பப்படிவத்துடன் எந்த ஆவணங்களையோ அல்லது மூலச் சான்றிதழ்களின் பிரதிகளையோ இணைக்கக் கூடாது.

ஊ. விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் எந்த மூலச் சான்றிதழ்களின் இழப்பிற்கும் விமானப்படை பொறுப்பாக இருக்காது.

எ. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி, உயரம், வயது, மார்பு அளவு போன்ற அடிப்படை தேவைகளின் அடிப்படையில் ஆரம்ப நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள். தவறான தகவல்களை வழங்கிய விண்ணப்பதாரர்கள் ஆரம்பச் சரிபார்ப்பில் நிராகரிக்கப்படுவார்கள்.

14. மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடையே ஆரம்பத் தேர்வுகள் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் விமானப்படைத் தளபதியால் நிர்ணயிக்கப்படும் மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு தகுதியானதாக கருதப்படும் விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த செலவில் விமானப்படை ஆட்சேர்ப்பு குழுவின் முன் நேர்முகத் தேர்விற்கு வருகை தர வேண்டும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு இடம், தேதி மற்றும் நேரம் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும்.

15. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு நேர்முகத் தேர்விற்கும் அழைக்கப்படும் போது தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும். தேசிய ஆளடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் பிற அடையாள ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய ஆளடையாள அட்டை இல்லாமல் சேவையில் இணைக்கப்படமாட்டார்.

16. தேர்வு செய்யப்படும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை விமானப்படையின் மருத்துவ மற்றும் உடல் தகுதி தரநிலைகளின்படி மருத்துவ பரிசோதனை மற்றும் உடல் தகுதி சோதனையை தேர்வு செயல்முறையின் போது மேற்கொள்ள வேண்டும்.

17. இந்த நேர்முகத் தேர்வுகள் மற்றும் சோதனைகளில் பெறப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

18. எந்தவொரு நபரும் ஒரு விண்ணப்பதாரரை பரிந்துரைக்க விரும்பினால், அவர் ஒரு சான்றிதழ் வழங்குவதன் மூலம் பரிந்துரைக்க வேண்டும். எந்தவொரு வகையான வலியுறுத்தல் (canvassing) அல்லது விண்ணப்பதாரரின் தேர்வை பாதிக்க முயற்சிப்பதும் அந்த விண்ணப்பதாரர் தகுதியிழப்பிற்கு காரணமாகும்.

19. சேவைக்குத் தகுதியற்றதாக கருதப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான அறிவிப்பு வழங்கப்படமாட்டாது.

**(விபீ எதிரிசிங்ஹ)**
WWV, RWP, RSP and three Bars, USP
fundu (china), psc, qhi,
எயார் மார்ஷல்,
விமானப்படை தளபதி.

தலைமையகம், இலங்கை விமானப்படை,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,
இல 594, ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டை.

| அலுவலக தேவைக்காக |
|---|

**இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில்.................பிரிவில் ஆண் / பெண் வான்படை வீரர் / வீராங்கனைக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :- ...............................................................................................................................................
(இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் தேதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு):- ...................................................................................
...........................................................................................................................................................................

3. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-...........................................................................................................................

4. நிரந்தர முகவரி :-.......................................................................................................................................................

5. அஞ்சல் முகவரி :-........................................................................................................................................................

6. பிறந்த திகதி :-..........................................................................................................................................................
(வயது முதலாம் குழு 2026, ஓகத்து 01 ஆம் திகதி / இரண்டாம் குழு 2026, திசெம்பர் 01 ஆம் திகதி நிலவரப்படி)

| விண்ணப்பிக்கும் குழு | 2026 ஆம் ஆண்டு முதலாம் குழு / 2026 ஆம் ஆண்டு இரண்டாம் குழு |
|---|---|
| வயது | வருடம்............ மாதம்........... நாள்............. |

7. உயரம் :- சென்றி மீற்றரில் ..........................................................(.அடி...........அங்குலம்....................)

8. மார்பு அளவு:- அங்குலம்....................

9. நிறை :- கிலோ கிராம் ....................

10. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம்:-.........................................................................................

11. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள வான்படை முகாம் ..........................................................................................

12. மாவட்டம்:- .................................................................................................................................................................

13. தேர்தற் தொகுதி :-.......................................................................................................................................................

14. கிராம அலுவலர் பிரிவு :-..............................................................................................................................

15. தொலைபேசி இலக்கம் :-............................................................ Whatsapp இலக்கம்- ................................................
E - Mail முகவரி:-... ...................................................................................

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா :-.........................................................................................

17. பால் : ஆண் / பெண்

18. பாடசாலை பற்றிய விபரங்கள்........................................................................................................................
...........................................................................................................................................................................

19. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள்

| *பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள்* | *பரீட்சை* | *ஆண்டு மற்றும் சுட்டிலக்கம்* | *சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட)* | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா./ த.) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த. (உ./த.) | | | |
| | | | | |
| | | | | |
| | தொழில் தகைமைகள் வேறு | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் -

21. பாடசாலை இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள்.-

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *தொழிலின் தன்மை* | *சேவைக்காலப்பகுதி* | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

22. பெற்றோர் பற்றிய விபரங்கள் -

| *முழுப்பெயர்* | *ஆளடையாள அட்டை இலக்கம்* | *தொழில்* | | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|---|
| | | *முன்பு* | *தற்போதைய* | |
| தாய் | | | | |
| தந்தை | | | | |
| சகோதர/சகோதரிகள் : | | | | |
| | | | | |
| | | | | |

23. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையிலோ அல்லது ஏனைய ஆயுத படையிலோ சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் அல்லது சேவையில் இருந்து விலகி இருந்தால் விலகிய முறையினை குறிப்பிடுக.(சட்டபூர்வமாக அல்லது சட்டத்திற்கு புறம்பாக)

| *நிலை* | *பெயர்* | *பிரிவு / துறை* | *தற்போதைய விபரம்* |
|---|---|---|---|
| | | | |

24. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் - (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| *தொடர் இல.* | *விபரம்* | *பாடசாலை* | *மாகாணம்* | *தேசிய* | *சர்வதேச* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

25. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.)

26. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை -

27. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக.

29. இதற்கு முன்னர் அரசாங்கத்திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம்

30. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் -

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

31. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை -

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் எட்டியவரையில் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

திகதி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்ணப்பதாரரின் கையொப்பம்

32. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :–

அ. இலங்கை விமானப்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 31 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இவருக்கு நான் பெற்றோர் /பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன் -

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்தில் இலங்கை குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திரும்பக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்.

..................................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

திகதி :..........................................................................................................
பெயர் : (பெரிய எழுத்துக்களில்) .............................................................
முகவரி : ......................................................................................................

..............................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி :..........................................................................................................
பெயர் : (பெரிய எழுத்துக்களில்) .............................................................
முகவரி : ......................................................................................................

................................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி :..........................................................................................................
பெயர் : (பெரிய எழுத்துக்களில்) .............................................................
முகவரி : ......................................................................................................

06 - 237/3

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2026

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தில் உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி பதவிக்கு இந்த அறிவித்தலின் 02 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| 01. உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி | 01 |

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி: 2026.07.20

(01) **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை:**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே வணிக கப்பற்றுறை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரி வெற்றிடம் நிலவும் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கும் நடைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளது.

(02) **தேவையான தகைமைகள்:**

(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்:**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | *அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|
| உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல் அல்லது சட்டம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். | தொடர்புடைய துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் மேலதிக / விசேட தகைமையாகக் கருதப்படும். |

(ii) **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப் பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியிலான ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) **வயதெல்லை** :
21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(02) **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

i. இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

ii. விண்ணப்பிக்கும் மொழிமூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப் பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

(04) **சம்பள அளவுத் திட்டம் :**

MN 4-2025 - ரூபா 53,060.00 -10 x 800 - 11 x 1190-10 x 1320 - 5 x 1350 - ரூபா 94,100.00

(05) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br><br>I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து/நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல் அல்லது சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டம்.<br><br>II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து/நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல் அல்லது சட்டம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா.<br><br>- (ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 20<br><br>10 | 20 |
| 02 | **அனுபவம்**<br><br>கப்பற்றுறையுடன் தொடர்புடைய அரச / பகுதியளவு அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் சமமான அல்லது உயர் பதவியொன்றில் பணியாற்றி பெற்றுக்கொண்ட அனுபவ காலத்திற்காக<br><br>- ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம், ஆகக் கூடுதலாக 25 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்கு கூடுதலான மற்றும் 01 வருடத்திற்குக் குறைவான - 02 புள்ளிகள் | | 25 |
| 03 | சர்வதேச சட்டம், கப்பற்றுறை சட்டம், கப்பற்றுறை அலுவல்கள் தொடர்பான சர்வதேச சாசனம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் | 20 | 20 |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 04 | ஆங்கிலம் அல்லது தமிழ் / சிங்கள மொழிக்காக பெற்றுள்ள கல்வித் தகைமைகள்<br><br>அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட<br>- உயர் டிப்ளோமா பாடநெறிக்காக<br>- டிப்ளோமா பாடநெறிக்காக<br>- சான்றிதழ் பாடநெறிக்காக<br><br>**உச்சளவு 10 புள்ளிகள்** | 10<br>07<br>04 | 10 |
| 05 | **கணினி அறிவு :**<br><br>தகவல் தொழில்நுட்பம் / கணினி முறைமைகள் / கணினிப் பயன்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட -<br><br>I. ஆறு (06) மாத காலம் அல்லது அதற்குக் கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br><br>II. மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்குக் குறைவான முழுநேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி.<br><br>III. மூன்று (03) மாத காலத்திற்குக் குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறி. | 20<br><br>13<br><br>06 | 20 |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைக்காக | | 05 |
| | **மொத்தம்** | | 100 |

(06) **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

(i) சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை காண்பிப்பதற்காக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

ஆ. செல்லபடியாகும் கடவுச்சீட்டு.

(07) **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :**

(i) விண்ணப்பங்களை 2026…………. ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகம்,
வணிகக் கப்பற்றுறை செயலகம்,
இல. 79,
தொழில்நுட்ப சந்தி,
மருதானை வீதி,
கொழும்பு 10.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவையுடைய தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தமது கையெழுத்துக்கலால் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி பதவிக்கு விண்ணப்பித்தல்” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரால் / சமாதான நீதவான் ஒருவரால் / சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரால்/ சட்டத்தரணி ஒருவரால்/பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரால்/ முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் /அல்லது 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 82,150.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றுகின்ற திணைக்களத்தின் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(08) தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரியவரின் தங்களது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அதற்குரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(09) வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

……………………………………………
வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகம்

வணிகக் கப்பற்றுறை செயலகம்,
இல. 79,
தொழில்நுட்ப சந்தி,
மருதானை வீதி,
கொழும்பு 10,
2026, யூன் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறை செயலகத்தில் உதவி கப்பல் போக்குவரத்து அதிகாரி

## பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்

| பெட்டியினுள் உரிய மொழி மூலத்திற்கான இலக்கத்தினை எழுதவும் |
|---|

(சிங்களம்-1/தமிழ்-2/ஆங்கிலம்-3)

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

குறிப்பு: விண்ணப்பப் படிவத்தின் மொழிமூலம் மாற்றப்படமுடியாது.

01. விண்ணப்பதாரியின் பெயர்:

i. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : …………………………
(உ.ம் - GUNAWARDHANA. H. M. S. K.(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

ii. முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி):……………………………………………….
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

iii. முழுப் பெயர்: ………………………………………………………………….
(சிங்களத்தில்/தமிழில்)

02. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:

i. அலுவலக முகவரி: ……………………………………………………………….
தொலைபேசி இலக்கம்: …………………………………………………………..

ii. நிரந்தர முகவரி:………………………………………………………………….
தொலைபேசி இலக்கம்:…………………………………………………………….
கையடக்கத் தொலைபேசி இலக்கம்:……………………………………………

03. பிறந்த திகதி:
ஆண்டு:……………………. மாதம்:……………….. திகதி:………………………………

04. 2024 இல் (விண்ணப்ப முடிவுத் திகதியில்) வயது:……………………………………….
வருடங்கள் :……………………. மாதங்கள் :……………….. நாட்கள் :………………………………

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:…………………………………………………….

06. பால்:…………………………………………..

07. விவாக நிலை:……………………………….

08. கல்வித் தகைமை :

| *தகைமை* | *தகைமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாட விதானம்* | *தரம்* | *நிறுவனத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. தொழிற் தகைமைகள் :

| *தகைமை* | *தகைமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாடப் பிரிவு* | *தரம்* | *நிறுவகத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் :

அ. பெருநிறுவன(கார்பரேட்) அனுபவம்

| *நிறுவகம்* | *பதவி* | *பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக* | *சேவைக் காலம்* | *குறிப்புகள்* |
|---|---|---|---|---|
| | | | | |

11. கணினி தொடர்பிலான தேர்ச்சி
    i. பட்டம் :………………………………………………………
    ii. டிப்ளோமா :…………………………………………………..
    iii. சான்றிதழ்ப் பாடநெறி :………………………………………

12. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ……………… ….................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவை யெனவும் அனைத்துப் பகுதிகளும் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்றவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது அபேட்சகத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இத்தவறு தெரியவந்தால் பணிநீக்கத்திற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

……………………… ……………………………
திகதி கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கைபொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………….. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் ………………….. ஆந் திகதி என் முன்னிலையில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :
பதவி :
முகவரி :
திகதி :

14. திணைக்களத் தலைவரின் பரிந்துரை

(அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி …………………………… தற்போது ………………… பதவியில் கடமையாற்றுகிறாரெனவும் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் துல்லியமானவையெனவும், அவருடைய வேலை மற்றும் வரவு திருப்திகரமானதெனவும் அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லையெனவும் உறுதிப்படுத்துகிறேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது.

……………………. ………………………………….

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலட்சினை இடவும்)

06 - 218/2

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, மே 29.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| குருநாகல் | மஹவ | பஹல விசிதெக கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வன்னி ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | இப்பாகமுவ | இஹல விசிதெக மேற்கு கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹிரியால ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | அலவ்வ | தம்பதெனி உடுகஹ தெற்கு அலவ்வ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |
| குருநாகல் | உடுபத்தாவ | கடுகம்பளை ஹத்பத்துவ பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

06-227

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பக்காரர்களிடம் இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவிப்பின் இறுதியில் உள்ள மாதிரி படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த.பெ. இல. 13, கெட்டம்பே, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்” எனும் வாசகம் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.07.10 ஆம் திகதி ஆகும்.

குறிப்பு: விண்ணப்பம் அல்லது அது தொடர்புடைய கடிதம் தபாலில் காணாமற் போதல் அல்லது தாமதமாகுதல் போன்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை தாமதப்படுத்துவதால் ஏற்படும் அனைத்து இழப்புகளையும் விண்ணப்பக்காரரே ஏற்க வேண்டும். மேலும், அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பக்காரரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### 01. ஆட்சேர்ப்பு முறை

i. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர்கள் மத்தியில், அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, உச்சப் புள்ளிகளை பெற்றுக் கொள்கின்ற விண்ணப்பதாரி நிலவும் வெற்றிடம் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அங்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள (இலக்கம் 08 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் செயன்முறைக்கு அமைய தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

ii. நியமனம் செயல்வலுப் பெறும் திகதி அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

### 02. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

i. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டமுறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு நீர் உட்படுத்தப்படுகின்றீர். மேலும் நீர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தாங்கள் காலத்துக்கு காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. தெரிவு செய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு நியமனம் செய்யப்படுவர்.

iii. பதவியின் பொருட்டு நியமனம் பெறும் விண்ணப்பக்காரர்கள் 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கு அமையவும் உரிய மட்டத்தில் மொழி தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களது ஆட்சேர்ப்புச் செய்யப்டுகின்ற மொழி மூலமானது நீங்கள் பட்டப்படிப்பை மேற்கொண்ட மொழி மூலமாகும். அத்துடன் அரசாங்க மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் அரச மொழியில் III ஆவது மட்டத்தில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

iv. சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிப் பிரமாணத்திற்கும் மற்றும் திணைக்களத்தின் ஏனைய விதிகளுக்கும் இந்நியமனம் உட்படுத்தப்படும்.

03. **சம்பளத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் உப அட்டவணை II இற்கு அமைய இந்த பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 82,150.00 – 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 - ரூ. 195,970.00 (SL-1-2025) ஆகும். உமக்கு சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய அதன் உப அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமையவாகும்.

04. **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டம் தொடர்பான சட்டப் பட்டம் ஒன்றினை பெற்றிருக்க வேண்டும் அல்லது உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப் பிரமானம் செய்திருக்க வேண்டும்.

05. **அனுபவம் :**

I. உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் சட்டத்தரணியாக 3 வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்பான தொழில் ரீதியான அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (உயிர்ப்பான தொழில்முறை அனுபவத்தை நிரூபிக்க சிரேஷ்ட வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் ஒன்று அவசியமாகும். தற்போது அரச, அரை அரசு, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கம் சார்பற்ற ஒழுங்கமைப்பு (பதிவு இலக்கம் கடித தலைப்பில் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்), நிறுவனம் ஒன்றில் சேவை புரிகின்ற ஒருவராயின் அந்த நிறுவனத்தின் தலைவரிடமிருந்து அந்த அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஒரு கடிதம் வைத்திருப்பது அவசியமாகும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் வழங்கப்பட்ட திகதி, சேவை புரிந்த காலம் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சனை போன்றன தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனம் ஒன்றில் சட்டத்துறையில் 3 வருடங்களுக்கு குறையாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளில் உரிய அனுபவத்தை பெற்றிருத்தல்

அ) வழக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா திணைக்களத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல் நடவடிக்கைகள்.
ஆ) உடன்படிக்கைகள் மற்றும் தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்.
இ) உரிய சட்ட ஒழுங்குமுறை தொடர்பான நாளாந்த நடவடிக்கைகள்.
ஈ) சட்டவரைவுகள் மற்றும் சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
உ) வெவ்வேறு சட்டபூர்வ நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற சட்டம் அல்லது நீதித்துறை செயற்பாடுகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்.

06. **வயது எல்லை :**

விண்ணப்பகாரர்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளர் பணிமனையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பிறப்பு அத்தாட்ச்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்).

07. **உடற்தகைமை :**

i. சகல விண்ணப்பகாரரும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். உடல் ஆரோக்கிய நிலையை மருத்துவ பரிசோதனை அறிக்கையின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

08. **ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பக்காரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பக்காரர் சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (அது தொடர்பாக விண்ணப்பக்காரர் வதிவிடப் பிரதேச கிராம அலுவலரினால் ஆறு மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட DS 04 சான்றிதழ் மற்றும் பிறிதொரு நற்சான்றிதழுடனும் உறுதிப்படுத்த வேண்டும்).
iii. விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்தன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்கான சகல தகைமைகளையும் சகல முறைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. **நேர்முகப் பரீட்சை :**

தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை (புள்ளிகள் வழங்கப்படும்).

| *பரிசோதித்து புள்ளிகள் வழங்கப்படும் துறை* | *உச்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|
| **9.1 மேலதிகக் கல்வித் தகைமைகள்**<br><br>9.1.1 பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்ற சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டம் (20 புள்ளிகள்)<br><br>9.1.2 அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறைக்கு உரியதாக பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது பட்டப் பின்படிப்பு சட்ட டிப்ளோமா (ஒரு வருடத்திற்கு குறையாத) (ஒரு வருடத்திற்கான புள்ளி 05 x 04 = 20 புள்ளிகள்)<br><br>9.1.3 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் பெற்ற நான்கு வருட பட்டப் படிப்பு<br><br>9.1.3.1. முதலாம் வகுப்பில் சித்தியடைதல் - 10 புள்ளிகள்<br>9.1.3.2 இரண்டாம் வகுப்பு மேல் நிலையில் சித்தியடைதல் - 07 புள்ளிகள்<br>9.1.3.2 இரண்டாம் வகுப்பு கீழ் நிலையில் சித்தியடைதல் - 05 புள்ளிகள்<br><br>(உச்சமாக ஒரு தகைமையின் பொருட்டு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்). | 20 |
| **9.2 மேலதிக தொழிற் தகைமை**<br><br>9.2.1 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட டிப்ளோமாவின் பொருட்டு (ஒரு டிப்ளோமாவிற்கு 10 புள்ளிகள் என்ற அடிப்படையில்)<br><br>9.2.2 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய ஆறு மாதம் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான டிப்ளோமாவின் பொருட்டு (ஒரு டிப்ளோமாவிற்கு 05 புள்ளிகள் என்ற அடிப்படையில்)<br><br>9.2.3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனம் ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சட்டத்துறைக்கு உரிய மூன்று மாதம் அல்லது மூன்று மாதத்திற்கு மேற்பட்ட மற்றும் 06 மாதத்திற்கு குறைவான சான்றிதழ் பாடநெறியின் பொருட்டு (ஒரு பாடநெறிக்கு 03 புள்ளிகள் என்ற அடிப்படையில்)<br><br>*கவனிக்க* : (இலக்கம் 9.1 இன் கீழ் புள்ளிகள் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தவிர ஏனைய சான்றிதழ்களுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 |

| *பரிசோதித்து புள்ளிகள் வழங்கப்படும் துறை* | *உச்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|
| 9.2.4 தனியார் துறையில்/அரை அரசு துறையில் நிறுவன செயலாளராகப் பணியாற்றியிருத்தல் - முழுமையான ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள்<br><br>9.2.5 ஒரு நோட்டரிசாக பணியாற்றியிருத்தல் - முழுமையான ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள்<br><br>9.2.6 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் விரிவுரையாளராக/வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியிருத்தல் - முழுமையான ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள்<br><br>9.2.7 அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பாயத்தில் பதவி வகித்து/ உறுப்பினராக செயல்பட்டு வந்திருத்தல் - முழுமையான ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் | |
| **9.3 மேலதிக அனுபவம்**<br><br>9.3.1 விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் அடிப்படை தகைமைகளை பெற்றுக் கொள்வதன் பொருட்டு தேவையான 03 வருட அனுபவம் தவிர்ந்த (முதல் மூன்று வருடத்திற்கு மேலாக பெற்றுள்ள அனுபவத்தின் பொருட்டு வருடத்திற்கு 05 புள்ளிகள் என்றடிப்படையில்)<br><br>9.3.2 ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் என்ற வீதத்தில்; உச்சப் புள்ளிகள் 30<br><br>9.3.3. ஆறு மாதத்திற்கு மேல் ஒரு வருடத்திற்கு குறைவு - 02 புள்ளிகள்<br><br>(தொடரான தொழில்முறை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சிரேஷ்ட வழக்கறிஞரிடமிருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் அவசியமாகும். தற்போது வேறொரு அரச, அரை அரச, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அரச சாரா நிறுவனத்தில் (பதிவு இலக்கத்தை கடித தலைப்பில் குறிப்பிட வேண்டும்), பணியாற்றியிருக்கும் ஒருவராயின் அந்த அனுபவத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு குறித்த அந்த நிறுவன தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதம் அவசியமாகும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற அந்த ஆவணங்களில் வழங்கப்பட்ட திகதி, சேவை காலம் மற்றும் அதிகாரப்பூர்வ முத்திரை ஆகியவை தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.) | 30 |
| **9.4 மொழித் தேர்ச்சி**<br><br>9.4.1 ஆங்கில மொழி மூலம் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டம்/பட்டப்பின் சட்ட அறிஞர் பட்டம்/சட்ட அறிஞர் பட்டம்/ஏனைய பட்டம் - (15 புள்ளிகள்)<br>(தொடர்பான மொழி மூலம் விரிவான பெறுபேற்று குறிப்பில் குறிப்பிடப்படல் வேண்டும்)<br><br>9.4.2 பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆங்கில மொழி தொடர்பாக 01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு (10 புள்ளிகள்)<br><br>9.4.3 பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து ஆங்கில மொழி தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் பாடநெறியின் பொருட்டு<br>- 06 மாதம்/720 மணித்தியாலம் (7 புள்ளிகள்)<br>- 03 மாதம்/360 மணித்தியாலம் ( 5 புள்ளிகள்)<br><br>( உச்ச தகைமைகள் பொருட்டு மாத்திரம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும்). | |

| *பரிசோதித்து புள்ளிகள் வழங்கப்படும் துறை* | *உச்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|
| **9.5 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு**<br><br>9.5.1 பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமொன்று தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமொன்றாக கற்றிருப்பது தொடர்பாக (15 புள்ளிகள்)<br><br>9.5.2 அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் கற்கைநெறியின் பொருட்டு<br>9.5.2.1 06 மாதம்/720 மணித்தியாலம் (10 புள்ளிகள்)<br>9.5.2.2 03 மாதம்/360 மணித்தியாலம் (05 புள்ளிகள்)<br><br>(உச்ச தகைமைகள் பொருட்டு மாத்திரம் புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும்). | 15 |
| **9.6 நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை**<br><br>பொது அறிவு மற்றும் அறிவாற்றல்<br>சட்டத்துறையில் நவீன போக்குகள் தொடர்பான அறிவு<br>தெளிவாக கருத்துக்களை முன் வைக்கும் ஆற்றல் மற்றும் ஆளுமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

*குறிப்பு* : தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற சான்றிதழ்களுக்கு உரிய கால எல்லைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டு இல்லாது விடின் அத்தகைய சான்றிதழ்களுக்கு உரிய கால எல்லையை உரிய நிறுவனத்தின் ஊடாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிப்பது விண்ணப்பகாரரது பொறுப்பாகும். அவ்வாறு கால எல்லையை குறிப்பிடப்படாது உள்ள மற்றும் கால எல்லையை உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**10. விண்ணப்பகாரரது ஆளடையாளம்**

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற விண்ணப்பகாரர்கள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் தாமே உரியவாறு உண்மைப் பிரதி என சான்று படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தை சான்றுபடுத்தும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஆட்பதிவுகள் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை
2. ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுச் சீட்டு
3. ஏற்றுக் கொள்ளத்தக்க சாரதி அனுமதிபத்திரம்

**11. விண்ணப்பங்கள் சமர்பிக்கப்படும் முறை**

i. விண்ணப்பங்கள் 2026.07.10 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
த.பெ.இலக்கம், 13, கெட்டம்பே, பேராதனை.

ii. சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. விண்ணப்பகாரர் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதலாவது பக்கத்தில் 1.1 முதல் 3.1 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 3.2 முதல் 4.7 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 5 முதல் 8 வரையிலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டு தமது சொந்த கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

iii. விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்” எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பகாரரது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமான ஆணையாளர்/சட்டத்தரணி/நொத்தாரிஸ்/முப்படைகளில் அதிகார உத்தியோகத்தர் அல்லது ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேல் மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்துதல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது சேவை நிலைய திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

vi. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

vii. விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைபாடுகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**12. பிழையான தகவல்களை வழங்குதல்.**

நீங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் போலியாக அல்லது பிழை என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் உங்களது விண்ணப்பத் தகைமை நிராகரிக்கப்படும்.

ஏதும் போலியாக அல்லது பிழை என ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்கு உரியவாறான செயற்பாடுகளுக்கு நீங்கள் உட்படுத்தப்பட்டு சேவையில் நின்றும் நீக்கப்படுவீர்.

13. ஏனைய ஒழுங்குவிதிகள்

i. இந்த வர்த்தமானி அறிவிப்பின் விதிகளால் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கே உரித்தானதாகும்.

ii. பதவி வெற்றிடத்தை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பான உரிமை அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கே உரித்தாகும்.

iii. இந்த வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையே ஏதேனும் பொருந்தாத் தன்மை அல்லது முரண்பாடு ஏதும் எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

iv. விண்ணப்பக்காரர் ஒருவர் தகைமையற்றவர் என தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

v. விண்ணப்பக்காரர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் போலி என தெரிந்தும் சமர்ப்பித்துள்ளமை தெரியவந்தால், அவ்வாறின்றேல் ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தினை அவர்/அவள் வேனுமென்றே மறைத்திருந்தால் அவர்/அவள் சேவையில் நின்றும் நீக்கப்படலாம்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்

செயலாளர்,
விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு

2026, யூன் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு உரிய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு சட்ட உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்தல்**

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கின்ற மொழிக்குரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக.

சிங்களம் -2/ தமிழ்-3/ ஆங்கிலம் -4 மொழிமூலம்

குறிப்பு – விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது. விண்ணப்பிக்கின்ற மொழிமூலத்திலேயே விண்ணப்பப்படிவத்தை நிரப்பவும்.

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதிசெல்வி):

(ii) முழுப் பெயர் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி :

(ஆங்கில பேரெழுத்துக்களில்) உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| SILVA | | A | B | C |

(ii) முதெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பேரெழுத்துக்களில்) :

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

04. (i) நிரந்தர முகவரி:

(ii) அஞ்சல் முகவரி :
ஆங்கிலத்தில்

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

(முகவரியில் மாற்றம் ஏதும் ஏற்பட்டால், உடனடியாக அது தொடர்பில் அறியத்தரவும்)

05. நிரந்தர வதிவிடத்திற்கு உரிய :

(i) உள்ளூராட்சி நிறுவனம் : ……………………
(ii) மாவட்டம் : ……………………

06. தொலைபேசி இலக்கம்: நிரந்தர தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

கையடக்க தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

07. பிறந்த திகதி : ஆண்டு : ..................... மாதம் : ...................... திகதி : ......................

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் : ........... மாதங்கள் : ........ நாட்கள் : ............

08. அ) நீர் இலங்கை பிரசையா : .......................

ஆ) இனம் (சிங்களவர்/இலங்கைத்தமிழர்/ இந்தியத் தமிழர்/ முஸ்லிம்/ ஏனைய) : ...........................

09. அ) ஆண்/பெண் : ஆண் 0
பெண் 1 ☐

ஆ) விவாகமானவர்/ விவாகமாகாதவர்/விதவை: விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2 ☐
விதவை - 3

10. உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமானம் செய்த திகதி :........................................

11. விண்ணப்பம் கோரல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகுதிகளுடன் தொடர்புடைய பின்வரும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

11.1 சட்டப் பட்டப்படிப்பு சான்றிதழின்/உச்ச நீதிமன்ற வழக்கறிஞராகச் சத்தியப்பிரமானம் செய்த சான்றிதழின் நிழற்படப் பிரதி

11.2 அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள்

11.3 பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதி

11.4 செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தின் நிழற்படப் பிரதி

12. நீர் எப்போதாவது ஏதாவது குற்றத்தின் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா?
ஆம்/இல்லை

13. **விண்ணப்பக்காரரது உறுதியுரை**

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் சான்றளிக்கிறேன். இதில் உள்ள ஏதேனும் தகவல் எனது தேர்வுக்கு முன் போலியானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், நான் தகுதி நீக்கத்திற்கு ஆளாக நேரிடும் என்பதையும், நியமனத்திற்குப் பிறகு அவ்வாறு இருப்பது கண்டறியப்பட்டால், இழப்பீடு இல்லாமல் பணிநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு

நீதிமன்றத்தாலும் நான் எந்தவொரு குற்றவியல் குற்றத்திற்கும் தண்டனை பெறவில்லை என்பதை எனது வழக்கமான கையொப்பத்துடன் இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

.................................
விண்ணப்பக்காரரது ஒப்பம்

திகதி : ...................

14. **விண்ணப்பக்காரரது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி.............................................................. என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

திகதி : ...................

................................................................
கையொப்பத்தை சான்றுப்படுத்துபவரின் ஒப்பம்

முழுப் பெயர்:
பதவி:
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தவும்)

*(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)*

15. **திணைக்கள/நிறுவனத் தலைவரினது பரிந்துரை:**

மேற்கண்ட விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ................................. என்பவர் இத்திணைக்களத்தில்/ ……………………..மாகாண சபையில் ................................... பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் என்றும், விண்ணப்பத்தில் உள்ள தகவல்கள் அவரது பெயர்வழிக் கோப்பின்படி சரியானவை என்றும் நான் சான்றளிக்கிறேன். இந்த உத்தியோகத்தர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் இந்தத் திணைக்களத்தில்/மாகாண அரசாங்க சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

(பொருத்தமற்ற சொற்களைக் வெட்டிவிடுக)

................................................
திணைக்கள/நிறுவனத் தலைவர்
உத்தியோகபூர்வ இலச்சினை

திகதி : ..........................

முகவரி : .......................

06 - 278

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சேவையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

1.0 மேற்படி சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக, இலக்கம் 2444/21 மற்றும் 2025.07.08 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூன்றாவது திருத்தம் மற்றும் இலக்கம் 2493/ 61 மற்றும் 2026.06.19 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவையின் நான்காவது திருத்தத்தின் விதிகளுக்கு இணங்க, முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2026, செத்தெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சையானது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், கோரப்பட்ட நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, அவ்விண்ணப்பதாரிகள் தங்களின் இரண்டாவது விருப்பாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு வழிப்படுத்தப்படுவர். மேலும், முன்மொழியப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது பெரும்பாலான நகரங்களிலோ பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doents.lk இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Applications - Recruitment Exams / E.B. Exams” ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறையின் மூலம் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் 2026, யூன் மாதம் 23 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, யூலை மாதம் 17 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து இரண்டு (02) அச்சிடப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்விரண்டு பிரதிகளினதும் உரிய பகுதிகளைக் கையெழுத்தினால் பூரணப்படுத்தி, விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்து, வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அதில் ஒரு பிரதியைத் தத்தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும். மற்றைய பிரதியைத் தேவையான போது சமர்ப்பிப்பதற்காகத் தமது பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைக்கடைசித்திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எத்தகைய அசௌகரியங் களையும் விண்ணப்பதாரியே எதிர்கொள்ள வேண்டும்.

2.0 I. பரீட்சை அபேட்சகத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிமுறைகளை மீறும்பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

II. இப்பரீட்சைக்கு, இலங்கை ஆசிரியர் சேவையிலும் மாகாண அரசாங்க சேவைகளின் ஆசிரியர் சேவையிலும் உள்ள, கீழே 12.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

III. இப் பரீட்சையில் விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் தோற்றுவார்களாயின், அது தொடர்பில் விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், தொடர்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

3.0 **பரீட்சைக் கட்டணம்:**

இவ் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது முதல் தடவையாக நடாத்தப்படுவதனால், இதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

4.0 **விண்ணப்பப்படிவங்களை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல்:**

நிகழ்நிலை மூலமான பரீட்சை விண்ணப்பப்படிவமானது ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியானது செல்லுபடியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / நிராகரிக்கப்பட்டதா என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரிகையை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ்வறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எத்தகைய திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையக் கூடிய வகையில் தத்தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அத்துடன், பரீட்சார்த்திகள் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு இரு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த சந்தர்ப்பத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

6.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன் அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் வெளியிடப்படும்.

பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப் பத்திரங்கள் இன்றிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்ட உடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது தொடர்பான விபரம் இணையத்தள அறிவித்தல் ஒன்றின் ஊடாக அல்லது விண்ணப்பதாரிகளுக்குக் குறுஞ்செய்தி மூலமாகக் காண்பிக்கப்படும். தமக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் சந்தர்ப்பத்தில், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியினை தங்களிடம் வைத்திருப்பது பிரயோசமானதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தை பரிசீலித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.0 ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என்றோ அல்லது அதற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டலுக்கான தகுதியை பூர்த்தி செய்துள்ளார் என்றோ ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

8.0 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமான வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9.0 பரீட்சை விண்ணப்பதாரிகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய வகையில், திணைக்களத் தலைவர்களினால் தேவையானவாறு கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். இதற்காகப் பிரயாணக் கட்டணங்கள் வழங்கப்படமாட்டாது.

11.0 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். அவற்றுள், தங்களது நியமனப் பாடத்திற்குரிய மொழி மூலமாக அல்லது ஏதேனும் ஒரு அரச கரும மொழி மூலமாகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றுகின்ற ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

12.0 இலங்கை ஆசிரியர் சேவையிலும் மாகாண அரசாங்க சேவைகளின் ஆசிரியர் சேவையிலும் தரம் 3 வகுப்பு II, தரம் 3 வகுப்பு I மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமானி பட்டத் தகைமை அடிப்படையில் தரம் 2-II இற்கு உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள், உரிய தரத்திற்கு நியமனம் பெற்று மூன்று (3) வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் I வது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, இதுவரையில் அடுத்த பதவியுயர்வுக்கு முன்னர் I வது வினைத்திறன்காண் தடைதாண்டலைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பதவியுயர்வுகளைப் பெற்றுள்ள ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்களும், அவ்வாறு பதவியுயர்வுகள் வழங்கப்படும் போது குறிப்பிடப்பட்டவாறும் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைத் தேவையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.0 **பரீட்சை நடைமுறை :**

13.1 **வினாக்களின் கட்டமைப்பு :**

கல்வி அமைச்சினால் e-thaksalawa உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள, கீழே 13.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுயகற்றல் இதவடிவங்கள்தொடர்பான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பரீட்சை தயாரிக்கப்படும். இவ் வினைத்திறன்காண் தடை தாண்டலுக்குரிய எழுத்துப் பரீட்சையானது, தொடர்புடைய அனைத்துத் இதவடிவங்களையும் உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு நடாத்தப்படும்.

| *கட்டமைப்பு* | *வினாத்தாளின் அமைப்பு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| I வது வினாத்தாள் | பல்தேர்வு வினா | 01 மணித்தியாலம் | 40 |
| II வது வினாத்தாள் | கட்டமைக்கப்பட்ட வினா அல்லது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் | 02 மணித்தியாலங்கள் | 60 |

*குறிப்பு 1* – I வது ஆனது வினாத்தாள் ஆக விடயம்சார் வினாத்தாள் I வழங்கப்படும் என்பதுடன், அது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும், அத்துடன், II ஆவது வினாத்தாள் ஆக விடயம்சார் அறிவு வினாத்தாள் II வழங்கப்படும். அது 04 பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். அவ்விரண்டு வினாத்தாள்களினதும் உள்ளடங்கியுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும்.

13.2 பரீட்சைக்கான பாடத்திட்டம்

| *வினைத்திறன்காண் தடைதாண்டல்* | *தொடர்புடைய இதவடிவம்* |
|---|---|
| I வது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 1. ஆசிரியர் தேர்ச்சிச் சட்டகம் மற்றும் ஆசிரியரின் தொழில் வாண்மைத்துவம்) |
| | 2. கற்பித்தல் செயன்முறை |
| | 3. கல்விக்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் |
| | 4. கல்வி தொடர்பான சட்டம் |

**குறிப்பு 2** - சித்தியடைவதற்காக மேலே 13.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II ஆகியவற்றின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்குமாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.

14.0 **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்** :- பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடைமுறை பின்வருமாறு அமையும்.

I. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களினதும் (தேசிய மற்றும் மாகாண) பெறுபேறுகள், மாகாண மட்டங்களில் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இரண்டு பிரதிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

II. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தகைய பரீட்சைப் பெறுபேற்று ஆவணங்களின் இரண்டு பிரதிகளில் ஒரு பிரதியானது; தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பரீட்சை பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில், மாகாண கல்வி அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்

III. அதேபோன்று, அனைத்து ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களினதும் நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவியுயர்வுகளுக்கும் ஏதுவாக அமையும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை பெறுபேறுகளை, பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக விண்ணப்பதாரிகளும் பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் பெறுபேற்றுப் பத்திரத்தை விண்ணப்பதாரி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அந்தப் பெறுபேற்றுப் பத்திரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சு / மாகாண கல்விப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் உரிய உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க வேண்டும்.

IV. அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாகாண/வலயக் கல்வி அதிகாரிகளினால் உரிய ஆசிரியர்களின் நியமனங்களை நிரந்தரப்படுத்துவதற்கும் மற்றும் தரங்களுக்கான பதவி உயர்வுகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

V. பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலும், கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல,
2026, யூன் 17.

**அட்டவணை I**

| *மாவட்டம்/ நகரம்* | *மாவட்டம்/ நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

06 - 328

## கமத்தொழில், கால் நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## கறுவா அபிவிருத்தித் திணைக்களம்

## கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III ற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்தப் போட்டிப் பரீட்சை - 2026

01. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறையின் விதிகளுக்கு அமைய கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III ற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்தப் போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தில் "Our Services"' என்பதன் கீழுள்ள "Online Applications Recruitment Exams/ E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை (online) மூலம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026.07.20 ஆம் திகதி ஆகும்

குறிப்பு: நிகழ்நிலை மூலம் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் 2026.06.22 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்படுவதுடன் 2026.07.20 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு முடிவடையும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூல சோதனையின் பெறுபேறுகளுக்கமைய திறன்களின் அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், எழுத்து மூலப்பரீட்சையை சித்தியடைந்த மொத்த மதிப்பெண்களின் ஒழுங்கு முறைக்கமைய ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையை பொது நேர்முகப் பரிட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமை யுள்ளோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 24ஆகும்.

03. (அ) நியமனம் செய்யும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியை நியமன அதிகாரியினால் உறுதிப்படுத்தப்படும். வெற்றிடங்களில் ஏதேனும் எண்ணிக்கை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யா திருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(ஆ) அரச சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இலக்கம் PSC/ EST/07-01-18/01/2024 மற்றும் 2025.10.10 ஆந் திகதியிட்ட அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறையில் விதிக்கப் பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அந்த விதிமுறைக்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவையில் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக் குழு நடைமுறை விதிகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு நியமனஞ் செய்யப்படுவர்.

(இ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் குறைந்த பட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும். எவ்வாறெனினும் நியமன அதிகாரியினால் முடிவு செய்யப்படும் ஏதேனும் விசேட காரணங்கள் மீது அக் காலம் முடிவடைவதற்கு முன் ஒரு உத்தியோகத்தரை இட மாற்றம் செய்வதற்கு தேவைப்படுமாயின், நியமன அதிகாரியிடம் அதற்கான அதிகாரம் உண்டு.

(ஈ) இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III ற்கு ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதி யிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய தங்களால் ஏற்புடையவாறு அரச கரும மொழி தேர்ச்சியை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சேவையின் தேவைக்கேற்ப வழக்கமான கடமை நேரத்திற்கு அப்பாற்பட்டும் கடமை புரிய வேண்டியதுடன் சேவைக்கான தேவையின் அடிப்படையில் செய்யப்படும் உடனடி அறிவிப்பின் பேரில் தொடர்ச்சியாக சில நாட்கள் வெளிப்புறமாக இருக்கின்ற வசதிகளின் கீழ் கடமை புரிய உட்பட்டுள்ளீர் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

04. 2025.03.25 திகதியிட்ட இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் MN- 04-2025 சம்பளப் பிரிவு இப் பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கு ஏற்புடைய மாதாந்த சம்பள அளவு ரூபா 53,060-10 × 800-11 × 1,190-10 × 1,320-5 × 1,350 – ரூபா 94,100.00 ஆகும். நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் ஒருவருக்கு அச் சம்பளம் உரித்தாவது 2027.01.01 ஆம் திகதியிலிருந்தாகும். அதுபோலவே நியமனம் நடைமுறையாகும் திகதியிலிருந்து இச் சுற்றறிக்கையில் III ஆம் அட்டவணையின் ஏற்பாடுகளின் படி சம்பளம் வழங்கப்படும்.

05. இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்து உடையது.

06. இந்த பதவிக்கு ஏற்புடைய பணிகள் -

- கறுவா தொடர்பான ஆராய்ச்சிகளை திட்டமிடுதல், தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், ஆராய்ச்சி அட்டைகளைத் தயாரித்தல் மற்றும் முன்வைப்பதற்கு உதவி புரிதல்.
- ஆய்வக மற்றும் கள மட்டத்திலான பரிசோதனை சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவி புரிதல்
- பயிற்சி வேலைத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்த உதவுதல்
- கறுவாத் துறைக்கு ஏற்புடைய தரவு முறைமைகளைப் பேணிச்செல்லல்
- சான்றுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கள கணக்காய்வுகளுக்கு உதவுதல்.
- கறுவா கைத்தொழிலுடன் தொடர்பான தரப்பினர்களை பதிவுசெய்வதற்கு உதவுதல்.
- வணிக ஆலோசனை விவகாரங்களுக்காக உதவி புரிதல்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாதாந்த, மும்மாத, அரையாண்டு, வருடாந்த மற்றும் ஏனைய அறிக்கைகளை மேற்பார்வை அதிகாரியிடம் முன்வைத்தல்
- திணைக்களத்தின் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைபடுத்த உதவுதல்.
- மேற்பார்வை அதிகாரியினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு விதிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

07. **தகைமைகள் :**

7.1. **கல்வித் தகைமைகள்:**

விவசாயம், உயிரியல்/ உயிர் அறிவியல், பயன்பாட்டு உயிரியல், விவசாய வணிக முகாமைத்துவம், பசுமைத் தொழில்நுட்பம், ஏற்றுமதி விவசாயம் அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளின் கீழ்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசு பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் (நான்கு வருட) பௌரவப் பட்டம்.

அல்லது

இலங்கைப் பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட (நான்கு வருட) கௌரவப் பட்டம்

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 25A பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட (நான்கு வருட) கௌரவப் பட்டம் பெற்று இருத்தல்

7.2 **உடல் ரீதியான தகைமைகள் :**

அனைத்து பரீட்சார்த்திகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும் பதவியின் பணிக்கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

7.3 **ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு 21 வயதிற்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2005.07.20ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 1991.07.20ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியை அடைந்தவர்களுக்கு மட்டும் இதற்காக விண்ணப்பிக்கும் தகைமைகள் உண்டு)

(இ) விண்ணப்பதாரர் சிறந்த நன்நடத்தை உள்ள வராக இருத்தல் வேண்டும்.

**கவனத்திற்கொள்ள வேண்டும்:** அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் 2026.07.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

08. **பரீட்சை நடைமுறைகள்:**

(அ) இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தங்களுக்கு ஏற்புடைய ஒரு மொழி மூலத்தை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டியதுடன் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்காகவும் அந்த மொழிமூலத்திலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

| *தொடர் இலக்கம்* | *பாடங்கள்* | *புள்ளி கள்* | *காலம்* |
|---|---|---|---|
| 01 | உளச்சார்பு | 100 | 01 மணித் தியாலம் |
| 02 | பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் பாடரீதியான பரீட்சை) | 100 | 02 மணித்தி யாலம் |

(i) உளச்சார்பு
விண்ணப்பதாரரின் சிந்திக்கும் தர்க்கத் திறன், மாற்றுப்பதிவு, அர்த்த விளக்கம், தொடர்புகளைக் காணுதல், மொழி பெயர்ப்பு, பிரச்சினைகளை தீர்க்கும் திறன், காரண விளைவு தொடர்புகளை புரிந்துக்கொள்ளல், எதிர்வு கூறல், தகவல் அமைப்பு, மாதிரியை அடையாளம் காணுதல், அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் ஆகிய திறமைகளை அளவிடுவதற்காக தயாரிக்கப் படும் பல்தேர்வு வினாத்தாளொன்றை வழங்கப் படுவதுடன், பரீட்சையில் சித்தியடைவதற்காக வினாப்பத்திரத்திற்கான மொத்த புள்ளிகள் 100 இல், குறைந்த பட்சம் 40 புள்ளிகளோ 40 ற்கு மேலான புள்ளிகளோ பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) பொதுப் பரீட்சை
(தொழில்நுட்ப மற்றும் பாடரீதியான பரீட்சை)

i. இலங்கைப் பொருளாதார அபிவிருத்திக் காக விவசாயத் துறையின் பங்களிப்பு
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு
- வேலைவாய்ப்பு
- விவசாயிகளின் சேவைகளை வழங்கும் பல்வேறு நிறுவனங்கள்.

ii. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை தொடர்பான பொது அறிவு.
- கறுவா பயிர்ச் செய்கையின் வரலாறு
- கறுவா பயிர்ச் செய்கையின் பரவல், மொத்த உற்பத்தி, பயிர்ச் செய்கையின் நிலப்பரப்பு

iii. இலங்கை விவசாய காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு

iv. மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து
- மண்ணின் பௌதீக மற்றும் இரசாயன அறிகுறிகள்
- தாவர ஊட்டச்சத்து தொடர்பான அறிவு
- தாவர நோய்க்காரணிகள் மற்றும் பீடைகள் பற்றிய அறிவு
- விவசாய இரசாயனங்கள் தொடர் பான அறிவு
- இலங்கை மண் வகைகள் தொடர் பான எளிய அறிவு

v. விவசாயப் பரவல்
- விவசாயப்பரவல் மற்றும் தொடர் பாடல் முறைகள்

vi. நவீன தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாய நவீன தொழில்நுட்ப முறைகள்
- மரபணு தொழில்நுட்பம்
- நானோ தொழில்நுட்பம்
- பசுமைக்குடில் தொழில்நுட்பம்
- புவிசார் இடங்காட்டி முறைமை (GPS - Global Positioning System)
- ட்ரோன் தொழில்நுட்பம்
- காலநிலை மாற்றங்களை குறைத்தல் மற்றும் தகவலமைத்தல்
- திறன் விவசாயம் (Smart Agriculture)

vii. தாவர உடலியல்
- தாவர ஒளிச்சேர்க்கை
- நீராவிப்போக்கு
- சுவாசம்
- தாவர நீர் உறவு

தொடர்பான அறிவை சோதிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட மாதிரி கட்டுரை வடிவிலான விடைகளை எதிர்பார்க்கும் வினாத்தாளொன்றை வழங்கப்படுவதுடன், சித்தியடைவதற்காக வினாத் தாளுக்கான மொத்த 100 புள்ளிகளில் குறைந்தது 40 புள்ளிகளோ 40 க்கு மேற்பட்ட புள்ளிகளோ பெற்றுக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு –** கடமை பொறுப்புக்களுக்கான பரிட்சார்த்திகளின் தகைமை மற்றும் திறன்களை பரிசோதிப்பதன் பொருட்டு இவ் வினாத்தால்கள் தயாரிக்கப்படும்.

(iii) **பரீட்சைப் பெறுபேறுகள்** : கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்ததன் பின் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள்/மொத்தப் புள்ளிகளை குறிப்பிட்ட பெறுபேறு அட்டவணையொன்று பரீட்சையில் கலந்துக் கொண்ட அனைத்து விண்ணப்பதாரருக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தின் ஊடாக வழங்குவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 09. பொது நேர்முகப் பரீட்சை :

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்காக மேலே குறிப்பிட்ட இரண்டு வினாத்தாள்களில் ஒவ்வொன்றுக்கும் 40 அல்லது 40 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற வேண்டும். அதற்கமைய, எழுத்து மூலப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெறுவர்.

(i) எழுத்துப் பரீட்சைக்கான இரண்டு பாடங்களில் குறைந்த பட்ச சித்தியடையும் புள்ளிகளை கடந்த மற்றும் இரண்டு பாடங்களுக்குமான மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்குமுறைக்கமைய ஆட்சேர்ப்புச் செய்ய எண்ணுகின்ற வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

(ii) **பொது நேர்முகப் பரீட்சை** : விண்ணப்பதாரர்கள் நியமனமொன்றைப் பெறுவதற்கு அறிவித்தலில் 07 ஆம் பிரிவிற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்களா என்பதை பரிசோதிப்பதும் விண்ணப்பதாரர்களால் சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களில் குறிப்பிடும் தகவல்களின் உண்மைத்தன்மையை பரிசோதிப்பதும் களக் கடமைகளுக்காக தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை பரிசோதிப்பதும் பொது நேர்முகப் பரீட்சையின் போது செய்யப்படும்.

(iii) பொது நேர்முகப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மட்டும் நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iv) பொது நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

## 10. நியமனமொன்றிற்காக தேர்ந்தெடுத்தல்:

அறிவித்தலில் 02 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்புடையவாறு எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளுக்கமைய எண்ணுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையை திறன் ஒழுங்குமுறைக்கு பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைத்து, அதன் மூலம் சிதிதியடையும் விண்ணப்பதாரர்கள் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் இணைந்த உத்தியோகத்தர் சேவைப் பிரிவில் கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு நியமனம் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டும் தங்கி செய்யப்படும் ஆட்சேர்புகளின் போது பகிரங்கப்படுத்தப்பட்ட வெற்றிடங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கை சமப் புள்ளிகளை பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகள் இருக்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுப்பதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறையை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானம் செய்யப்படலாம். இந்த தெரிவு செய்யும் நடைமுறை பின்வருமாறு

திறன் ஒழுங்குமுறைக்கமைய வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் போது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட எண்ணிக்கையொன்று சம புள்ளிகளைப் பெற்ற தகுதி பெற்ற பரிட்சார்த்திகள் இருக்கின்றார்கள் என்றால் மற்றும் அந்த வெற்றிடங்களையும் பூர்த்தி செய்யும் சேவைத் தேவையொன்று அப்போது இருப்பதாயின், அவ்வாறு சமப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரிட்சார்திகளுள் மேலதிக தெரிவுசெய்தலை செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் செய்யப்படலாம். இந்த தெரிவு செய்யும் நடைமுறை பின்வருமாறு இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

I. பரீட்சார்த்திகளின் திறமைகளை மதிப்பீடு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை
II. திறன் அடிப்படையிலான நேர்முகப்பரீட்சை

எழுத்து மூலச் சோதனை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும்.

நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

இந்த தேர்வு நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பான மேலதிக தகவல்களை www.psc.gov.lk இல் அரசாங்க சேவைகள் ஆணைக் குழு உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

முகப்புப் பக்கம் → பதிவிறக்கங்கள் → நடைமுறைகள் → விசேட தேர்வு நடைமுறைகள்

11. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள் :**

(i) விண்ணப்பத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக துல்லியமான தகவல்களை வழங்கல் வேண்டும். இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிமுறைகளுக்கமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் அதற்கு தோற்றுவதற்கு தகாதவர்கள் என்று தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போதே அல்லது பரீட்சைக்குப் பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்யக்கூடும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானதென பிற்காலத்தில் தெரியவந்தால் அவரால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு காரணத்தை மூடிமறைத்துள்ளாரென வெளிப் படையானால் அவருக்கு நியமனத்தை வழங்கு வது தொடர்பில் இனி மேலும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் இப் பரீட்சை காரணமாக்கிக்கொண்டு வழங்கியுள்ள நியமனத்தை இரத்து செய்ய அல்லது அரசாங்க சேவையில் இருந்து பணி நீக்கம் செய்யப்படவும் உட்படுவார்.

12. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். இணையவழி (online) பரீட்சை விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் பரீட்சைக்கு விண்ணப் பிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட பொது அறிவுறுத்தல்கள் அட்டையை (Common Instructions) பதிவிறக்கம் செய்து வாசித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களை சரியாக பின்பற்ற வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்களை எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரால் இணையவழி மூலம் அனுப்பப்பட்ட வன் பிரதி செல்லுபடியான விண்ணப்பப்படிவம் என்று ஏற்றுக் கொள்ளப் பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை முறைமைக்குள் உட்பிரவேசிக்க பயன் படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) மூலமோ மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையில் வழங்கும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)

ii. ஏந்தவொரு வங்கி பற்று அட்டை மூலமும் (Any Bank Debit Card)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையில் அல்லது “Flex'' செயலி மூலமும் (Bank of Ceylon Online Banking Method/ or Flex App)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமும் (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு** – மேற்கூறிய முறைகளின் மூலம் கட்டணம் எவ்வாறு செலுத்த வேண்டும் என்பதற்கான அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு ஏற்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தல் களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(iii) கட்டணம் கிடைக்கப் பெற்றது என்பதை குறுஞ் செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (e-mail) செய்தியின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்திற்கான மொத்த பணத்தையும் செலுத்த வேண்டியதுடன் குறைவாகவோ கூடுதலாகவோ பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள விண்ணப்பப் படிவங்களை நிராகரிக்கப்படும். மேல் குறிப் பிட்ட கட்டண முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறை பாடுகள் தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பொறுப்பு கூற மாட்டாது.

(iv) எக் காரணத்தைக்கொண்டும் பரீட்சைக் கட்ட ணத்தை மீள செலுத்தப்படவோ அக் கட்டணங்கள் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப் படவோ மாட்டாது.

(v) விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் இறுதி திகதி வரை தாமதம் செய்வதால் ஏற்படு;ம் பாதகமான நிலைகளை விண்ணப்பதாரர்களால் பொறுப் பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) வர்த்தமானியில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் எனற ஊகத்தின் அடிப்படையில் உரியவாறு பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன் எல்லா விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை மூலம் சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணையவழியில் மட்டுமே பரீட்சை அனுமதி அட்டைகளை வெளியிடப்படும்.

(vii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பதிரத்தை வெளியிட்ட உடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் அதனைக் குறிப் பிட்டவாறு ஒரு அறிவித்தலை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் பிரசுரிக்கப்படுவதுடன் விண்ணப்ப தாரர்களையும் ஒரு குறுஞ் செய்தியின் மூலம் அறிவிக்கப்படும். தங்களது அனுமதி அட்டை யைப் பெறாத ஒரு விண்ணப்பதாரர் இருப்பின் இணைய அறிவித்தலில் குறிப்பிட்ட முறையில் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைத்தல் கிளையில் வினவ வேண்டும்.

அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரர் தாங்கள் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்று இணைய அறிவித்தலில் குறிப்பிடும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுதல் பயனுள்ள தாகும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தால் வினவும் எந்தவொருதகவலையும் உறுதிபடுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக பெற்ற பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியையும் தங்களிடம் வைத்தக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

(viii) அனுமதி அட்டையை பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தை தொடர்பு கொண்டு விண்ணப் பத்திற்கு ஏற்பவாறு திருத்தங்களை செய்துக் கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்களுக்காக செய்யப்படும் கோரிக்கைகளை கவனத்திற் கொள்ளமாட்டாது.

பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையொப்பத்தை சான்றுபடுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனமொன்றால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மூலமும் அவ்வாராகாத விண்ணப்பதாரர் ஒருவர் தங்களது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை தலைவர்/ ஓய்வுபெற்ற அலுவலர் / பிரிவின் கிராம அலுவலர் / சமாதான நீதவான் /சத்திய பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்தி பெற்ற நொத்தாரிசு /முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விஹாரையின் விஹாராதிபதி அல்லது தலைமை பிக்கு அவர்கள் அல்லது பிற மதத்தின் வணக்கஸ்தளத்தை பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க பதவியைக்கொண்ட ஒருவரினால் சான்றுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

(x) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு விண்ணப்ப தாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவற்றை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டணைக்கு அவர் உள்ளாக நேரிடும். பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவு இறுதி முடிவாகும்.

13. **பரீட்சைக்கு அனுமதித்தல்** :

(அ) பரீட்சையில் தோற்றும் விண்ணப்பதாரிகளால் தங்களது கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொண்ட அனுமதி அட்டையை முதன் முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் பரீட்சை நாளில் அங்கு பரீட்சை நிலைய பொறுப்பான மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சையில் தோற்றும் அனுமதி கிடைக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தங்களுக்கு குறித்தொதுக் கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். எல்லா பரீட்சார்த்தியும் கடைபிடிக்க வேண்டிய வட்டத் தொகுப்பொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு –** பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையை வெளியிடுதல் அவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

14. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

பரீட்சை பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்துக்குள் தோற்றப்படும் அனைத்து பாடத்திற்காகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய அடையாளட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை– சாரதி அனுமதிப் பத்திரம்.

பரீட்சை பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப் படுத்த கூடியவாறு முகத்தை மற்றும் மின்னணு தொடர்பு சாதனங்களை அணியாமை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத் துக்குள் உட்பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தங்களது அடையாளத்தை உறுதிபடுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15. தற்போது அரசாங்கம்/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தங்களது தனியார் கோப்புக்குள் உள்ளடக்குவதற்காக நிறுவன தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டியதுடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது நிறுவனத்தலைவரால் சான்றுப்படுத் தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

16. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு காரணம் இருப்பின் அது தொடர்பாக கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் முடிவு செய்யப்படும்.

17. இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முறண்பாடு ஏற்பட்டால், அப்போது சிங்கள மொழி வாசகமே மேலோங்குதல் வேண்டும்.

18. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஒரு காரணம் தொடர்பாகவோ இந்த ஆட்சேர்பு செய்யும் நடைமுறைக்குள் ஏதேனும் சிக்கலான நிலை ஏற்பட்டாலோ அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் முடிவு இறுதி முடிவாகும்

எல்.எம்.ஜே.கே. லிந்தர,
பணிப்பாளர் நாயகம்.

கறுவா அபிவிருத்தித் திணைக்களம்,
குணரத்ன வீரகோன் மாவத்தை,
பொரகந்த, கரந்தெனிய,
2026, யூன் மாதம் 09.

06-230

---

## விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் பொறியியல் உதவியாளர் சேவையின் III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2026

விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

❖ விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" என்பதன் கீழுள்ள "Online Applications – Recruitmen Exams/E.B.Exams" இனூடாக பிரசுரிக்கப் பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2026.06.22 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2026.07.20 ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

❖ ஏற்கனவே, அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணபத்தின் பிரதியொன்றை தமது பிரத்தியேகக் கோவையினுள் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் வழங்குதல் வேண்டும் என்பதோடு, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் பிரதியுடன், சேவையை நிரூபிப்பதற்கான கடிதத்தையும் சமர்ப் பித்தல் வேண்டும்.

1.0 **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள்:**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட்சேர்க்கும் தரம்* |
|---|---|---|---|
| 11 | பொறியியல் உதவியாளர் (Engineering Assistant) | 102 | III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும். இருப் பினும் நேரடியாக ஆட்சேர்க்கப்படும் உத்தி யோகத்தர்களுக்கு முதல் 06 மாதங்களுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சேவையுடன் பயிற்சியளிக்கப்படும். |

1.1 **பதவிக்குரிய கடமைகளின் தன்மை :**

திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க நீர்ப்பாசனப் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் ஒப்படைக்கப்படும் கீழே காணப்படும் பணிகள் :-

- புதிய அல்லது தற்போதுள்ள புவியீர்ப்பு / உயர்த்தல் / சிறிய நீர்ப்பாசனம், வெள்ளம் மற்றும் உவர் நீர் தடுப்புத் திட்டங்களில் நிர்மாணித்தல் /விஸ்தரித்தல் / புனர்நிர்மாணம் செய்தல் / செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் நீர் கட்டுப்பாட்டை உற்பத்தித் திறனுடன் செயற்படுத்தும் வேலைக்காக ஆரம்பகட்ட புலனாய்வுகள், முழுமையான புலனாய்வுகளுக்கு அமைவாக நில அளவை மற்றும் மட்டம் எடுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிவில் பொறியியல் நிர்மாணம் மற்றும் திட்டமிடல், வடிவமைப்பு, உரிய நில அளவைப் படம் தயாரித்தல், கணிய அளவீடு, விலை மதிப்பீடு செய்தல், மதிப்பீடு தயாரித்தல்.
- விபரக் குறிப்புகளுக்கிணங்க பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல், வேலை மேற்பார்வை, ஒழுங்கமைப்புத் தரக்கட்டுப்பாடு.
- வெளிக்கள/வேலைத் தளங்களில் உள்ள இயந்திர உபகரணங்கள், எரிபொருள், பொருட்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் உரிய கணக்கீடு செய்தல்.
- வெளிக்கள / பிரிவுகளுக்குரிய பொறுப்பு உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள திட்ட முகாமையாளர்களாக நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல், வேலைப் பரிசோதகர்களின் / தொழில்நுட்ப உதவியாளர்களின், வெளிக்கள உதவியாளர்களின் மற்றும் தொழிலாளர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- நீர்ப்பாசன கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டங்களால் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சம்பந்தமாக வெளிக்கள நடவடிக்கை மற்றும் ஒப்படைக்கப்படும் ஏனைய பொறியியல்சார் துணை தொழிற் பணிகள்.

2.0 **ஆட்சேர்க்கும் முறை** :

2.1 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்கு சமனான விண்ணப்பதாரர்களை சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப்பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.3 நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் சம்மதம் பெற்றுக்கொண்ட பின்னர் பரீட்சைக்கு சமூகமளித்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்டரீதியில் அல்லது நிகல்நிலையில் (Online) பெறுபேறுகள் வெளியிடப்படும்.

2.4 நேரடியாக ஆட்சேர்த்தல்

i. நேரடியாக ஆட்சேர்த்தலின் கீழ் ஆட்சேர்க்கப்படும் பயிலுநர்களுக்கு கோட்பாடு மற்றும் நடைமுறைப்பயிற்சியும் (Practical) உள்ளடக்கப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும் ஆறு (06) மாத கால பயிற்சியின் பின்னர் நடாத்தப்படும் கோட்பாடு மற்றும் நடைமுறைப்பயிற்சி பரீட்சையில் சித்தியடையும் திறமையின் அடிப்படையில் மூப்புநிலை தீர்மானிக்கப்படும்.

ii. இந்த பயிலுநர்கள் பெற்றுக்கொண்ட ஒரு வருட களப் பயிற்சியானது நீர்ப்பாசனத் திணைக் களத்தில் வெற்றிகரமாக பெற்றிருப்பின் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் பயிலுநர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆறு (06) மாத கால பயிற்சிக் காலத்திலிருந்து விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் அனைவரும் நடைமுறைப்பயிற்சி (Practical) பரீட்சையில் கலந்துகொள்ள வேண்டும்.

3.0 **சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் உப பிரிவு II இற்கிணங்க பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 52250.00 – 10x800 – 11x1190 – 10x1320 -10x 1350 – ரூ. 100040.00 (MN 3 – 2025) ஆகும்.

4.0 **சேவைத் தொகுதி :** மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் / தொழிநுட்பம்

4.1 தரம் - III ஆம் தரம்
II ஆம் தரம்
I ஆம் தரம்
விசேட தரம்

4.2 **பதவியின் தன்மை** : இந்த நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. உரிய ஓய்வூதிய திட்டம் பற்றி அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். விதவைகள் அநாதை ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்பு நிதி அறவிடப்படும்.

5.0 **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

5.1. நேரடியாக ஆட்சேர்த்தலின் கீழ் ஆட்சேர்க்கப்படும் பயிலுநர்களுக்கு III ஆம் தரத்தில் பொறியியல் உதவியாளர் பதவியில் முறையான நியமனத்தைப் பெற்ற தினத்திலிருந்து 03 வருடங்கள் தகுதிகாண் காலத்திற்குட்பட்டதுடன் அக்காலப்பகுதியினுள் முதலாவது தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.2. பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இற்கிணங்க மற்றும் அதனோடு இணைந்த சுற்றறிக்கைகளுக்கிணங்க உரிய மட்டத்தில் மொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும்.

5.3. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையான ஏற்பாடுகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

5.4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் எந்த பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

6.0 **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்தினத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு அதிக மாகாமலும் இருக்க வேண்டும்.

7.0 **தேவையான தகைமைகள் :**

7.1. **கல்வித் தகைமைகள் :**

7.1.1. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் /ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

பழைய பாடத்திட்டத்திற்கமைவாக கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞான / தூய கணிதம்/ பிரயோகக் கணிதம் மற்றும் இரசாயனவியல் விஞ்ஞானம் துறைக்குரிய பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் உயர் கணிதம் (Higher Mathamatics) அல்லது / இணைந்த கணிதம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் இரசாயனவியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல்.

7.2 **தொழில்சார் தகைமைகள் :**

I. கல்கமுவ, கொத்மலை நீர்ப்பாசன நீர்ப்பாசன பயிற்சி நிறுவகமொன்றில் நீர்ப்பாசன பொறி யியல் டிப்ளோமா கற்கை நெறியை மேற் கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

II. மொரட்டுவை கட்டுபெத்த பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்பவியல் (சிவில் பொறியியல்) டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

III. மட்டக்குளிய இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா(சிவில் பொறியியல்) கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

IV. கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் டிப்ளோமா(சிவில் பொறியியல்) கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

V. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

VI. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக் குழுவினால் வழங்கப்படும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கு சமமான கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

இந்த கற்கை நெறி (NVQ) 06 ஆந் மட்டத்தின் இருத்தல் வேண்டும்.

கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருந்த போதும் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளாதுள்ள விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு அவர்கள் அந்த சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இருப்பினும் சான்றிதழினை அமுல்படுத்தும் திகதியானது விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் தினத்திற்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

7.3 **தேகாரோக்கிய தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.4 **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. ஏதேனும் ஒரு மதத்திற்குரிய மதப் போதகர் எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றவர்கள் அல்ல.
IV. சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்துத் தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

8.0 **பரீட்சையின் செயற்திட்டம் :**

இப்பரீட்சையானது பல்துறை வினாக்களைக்கொண்ட வினாப்பத்திரம் என்பதுடன் இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| *வினாப்பத்திரம் / பாடப்பரப்பு* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித்தியாலம் | 100 | 40 |

8.1 **பரீட்சைக்கான பாடப்பரப்பு** :

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீதியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை |

9.0 **விண்ணப்பிக்கும் முறை :**

9.1. இணையவழி (Online) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பப்படும் மென்பிரதி மற்றும்

செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாக/ பொறுப்பேற்கப்படவில்லை என தொகுதியினுள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் (e-mail) ஊடாக அறியத்தரப்படும். இணையவழி விண்ணபத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப் பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரம் (Instructions) இனைப் பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள். விண்ணபத்தை நிரப்பும் போது அவ் வறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு திருத்தம் செல்லுபடியாகும் ஒரு திருத்தமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிப்படும்.

9.2. விண்ணப்பதாரி பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் தமது ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, பரீட்சை தினத்தில் மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவ்வாறு ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையாகும். ஒப்பத்தை சான்றுப்படுத்திக் கொள்ளாத அனுமதி அட்டையைக் கொண்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9.3. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணம், சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு குறுஞ்செய்தியொன்றின் மூலம் அறிவித்தல் வழங்கப்படும். தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்தியாயின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் அமைப்புப் பிரிவிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரி நிற்கும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

9.4. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதல், பரீட்சைக்கு தோற்றுவதற்காக அல்லது பதவியில் அமர்த்துவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாக கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

9.5. அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்து திருத்தங்கள் செய்ய வேண்டியதாக ஏதேனும் இருந்தால் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப குறித்த திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

9.6. சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம் :**

❖ பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது இணையவழியின் ஊடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டண செலுத்துகை முறைக்கு ஏற்ப மாத்திரமே செலுத்தப்படுதல் வேண்டும்

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

ii. இணையவழி செலுத்துகை வசதியுடன் கூடிய எந்த வொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கி ஆன்லைன் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

**குறிப்பு :**

(அ) மேற்படி முறைமை மூலம் கட்டணம் செலுத்தப்படும் விதம் குறித்த அறிவுறுத் தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுஞ் செய்தி (SM S) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அல்லது அறிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற் குறிப்பிட்ட கட்டண செலுத்துகை முறை மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர் பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(இ) பரீட்சைக்கு செலுத்தப்படும் தொகை எவ்விதக் காரணமும் இன்றி மீள செலுத்தவோ அல்லது மற்றொரு பரீட் சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

11.1. பரீட்சார்த்தி / பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத் தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனு மொரு ஆவணம் மாத்திரம் செல்லுபடி யாகும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே, பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் அணியப்படவில்லை என்று உறுதிப்படுத்த முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக் காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்ப தாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனு மதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளங்காண முடியு மான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

12. **போலியான தகவல்களுக்கான தண்டனை** :

12.1. எவரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப் பத்திலும் அவரது பரீட்சார்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த் தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது என தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தால், அவ் வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

13. **பொதுவான விடயங்கள்:**

13.1. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாக நேரிடும். பரீட்சை பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

13.2. நியமிப்பு அதிகாரியால் பெறுபேறு வெளியிடு வதற்குப் பொருத்தமான திகதியறிவிக்கப்பட்ட பின்னர் எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகள் என்பவற்றைக் குறிப்பிட்டு பெறுபேறானது பரீட்சையில் பங்குபற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற வளைத்தளத்தி னூடாக வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13.3 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின் அது பற்றியும் இந்த வெற்றிடங்களை நிரப்புவது பற்றியும் அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும்.

13.4 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப் பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமே சரியானது எனக்கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

கலாநிதி எந்திரி. கித்சிறி வெலிகேபொலகே,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2026, யூன் 11.

06-258

**பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் - அத்துருகிரிய**

**உதவி தோட்ட முகாமையாளர் பயிற்சி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனம், பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபட ஆர்வமுள்ள இரு தரப்பினரினதும் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்நாட்டில் நிறுவப்பட்ட ஒரேயொரு அரசாங்க நிறுவனமாகும்.

2026/2027 கல்வியாண்டிற்கான பின்வரும் பாடநெறிக்கு க.பொ.த உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Advanced Certificate Course in Plantation Management (ACCPM) Planter Trainee Programme (உதவி தோட்ட முகாமையாளர் பயிற்சி பாடநெறி)

| | | |
|---|---|---|
| கால வரையறை | - | ஒரு வருடம் (01)<br>I கட்டம் - 06 மாத முழுநேரப் பாடநெறி<br>II கட்டம் - 06 மாத பெருந்தோட்டசார் செய்முறைப் பயிற்சி |
| மொழி | - | ஆங்கிலம் |
| பாடக் கட்டணம் | - | I கட்டத்திற்கு ரூபா 400,000.00 |
| வயதெல்லை | - | அதிகபட்ச வயதெல்லை 22 ஆண்டுகள் |

**கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் (சாதாரண பொது பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

கல்விக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கமத்தொழில் தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றை பெற்றிருத்தல்.

**விண்ணப்பிக்கும் முறை:**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்விச் சான்றிதழ்களின் நகல்களுடன், பதிவுத் தபாலில் 2026.06.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கற்கை நெறியை குறிப்பிட வேண்டும். இந்த விளம்பரம் www.nipm.gov.lk எனும் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் நிகழ்நிலை மூலமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி,
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம். டி. எச். ஜெயவர்தன மாவத்த, அத்துருகிரிய.

மேலதிக விவரங்களுக்கு
011-2770232
071-9708664

FM/TR/03

## NATIONAL INSTITUTE OF PLANTATION MANAGEMENT

## APPLICATION FOR ADMISSION

**Name of the Programme :**

**Name in Full : Mr. /Mrs./ Miss./ Dr. / Prof. (Use BLOCK LETTERS) :**

**Name with initials :**

**Permanent Address :**

**Employer :**

**Tele. No.**

**Designation :**

**Mobile No.:**

**Official address :**

**E-mail:**

**National Identity card No.:**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**Tele. No.:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Marital Status :**

**Single** ☐

**Married** ☐

**Date of Birth**

| Date | | Month | | Year | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**Fax No.:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**EDUCATIONAL QUALIFICATIONS :**

**G.C.E. (O/L) Examination**

| *Subject* | *Grade* | *Year* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**G.C.E. (A/L) Examination**

| *Subject* | *Grade* | *Year* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

**COURSE COMPLETED AT THE NIPM**

| *Course* | *Year* |
|---|---|
| | |
| | |
| | |

**PROFESSIONAL QUALIFICATIONS :**

| *Institute* | *Period* | *Qualification* | *Year* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**WORK EXPERIENCE :**

| *Organization* | *Period* | *Designation* | *Year* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**FINANCE :**

How will you finance your professional studies at the institute?

Self ☐ Sponsored ☐

If sponsored, by whom?

........................................ ........................................

Date Signature of the Sponsor

I hereby certify that the particulars furnished by me in this application are true & accurate and agree to abide by the rules and regulations governing the above course.

........................................ ........................................

Date Signature of the Applicant

**Payments Procedure for the programmes**

Payments can be made to the credit of NIPM Current Account No. 3697566 maintain at any branch of Bank of Ceylon (BOC)and the printed "Customer Deposit Slip" should be forwarded to NIPM, Athurugiriya in order to obtain official receipt for payment.(Name to be written in bank deposit slip for identification of the payee)

06-268